பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 15 வெள்ளிக்கிழமை (31.07.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 247

# வன்னி அகதிகள் குறித்து ஐ.நா. செயலர் சர்வதேசத் தலைவர்களுடன் ஆலோசனை

## வாக்குறுதிகளை நிறைவேற்ற மீண்டும் ஜனாதிபதியிடம் வலியுறுத்து





வாஷிங்ரன், ஜூலை 31

இலங்கையின் வன்னிப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களால் இடம்பெயர்ந்து வவுனியாவில் தங்கியுள்ள மக்களின் நிலைகுறித்து சர்வதேசத் தலைவர்கள் சிலருடன் தாம் ஆலோசனை நடத்தினார் என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் - கீ மூன் தெரிவித்துள்ளார்.

தாம் சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதிகளை விரைவாக அவர் நடைமுறைப் படுத்தவேண்டும் என்று ஐ.நா. செயலாளர் மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டில் காவலரண்கள், வீதித்தடைகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் -தளபதி சந்திப்பில் முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை31

குடாநாட்டில் காவலரண்கள் மற்றும் வீதித்தடைகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைக்கப்படும். பாதுகாப்புக்கு அதி முக்கியத்துவம் இல்லாத பகுதிகளில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

யாழ்.படைகளின் புதிய தளபதி மேஜர் ஜெனரல் ஜி.பி.ஆர்.டி.சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நேற்று இடம்பெற்ற பேச்சுக்களின் போது அவர் இதனை எடுத்துரைத்தார்.

அமைச்சின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற இச்சந்திப்பில் பொதுமக்களின் கஷ்டங்களைத் தீர்க்க வசதியாக 19 விடயங்களை தளபதியிடம் அமைச்சர் எடுத்துக் கூறினார்.

அவை தொடர்பாக இருவரும் விரிவாக ஆராய்ந்தனர்.

தென்மராட்சிக்கு செல்பவர்கள் மூன்று

(16ஆம் பக்கம் பார்க்க)

கல்விச்சுடர்

உள்ளே

தரம் 4

மாணவர்களுக்கான

பரீட்சை மாதிரி

வினாத்தாள்

# உச்சக்கட்டப் போர் நடந்தபோது வன்னியில் இந்தியாவின் 'றோ' அதிகாரிகள் 50 பேர் இருந்தனர்

## அந்நாடு செய்யும் உதவிகள் எமக்குப் போடும் மரணக் கயிறுகளே



கொழும்பு, ஜூலை 31

இலங்கைப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான போர் வன்னியில் உச்சக்கட்டமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் இந்தியப் புலனாய்வு நிறுவனமான 'றோ' அமைப்பின் முகவர்கள் ஐம்பது பேர் அரசுக்குத் தெரியாமல் வன்னியில் இருந்தனர் என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்திருக்கிறார்.

இருந்தபோதிலும் போர் முடிவுக்கு வரும் நிலையில் குறிப்பிட்ட 'றோ' முகவர்களின் பெயர்ப்பட்டியல்ஒன்றை அரசிடம் வழங்கிய இந்திய அதிகாரிகள், அவர்களின் பாதுகாப்பையிட்டு கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொண்டனர் எனவும், கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கில நாளேடு ஒன்றுக்கு அளித்திருக்கும் பேட்டியில் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்திருக்கின்றார்.

"இவர்கள் ஏன் வந்தார்கள்? இவை எல்லாம் இரகசியமானவையல்ல. ராஜீவ் காந்

(16ஆம் பக்கம் பார்க்க)

# முகாம்களிலுள்ள மக்களுக்கு தமிழ்நாட்டு ஆலயம் உதவி

கொழும்பு, ஜூலை 30

தமிழ்நாட்டிலுள்ள வேலூர் அம்பாள் ஆலய தர்மகர்த்தாக்கள் சபை 5 கோடி ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருள்களை வன்னி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு முதற்கட்ட அன்பளிப்பாக வழங்க உள்ளனர் எனத் தெரியவருகிறது.

அத்துடன், வேலூர் அம்பாள் ஆலய தர்மகர்த்தாக்கள் உட்பட தமிழகத்திலுள்ள ஆலயங்களின் பரிபாலன சபைகளின் தர்மகர்த்தாக்கள் வன்னி முகாம்களுக்கு வரவுள்ளார்கள் எனவும் தெரியவருகிறது. இதற்கான ஏற்பாடுகளை இலங்கை அரசு செய்து கொடுத்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# தபால் ரயில் சேவை மீண்டும் வவுனியாவரை 6 ஆம் திகதி தொடக்கம் நடைபெறும் என்கிறார் அழகப்பெரும



வவுனியா, ஜூலை 31

இப்போது மதவாச்சியுடன் நிறுத்தப்படும் இரவு நேர தபால் ரயில் சேவை மீண்டும் வவுனியா வரை எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் நடைபெறும்.

போக்குவரத்து அமைச்சல் டலஸ் அழகப்பெரும இத்தவலைத் தெரிவித்தார்.

கொழும்புக்கும் வவுனியாவுக்கு இடையில் இடம்பெற்றுவந்த இரவு தபால் ரயில் சேவையும் ஏனைய ரயில் ரயில் சேவைகளும் பாதுகாப்பு காரணங்களுக்காக 2007 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதியுடன் மதவாச்சியுடன் நிறுத்தப்பட்டிருந்தன. எனினும் 'யாழ்தேவி'

(16ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.க. பிரமுகர்கள் 18 பேர் விரைவில் அரசுடன் இணைவராம்

## தென்மாகாணசபை கலைக்கப்பட்டதும் இது நடைபெறும் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஜூலை 31

தென்மாகாணசபை கலைக்கப்பட்டதும் ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் 18 பேர் அரசுடன் இணையவுள்ளனர் என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன நேற்றுக் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு கூறினார். அவர்மேலும் கூறியவை வருமாறு:-

ஊவா மாகாணசபைத் தேர்தல் இப்போது நன்றாகச் சூடுபிடித்துள்ளது. அரசு வெற்றிபெறுவது நிச்சயம். ஆனால், ஊவா மாகாணத்தின் பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் உள்ள வளங்களை அரசு ஹம்பாந்தோட்டைக்கு எடுத்துச் செல்கின்றது என்று எதிர்க்கட்சி தெரிவிக்கின்றது.

எமது ஜனாதிபதி ஒருபோதும் அப்படிச் செய்யவில்லை, அவர் மொனராகலை மற்றும்

(16ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா அகதிகளை பராமரிக்க பாப்பரசரின் மனிதாபிமான நிதி

கொழும்பு, ஜூலை 31

உலகளாவிய ரீதியில் மனிதாபிமானப் பணிகளுக்கென்று பரிசுத்த பாப்பரசரால் ஒதுக்கப்பட்டிருக்கும் பெருந்தொகை நிதியின் ஒரு பகுதி வவுனியா முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அகதிகளின் பராமரிப்புக்கு பயன்படுத்தப்படஉள்ளது என்று தெரிய வருகிறது.

கிறிஸ்தவ மனிதாபிமான அமைப்புகளில் ஒன்றான 'கரித்தாஸ்' அரச சார்பற்ற நிறுவனம், முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அகதிகளில் 73 ஆயிரம் பேரை பராமரித்து வருகின்றது.

இந்நிலையில், இன்னும் 10 ஆயிரம் பேரை முகாமில் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு இலங்கை அரசு 'கரித்தாஸ்' நிறுவனத்திடம் கோரியுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு முதல் வெற்றி!

கொழும்பு, ஜூலை 31

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே இடம்பெற்றுவரும் ஒருநாள் போட்டித் தொடரின் முதலாவது ஆட்டத்தில் நேற்று இலங்கை அணி 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியீட்டியுள்ளது.

இரு அணிகளுக்கிடையில் இடம்பெற்ற டெஸ்ட் தொடரை அடுத்து, ஒருநாள் தொடர் ஆரம்பமாகியுள்ளது.

தம்புள்ள விளையாட்டு மைதானத்தில் இரு அணிகளுக்கிடையேயான முதலாவது ஒருநாள் ஆட்டம் நேற்று பகல் போட்டியாக இடம்பெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. இதனடிப்படையில் இலங்கை அணி துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக அதிரடிமன்னன் சனத்ஜெயசூரியாவுடன் உப்புல்தரங்க களம் புகுந்தார். அணியின் எண்ணிக்கை 31 ஆக இருந்த போது (8.2 ஓவர்கள்) 19 பந்துகளை எதிர் கொண்ட ஜெயசூரியா 15 ஓட்டங்களைப் பெற்று, உமர் குல்லின் பந்து வீச்சில், மொஹமட் அமீரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

44 பந்துகளுக்கு முகம்கொடுத்த உப்புல் தரங்க 17 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

இலங்கை அணித்தலைவர் சங்கக்கார மற்றும் மஹேல ஜெயவர்த்தன ஆகியோர் முறையே 36, 33 ஓட்டங்களைப் பெற்றனர்.

இலங்கை அணியில் அதிகபட்சமாக மத்தியூஸ் 50 பந்துகளைச் சந்தித்து, 3 பவுண்டரிகள் அடங்கலாக 43 ஓட்டங்களை எடுத்தார்.

இரு அணிகளுக்கிடையே நடந்த டெஸ்ட் தொடரில் காயம் காரணமாக கலந்து கொள்ளாத சூழல் மன்னன் முத்தையா முரளிதரன் நேற்றைய ஒரு நாள் போட்டியில் விளையாடினார்.

முரளிதரன் நேற்றைய ஆட்டத்தில் 15 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 32 ஓட்டங்களை விளாசினார். இதில் 4 பவுண்டரிகளும், ஒரு சிக்ஸரும் அடங்கும்.

இறுதியில் இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 232 ஓட்டங்களை மொத்தமாகப் பெற்றது.

பாகிஸ்தானின் பந்து வீச்சில் முஹமட் அமீர் 10 ஓவர்கள் பந்து வீசி 45 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

அத்துடன் அப்துல் ரஸாக் 10 ஓவர்கள் வீசி 33 ஓட்டங்களைக் கொடுத்து இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். உமர் குல், சயீட் அக்மல், சயீட் அப்ரடி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை எடுத்தனர்.

233 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப் பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 44.4 ஓவர்களில் சகல விக்கெட் டுக் களையும் இழந்து 196 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

அந்த அணியில் அதிகபட்சமாக உமர் குல் 6 பவுண்டரிகள் அடங்கலாக 33 ஓட்டங்களை எடுத்தார். அவரைவிட பாவட் அலாம், சயீட் அப்ரடி, மொஹமட் அமீர், ஹம்ரன் அக்மல் ஆகியோர் முறையே 31, 27, 23, 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

9 ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக உமர் குல் மற்றும் மொஹமட் அமீர் ஆகியோர் இணைந்து 62 ஓட்டங்களை எடுத்தனர்.

இலங்கை அணியின் பந்து வீச்சில் துஷார 8 ஓவர்கள் பந்து வீசி 29 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

முரளிதரன் மற்றும் குலசேகர ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

நேற்றைய ஆட்டத்தின் ஆட்டநாயகனாக முத்தையா முரளிதரன் தெரிவானார்.

ஆட்டநாயகன் விருதை முரளிதரன் தட்டிச் சென்றார். துடுப்பாட்டத்தில் சிறப் பித்தமைக்காக முரளிதரனுக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்படுவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜி.சி.ஈ.(உயர்தர)பரீட்சை அனுமதி அட்டைகள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 31

எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சி.ஈ.(உயர்தர)பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நேற்று எடுத்து வரப்பட்டுள்ளன.

அந்த அனுமதி அட்டைகளை தத் தமது வலயங்களில் இன்று காலை முதல் பாடசாலை அதிபர்கள் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (1)

## கரப்பந்தாட்ட அணிகள் இன்று புறப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 31

தேசிய மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையில் டி.எஸ்.ஐ. நிறுவனம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பங்குபற்ற ஆறு அணிகள் இன்று கொழும்பு புறப்படுகின்றன.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் 14,16,18வயதுப் பிரிவுகளில் முதலிடம் பெற்ற ஆண்,பெண் அணிகள் கொழும்பு செல்கின்றன.

அவிசாவளை, ஹக்குவெல்லில் நாளையும் மறு தினமும் இடம்பெறும் போட்டிகளில் யாழ்.அணிகள் பங்கு கொள்ளும்.

காங்கேசன்துறை ஊடாக மன்னார் செல்லும் அணிகள் அங்கிருந்து கொழும்பு செல்லும். (1)


## சர்வதேச லயன்ஸ் கழகங்கள் பெரு மாவட்டம் 306

சுனாமி வீடமைப்பு திட்ட திறப்பு விழா (01.08.2009) சனிக்கிழமை

### வாகன ஒழுங்கு

வல்வெட்டித்துறையில் இடம்பெறும் மேற்படி விழாவிற்கு சமுகமளிக்க விரும்பும் லயன்ஸ்கழக உறுப்பினர்கள் அனைவரும் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்திற்கு முன்பாக பி.ப 12.30 மணிக்கு ஒன்று கூடும் படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

போக்குவரத்திற்கு வேண்டிய பேருந்து (Bus) ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

லயன் C.சுந்தரேஸ்வரன்
வடபிராந்திய பிரதிபொருளாளர்
லயன்ஸ் கழகங்கள் 306 B1 T.P:- 021 222 3477



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை வங்கிச் சேவையில் 20.02.1976 இல் இணைந்து 31.07.2009 இல் ஒய்வுபெறும் மானிப்பாய் இலங்கை வங்கிக் காசாளரும், 'லக்சுமி வில்லா,' வல்லை வீதி, சங்கானையைச் சேர்ந் தவருமாகிய

### பொன்னுத்துரை பாலசிங்கம் (பாலா)

அவர் ஒய்வு காலத்தில் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் குடும்பத்தினருடன் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

பழைய தபால் கந்தோர் வீதி,
சங்கானை. (87455)

பூ.தவராசா (ராதா)
குடும்பத்தினர்.


## ஈவினையில் நாளை விழிப்புணர்வு செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 31

வலிகாமம் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் கல்வி விழிப்புணர்வு செயலமர்வு நாளை சனிக்கிழமை ஈவினை அ.த.க. பாடசாலையில் இடம் பெறவுள்ளது.

பெற்றோர்கள், பிள்ளைகளுக்கு நடத்தப்படும் இச்செயலமர்வில் உடுவில் பிரதேச செயலக உதவி பிரதேசசெயலர் அ.சோதிநாதன், வலிகாம கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம், வசாவிளான் மத்திய மகா வித்தியாலய ஒய்வுபெற்ற அதிபர் ஆ.சி.நடராஜா, ஈவினை அ.த.க. பாடசாலை அதிபர் செ.பரமேஸ்வரன், செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜா, கிராம அலுவலர் சி.மயூரதன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்து வழங்கவுள்ளனர்.

## உயர்தர மாணவர்களுக்கு வேம்படியில் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை31

க.பொ.த உயர்தரத்தில் உயிரியல் கற்கும் மாணவர்களுக்கான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இச்செயலமர்வில் மாணவர்கள் விடும் தவறுகளை சுட்டிக்காட்டல் மற்றும் மாதிரி வினாத்தாள் கலந்துரையாடல் என்பன இடம்பெறும்.

2009 இல் பரீட்சைக்குத் தோன்றும் மாணவர்களை தவறாது இதில் கலந்து கொள்ளுமாறு தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் கேட்டுள்ளது. (1-5)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை,சுன்னாகம் கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி | -31.07.2009 -12.08.2009 பி.ப 2 மணிவரை |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி | - 13.08.2009 நண்பகல் 12 மணி வரை |
| கேள்வி திறந்து பார்க்கும் திகதி | - 13.08.2009 பி.ப 1.30 மணி |
| கேள்விப்பத்திரம் வழங்கப்படும் இடம் | - தலைமை அலுவலகம், சுன்னாகம் |

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம்(வற் உட்பட) | இக்ராட் பதிவுத்தரம் |
|---|---|---|---|
| 1.உடுவில் மல்வம் வீதி 2 ம் தடவை தாரிடல் | 4000.00 | 560.00 | M9/C8 |
| 2.இணுவில் வேம்போலை வீதி 2 ஆம் தடவை தாரிடல் | 2000.00 | 560.00 | M9/C8 |
| 3.உசத்தியோடை இந்து மயான வீதி 2ஆம் தடவை தாரிடல் | 5000.00 | 560.00 | M9/C8 |
| 4.உடுவில் மாரிட்டி வீதி 2 ஆம் தடவை தாரிடல் | 3250.00 | 560.00 | M9/C8 |
| 5.தாவடி மாரியப்புல வீதி திருத்தம் | 8000.00 | 560.00 | M9/C8 |
| 6.திண்மக்கழிவு அகற்றல் தொட்டி அமைத்தல் | 12000.00 | 560.00 | M9/C8 |

குறிப்பு :- மேற்படி வீதி வேலைகளுக்கு தார் பிரதேச சபையால் வழங்கப்படமாட்டாது. மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் குறிக்கப்பட்ட 'இக்ராட்' தரத்திற்கு பதிவு செய் யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரரிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரத்தின் மூலப்பிரதி 'செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை , சுன்னாகம்' என்ற முகவரிக்கும் அதன் பிரதியை 'பிராந்திய உள்ளுராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளுராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கும் உரிய காலத் திற்கு முன்னர் பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடல் வேண்டும். மே லதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்
30.07.2009

திருமதி .சு.முருகநேசன்
செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்


## மரண அறிவித்தல்கள்

### திருமதி மங்கையர்க்கரசி சுப்பிரமணியம் (பவாக்கா)



யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைச் சேர்ந்த திருமதி மங்கையர்க்கரசி சுப்பிரமணியம் 29.07.2009 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முதலியார் -முத்துத்தம்பி தம்பதியினரின் மூத்த மகளும், உரும்பிராயைச் சேர்ந்த Dr. சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், பரந்தாமன், தனஞ்சயன், சாந்தகுமார் (நிமால்), Dr. கௌரிமனோகரி ஆகியோரின் தாயாரும், அமிர்தவல்லி, விக்னேஸ்வரி, சரோஜினிதேவி, Dr.ரவிராஜன் ஆகியோரின் மாமியாரும், பிரசன்னா, துஸ்யந், நர்மதா, சுரபி, சங்கரி, சந்துரு, ராகுலன் ஆகியோரின் அருமைப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.08.2009) சனிக்கிழமை Jeyaratna parlour இல் பகல் 12 மணியளவில் நடைபெற்று பிற்பகல் 2.30 மணியளவில் Borella கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*186/20A,குருநாதர் ஒழுங்கை,*
*பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
*நிமால் சாந்தகுமார் (மகன்).*

### சிற்றம்பலம் விமலராஜா



(நிர்வாகி, நெல்லியடி மற்ஸ் சென்ரர் -விமலன் ஆசிரியர்)

கரவெட்டி, சித்திராங்கர் வளவைப் பிறப்பிடமாகவும், செட்டிதறை வீதி, நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் விமலராஜா (28.07.2009) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் திரு.திருமதி சிற்றம்பலம் தம்பதிகளின் புத்திரனும், புஷ்பராணியின், அன்புக்கணவரும், பிரசன்னாவின் (நெ.ம.ம. வித்தியாலயம், 2009 கணிதப்பிரிவு), பாசமிகு தந்தையும், சிவநேசராசா (கனடா), பிரேமாதேவி அருளானந்தம் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும், நாகேந்திரராசா (கொழும்பு), இராசேந்திரா (கொழும்பு), தெய்வேந்திரம் (கனடா), இந்திராணி, குலராஜேந்திரன் (கனடா),செல்வராணி ஜெயானந்தராஜா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2009) பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்றுப் பின்னர் பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
*புஷ்பராணி விமலராஜா (மனைவி),*
*வி.பிரசன்னா (மகன்).*

### ஐயாத்துரை யோகேஸ்வரன்



தாவடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை யோகேஸ்வரன் 29.07.2009 புதன்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பிரேமகுமாரியின் அன்புக் கணவரும், அபிதா, நிதர்சன், கீதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் அவரது இல்லத்தில் (02.08.2009) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல:-31,குளப்பிட்டி லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

*தகவல்:*
*குடும்பத்தினர்,*
*சுமன் (கேபிள்)* T.P 0776447360

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அரசியலில் மகளிருக்கு பங்களிப்பு உரிய அளவில் வழங்குவது அவசியம்

நாட்டில் பெண்களின் உரிமை தொடர்பாக புதிய விடயம் ஒன்று பிரேரிக்கப்பட்டிருக்கின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின்போது அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் சமர்ப்பிக்கும் வேட்பாளர் பட்டியலில் இருபத்தியைந்து வீதம் - அதாவது கால் பங்கு - பெண்களாக இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் உள்ளூராட்சி சபைகள் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்பதே இந்த யோசனையாகும். மேல் மாகாண சபையின் ஆளும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு அணியைச் சேர்ந்த பெண் உறுப்பினரான அசோக லங்காதிலக அம்மையாரே இந்த யோசனையை முன்மொழிந்திருக்கின்றார்.

அரசியலில் மாதர்கள் ஒதுக்கப்படுவதுபோல, இளைஞர்களும் புறம் ஒதுக்கப்படும் நிலைமை இலங்கைத் தீவில் நீடிக்கின்றது. இதைத் தவிர்க்கும் முதல் முயற்சியாக உள்ளூராட்சித் தேர்தல்களிலாவது இளைஞர்களுக்கு முன்னுரிமை முக்கியத்துவம் - அளிக்கும் நோக்கத்துடன் இந்த வேட்பாளர்கள் பட்டியலில் மூன்றிலொரு பகுதியை இளைஞர்களுக்கு ஒதுக்கும் விதத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டங்களில் ஏற்கனவே திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்ற ஏற்பாட்டை பெண்கள் விடயத்திலும் கொண்டுவரும்படியான யோசனையே இப்போது முன்வைக்கப்படுகின்றது.

இளைஞர்களுக்கும், மாதர்களுக்கும் அரசியலில் அளிக்கப்படும் முக்கியத்துவம் வெறுமனே உள்ளூராட்சி மட்டத்துடன் அடங்கி விடக்கூடாது. அதையும் தாண்டி தேசிய அரசியலிலும் அவர்களுக்கு உரிய பங்கும் முக்கியத்துவமும் அளிக்கப்படுவது அத்தியாவசியமானதாகும்.

சமூக, சமுதாய, அரசியல் விவகாரங்களில் எழுச்சி மிக்க இளைஞர் சமூகத்தின் கருத்து சரிவர செவிமடுக்கப்படாத தேசங்களிலேயே வன்முறைப் புரட்சியும், ஆயுதக் கிளர்ச்சியும், அஹிம்சை தாண்டிய போராட்டங்களும் இலகுவாகப் பற்றிப் பீடித்துப் பரவுகின்றன என்பது நமது வரலாற்றுப் பாடமாகும்.

அதேபோன்று, உலகில் - தேசங்களில் - சரிபாதி எண்ணிக்கையினரான பெண்களுக்கு அரசியல் தீர்மானங்களை எடுக்கும் தலைமைத்துவ நடவடிக்கைகளில் உரிய பங்கு வழங்கப்படாவிடில் அது பெரும் சமூக அநீதியாகும். மாதர்களின் பெறுமதிமிக்க பொறுப்புணர்வை உதாசீனம் செய்யும் புத்திபூர்வமற்ற போக்காகவும் இது அர்த்தப்படுத்தப்படும்.

இலங்கையின் சனத்தொகையில் ஐம்பத்தியிரண்டு வீதமானோர் பெண்கள். பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் ஐம்பத்தியாறு சதவீதத்தினர் மாதர்கள். எஞ்சிய நாற்பத்திநான்கு வீதத்தினரே ஆண்கள்.

ஆனால், இலங்கை அரசியலிலோ ஆக 1.8 வீதமே பெண்களின் பங்களிப்பு உண்டு. ஆக, நாற்பத்திநான்கு வீதமே உள்ள பதிவு செய்யப்பட்ட ஆண் வாக்காளர்கள் அரசியலில் 98.2 வீத பங்கை ஆக்கிரமித்து நிற்கின்றனர். இது ஆணாதிக்கச் செல்வாக்குப் பற்றிய அப்பட்டமான ஒரு புள்ளிவிவர உண்மையாகும்.

உலகத்தின் முதலாவது பெண் பிரதமரான சிறிமாவோ பண்டாரநாயக்கவையும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்கவையும் தந்த தேசத்தில்தான் இன்றும் இந்த நிலைமை.

பக்கத்துத் தேசமான இந்திய உபகண்டத்திலும் நிலைமை வேறல்ல. அங்கு நாட்டின் தலைவராக ஜனாதிபதிப் பதவியில் பெண்மணி. பிரதிபா பாட்டீல் அம்மையார் அந்தப் பதவியை வகிக்கின்றார். புதிய சபாநாயகராகவும் பெண்மணி ஒருவரே தேர்வாகியிருக்கின்றார். இந்தியாவின் மத்திய அரசை வழிநடத்தும் - தீர்மானங்களை - எடுக்கும் காங்கிரஸ் தலைமைப் பதவியும் பெண்மணியான சோனியா காந்தியிடமே. இப்படி இந்தியாவின் ஆளும் தரப்பின் நாணயக்கயிறு பெண்கள் வசம் இருந்தாலும் கூட, இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஆகக் குறைந்தது மூன்றில் ஒரு பகுதியை - முப்பத்திமூன்று சதவீதத்தை - பெண்களுக்கு வழங்குவதை உறுதிப்படுத்தும் விதத்தில் குறிப் பிட்ட எண்ணிக்கையான நாடாளுமன்றத் தொகுதிகளை மகளிர் பிரதிநிதித்துவத்துக்குரியவையாகப் பிரகடனப்படுத்தும் மகளிர் தொகுதி ஒதுக்கீட்டு சட்டமூலம் நிறைவேற்றப்படாமல் இழுபடுகின்றது. இந்தச் சட்டமூலம் தயாராகி ஒன்றரை தசாப்தம் கடந்தும் அதனை இன்னும் நாடாளுமன்றில் நிறைவேற்ற முடியாத இக்கட்டு அங்கு. மகளிரின் கைகளில் அதிகாரம் இருக்கும் இச் சமயத்தில் கூட மகளிருக்கு அரசியலில் குறைந்த பட்ச பங்களிப்பை உறுதிப்படுத்தும் சட்டமூலத்தை முன்னெடுத்து நிறைவேற்ற முடியாத நிலைமை இந்தியாவில்.

''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்!'' - என்று பாரதி கண்ட புதுமையை நனவாக்குவது பற்றிய சிந்தனை இனிமேலும் தூங்கிக் கிடப்பது அர்த்தமற்றது.

தென்னிலங்கை அரசியலில் மகளிர் ஒதுக்கப்பட்டாலும், வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்திலே பெண்களின் பங்களிப்புப் பற்றிய விழிப்புணர்வில் புதிய சிந்தனை - புரட்சிப் போக்கு - வெளிப்பட்டதை தொண்ணூறுகளின் ஆரம்பத்திலிருந்து இந்த ஆண்டு நடுப்பகுதி வரை கண்டோம். நேரடியாக ஆயுதம் ஏந்தி களச்சமராடும் நிலைமை வரை அது முன்னேறியது. தமிழர் தரப்பின் ஆயுதப் போராட்டம் முடக்கப்பட்ட நிலையில், அரசியலில் மகளிர் பங்களிப்பும் தமிழர்கள் மத்தியிலும் மீண்டும் பின்தள்ளப்பட்டு விடுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

எது, எப்படியென்றாலும் மகளிருக்கு உரிய பங்களிப்பை - இடத்தை - அரசியலில் வழங்கத்தக்கதான மாற்றத்தை நோக்கி இலங்கை நகரவேண்டிய காலம் வந்துவிட்டது என்பதை அனைவரும் உணர்ந்து, அதற்காகச் செயற்பட முன்வரவேண்டும்.

# வன்னி அகதிகளுக்கான உணவு விநியோகம் செப்ரெம்பர் மாதத்தில் பாதிக்கப்படும் அபாயம்

## மனிதாபிமான அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன

கொழும்பு, ஜூலை 31

இலங்கையில் மனிதாபிமானப் பணிகளை முன்னெடுப்பதற்குத் தேவையான நிதியில் 40 வீதமே இதுவரை கிடைத்துள்ளது என வடக்கு, கிழக்கில் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஐ.நா. உட்பட்ட முக்கிய அமைப்புகள் தெரிவித்துள்ளன.

போதிய நிதியுதவி இன்மையால் செப்ரெம்பர் மாதத்தில் உலக உணவுத் திட்டத்தின் உணவு விநியோகத்தில் பாதிப்பு ஏற்படலாம் என்றும் அவை தெரி வித்துள்ளன.

ஜூலை 28 ஆம் திகதி வரையான காலப்பகுதி குறித்த தமது நிலைவர அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ள மனிதாபிமான அமைப்புகள், இது பற்றி மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையின் பொது மனிதாபிமான செயற்றிட்டத்திற்குத் தேவையான நிதியுதவியில் இதுவரை 40 வீதமே கிடைத்துள்ளது.

2009ஆம் ஆண்டின் மத்திய காலாண்டிற்கான தேவை 27 கோடியே 55 ஆயிரத்து 118 அமெரிக்க டொலராகக் காணப்படுகின்றது.

இதில் 9 கோடியே 38 லட்சத்து 73 ஆயிரத்து 920 அமெரிக்க டொலர்களே கிடைத்துள்ளன.

இதேவேளை, 11 லட்சத்து 706 ஆயிரத்து 900 டொலருக்கான உத்தரவாதம் பலரால் வழங்கப்பட்டுள்ளது.

பம்பைமடுவில் அமைந்துள்ள பல்கலைக்கழக வளாக மைதானத்தில் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களை தங்கவைப்பதற்காக பல சிறிய முகாம்களை இராணுவம் அமைத்து வருகின்றது.

மெனிக் பார்ம் முகாமின் 6 ஏ வலயம் 95 வீதம் பூர்த்தியாகிவிட்டது. ஆயிரத்து முன்னூற்று 59 கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 10 தற்காலிக கூடாரங்களை அமைக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

மேலும் 6 பி வலயத்தில் 143 கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 152 கூடாரங்கள் அமைக்கப்படுகின்றன.

மெனிக்பார்ம் முகாமின் வலயம் 4ஐ மேலும் இரண்டு வலயங்களாகப் பிரிக்கும் நடவடிக்கையை இராணுவம் மேற்கொண்டுள்ளது. வேலிகள் அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன.

ஜூலை 22 ஆம் திகதி மழை மற்றும் காற்றினால் உருவாகக்கூடிய நிலைமைகளை எதிர்கொள்வது குறித்து ஆராயப்பட்டது.

வெள்ள அபாயம் ஏற்படும் பட்சத்தில் அல்லது கூடாரங்களுக்கு சேதம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் இடம்பெயர்ந்த மக்களை வேறு இடங்களில் தங்க வைப்பதற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளன எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

செப்ரெம்பர் மாதத்திற்குப் பின்னர் உலக உணவுத் திட்டத்தின் விநியோகத்தில் பாதிப்புகள் ஏற்படலாம்.

மேலதிக நிதியுதவி கிடைக்காத பட்சத்தில் நெருக்கடிகள் ஏற்படலாம்.

கடந்த வாரம் நடைபெற்ற சுகாதார சேவையாளர்களின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் மூன்று சாத்தியக்கூறுகளை எதிர்கொள்ள வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

1.புதிய சிறிய இடம்பெயர்ந்தோரை முகாம்கள் அமைப்பது.

2.இடம்பெயர்ந்தோர் மீளக் குடியமர்த்துதல்.

3.பருவப்பெயர்ச்சி மழை காரணமாக ஏற்படக்கூடிய பாதிப்புகளை எதிர்கொள்ளுதல்.

இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## நலன்புரி முகாம்களில் பரீட்சை நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்.மாவட்ட நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை, ஐந்தாம்தர புலமைப்பரீட்சை ஆகியவற்றுக்கு தோற்றும் மாணவர்களுக்கு நலன்புரி நிலையப் பாடசாலைகளில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சி பிரதேசத்தில் நான்கு பரீட்சை நிலையங்களும், கோப்பாய், தெல்லிப்பழை ஆகியவற்றில் தலா ஒரு பரீட்சை நிலையமும் அமைக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## வெடிபொருள் வெடித்ததில் பணியாளர் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் வெடிபொருள் ஒன்று வெடித்ததில் பணியாளர் கை விரல்களை இழந்தார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் அல்லாரையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், நல்லூரைச் சேர்ந்த ம.கான்சி (வயது - 32) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (50-207)

## மோட்டார் சைக்கிளிலிருந்து வீழ்ந்து இளம் குடும்பப் பெண் படுகாயம்

மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்து இளம் குடும்பப் பெண் படுகாயமடைந்தார்.

இச் சம்பவம் நேற்றையதினம் அல்லாரை வடக்கில் இடம்பெற்றது.

அந்த இடத்தைச் சேர்ந்த ஜனாத் சாந்தரோஜா (வயது 20) என்னும் குடும்பப் பெண்ணே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (50-207)

## வவுனியா, மன்னார் மாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நேரடியாக அரிசி

வவுனியா, ஜூலை 31

யாழ்ப்பாணத்தில் அரிசி விலையை மேலும் குறைக்கும் நோக்கில் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் உற்பத்தியாகும் அரிசியை, வவுனியாவிலிருந்து நேரடியாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளார்.

இந்த இரண்டு மாவட்டங்களிலும் உற்பத்தியாகும் அரிசி கொழும்புக்கு கொண்டு வரப்பட்ட பின்னரே யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

இதனைத் தவிர்த்து வவுனியாவில் ஓர் இடத்திலிருந்து நேரடியாக யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தால் யாழ்ப்பாணத்தில் குறைந்த விலையில் அரிசியைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்பதாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட வுள்ளது.

இவ்வாறு வவுனியாவிலிருந்து வாரத்திற்கு ஒரு தடவை 10 அரிசி லொறிகளை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க உத்தேசித்துள்ளதாக அரச அதிபர் திருமதி சார்ள்ஸ் மேலும் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியிடமும் விளக்கிக் கூறப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (சி)

## இலத்திரனியல் ஊடாகக் காசுக் கட்டளை அனுப்பும் புதிய நடைமுறை இன்று ஆரம்பம்

கொழும்பு,ஜூலை 31

இலத்திரனியல் ஊடக காசுக்கட்டளைகளை அனுப்பும் புதிய நடவடிக்கையை தபால் திணைக்களம் நேற்று ஆரம்பித்துள்ளதாக தபால் மா அதிபர் எம்.கே.பீ.திஸாநாயக்க தெரிவித் தார்.

தகவல் தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு இணையத்தளம் ஊடாக மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தின் மூலம் காசுக்கட்டளைகளை துரிதமாகவும் கிரமமாகவும் அனுப்பி வைக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்புதிய நடவடிக்கையின் மூலம் பணம் அனுப்பும் நபரின் தேவை 5 முதல் 10 விநாடிகளில் நிறைவேறுகிறது. முதல் கட்டமாக ஒரே நேரத்தில் ஒருவருக்கு கூடியபட்சம் 25 ஆயிரம் ரூபாவை அனுப்பிவைக்க முடியும்.

ஆரம்ப நடவடிக்கையாக 643 தபால் நிலையங்கள் ஊடாக இப்புதிய திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் அளவில் நாட்டிலுள்ள அனைத்து தபால் நிலையங்களுக்கும் இத்திட்டத்தை விஸ்தரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது - என்று அவர் தெரிவித்தார். (50)

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைப்பு

கொழும்பு,ஜூலை 31

அடுத்த மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் தற்போது பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்தார்.

அனுமதிப் பத்திரங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் அது குறித்து ஓகஸ்ட் முதலாம் திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட பிரதேசத்துக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளருக்குத் தெரிவிக்குமாறு அவர் அதிபர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வருடத்துக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை அடுத்த மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இதேவேளை அடுத்த மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐந்தாம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்களையும் விரைவில் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுப்பதாக ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (50)

### நாளை

| | |
|---|---|
| ஆடி 16 | 01.08.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | ஏகாதசி |
| | மு.இ. 11.16 வரை |
| நட்சத்திரம்: | கேட்டை |
| | பி.இ. 04.35 வரை |
| சுபநேரம்: | 03.03 - 04.33 |
| ராகுகாலம்: | 09.03 - 10.33 |

## கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு கொலை அச்சுறுத்தல் தேர்தல் ஆணையாளர், பவ்ரல் அமைப்பிடம் முறையீடு

கொழும்பு, ஜூலை 31

யாழ்ப்பாணம், வவுனியா உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க மற்றும் தேர்தலைக் கண்காணிக்கும் பவ்ரல் அமைப்பு ஆகியவற்றிடம் முறையிட்டுள்ளார்.

குறிப்பிட்ட சிலரின் ஆதரவுடன் இந்தக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்றும், அரசு தரப்பு வேட்பாளர்களை வெற்றி பெறவைப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற திட்டமிட்ட நடவடிக்கை இது எனவும், இரா.சம்பந்தன் தனது முறைப்பாட்டில் குற்றம் சாட்டியுள்ளார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, வவுனியா பூவரசம்குளம், திருநாவற்குளம் ஆகிய இடங்களுக்கு கடந்த 24 ஆம் திகதி தேர்தல் பிரசாரங்களுக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் ஆயுதக் குழுக்களினால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர் எனவும் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

வீதிகளில் நின்ற ஆயுதக் குழுக்கள் வாகனங்களை வீதிக்குக் குறுக்காக நிறுத்தி கூட்டமைப்பு வேட்பாளர்களைச் செல்லவிடாது தடுத்துள்ளன.

இது தொடர்பாகக் கூட்டமைப்பு வேட்பாளர் நாதன் வவுனியா பொலிஸ் நிலையத்தில் அன்றையதினம் முறைப்பாடு செய்துள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணணி இயக்குநர் தேவை

பிரதானவீதி, சங்கானையில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு நிலை யத்தில் கடமை புரிவதற்கு கணணி அறிவுள்ள பெண் இயக்குநர் ஒருவர் தேவை.

போட்டோ பிரதி எடுத்தல், தொலைபேசி தொடர்புகள், போன்றவற் றிலும் திறமை உள்ள வலிகாமம் மேற்குப் பிரதேச பிரிவில் உள்ளவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

T.P NO – 021 7900 215 (87456)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் பேராசிரியராக பதவி உயர்வு பெற்ற எமது ஆசான்.

**உயர்திரு. மா. சின்னத்தம்பி**

அவர்களை எல்லா வளமும் பெற்று நீடுழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.

யா/இணுவில் மத்திய கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள்.

(87444)


## சேவைநலன் பாராட்டு



**பொன்னுத்துரை பாலசிங்கம்**

(பிரதம காசாளர்)

சேவைக்காலம்:
(20.02.1976-31.07.2009)

இலங்கை வங்கியில் எழுபத்தாறில் இணைந்து
இணையற்ற சேவையால் மனங்களில் நிறைந்து
இளைப்பாறும் பிரியாவிடை நாயகனே
இனிதே வாழ்த்தி விடை தருகின்றோம்

இலங்கை வங்கி மானிப்பாய் மேற்தரக்கிளையில் பிரதம காசாளராகக் கடமையாற்றி இன்று(31.07.2009) ஓய்வுபெறும் திரு.பொன்னுத்துரை பாலசிங்கம் அவர்களின் சேவையினை நன்றியுடன் நினைவுகூர்ந்து ஓய்வுக்காலம் சிறப்புற அமைய வாழ்த்துவதுடன், பிறந்தநாள் (01.08.2009) வாழ்த்துக்களையும் அன்புடன் தெரிவிக்கின்றோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்,
இலங்கை வங்கி மானிப்பாய் மேற்தரக்கிளை,
சங்கானை விரிவாக்கற்கிளை.

(87448)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்

தேசிய இணையவழி தொலைதூரக்கல்விச் சேவையின்
தொலைதூரக்கல்வி நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழான
இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு
(வெளிவாரி)

BACHELOR OF BUSINESS MANAGEMENT
(EXTERNAL) ONLINE DEGREE PROGRAMME
Under
Distance Education Modernization Project of National
Online Distance Education Service

**புதிய அனுமதி - 2009**

மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி 2009 ஒகஸ்ட் 17ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
30.07.2009

(அ-559976)


## கண்ணீர் அஞ்சலி



எமது ஆங்கில அலகின் விரிவுரையாளரும், எமது சங்க உறுப்பினருமான

**திருமதி சாந்தகுமாரி விக்னராசா**

28.07.2009 அன்று காலமாகிய செய்தியறிந்து பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் மிகுந்த கவலைய டைகின்றது.

அன்னாரின் மறைவுக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், உறவினர் அனைவருக்கும் எமது அனுதாபங்களைத்தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(87453)

## மரண அறிவித்தல்

**வைத்திலிங்கம் கந்தையா குணரத்தினம்(V.K.K)**

(முன்னாள் பிரபலவர்த்தகர், முன்னாள் உரிமையாளர், யாழ்.ஆஸ்பத்திரி வீதி குணரத்தினம் ஸ்ரோர்ஸ், வட்டுக் கோட்டை ஸ்ரீமுருகன் அரிசி ஆலை)



கொக்குவில் மேற்கு, கேணியடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகர் வைத்திலிங்கம் கந்தையா குணரத்தினம் கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி,
கொக்குவில்மேற்கு,கொக்குவில்.

(சி-559982)

தகவல்:
குடும்பத்தினர்.

## பரீட்சை மண்டபம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் நாளை நடைபெறவிருந்த கமநல சேவைகள்குழு எழுதுநர் சேவையின் II ஆவது வகுப்பின் வெற்றிடங்களுக்கான விண்ணப்பதாரிகளை சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை அதே திகதியில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## நல்லூர் பிரதேசத்தில் மீன் எழுச்சித் திட்டம் அறிமுகம்

யாழ்ப்பாணம்,ஜூலை 31

நல்லூர் பிரதேச செயலக பகுதிகளில் மேற்கொள்ளப்படவிருக்கும் மீள் எழுச் சித் திட்டத்தின் அறிமுக நிகழ்வு இன்று மு.ப. 10 மணிக்குபிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (1)

## கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்.மாவட்டக் கரபந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை நடத்தப்படவிருந்த கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 5ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

அன்றைய தினம் காலை 8மணி முதல் அதே கல்லூரியில் சுற்றுப் போட்டி இடம் பெறும் என்று சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (1)

## முன்பள்ளிச் சிறார்களின் சிற்ப, ஓவியக் கண்காட்சி

வண்ணை, ஜூலை 31

யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் முன்பள்ளிச் சிறார்களின் சிற்பம், ஓவியம் படைப்பாற்றல் கண்காட்சி இன்று வெள் ளிக் கிழமை காலை 9மணி தொடக்கம் மாலை 4 மணிவரை முன்பள்ளி மண்டபத்தில் அதிபர் அருட்சகோதரி கிளாரா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க. விமலநாதன் கலந்துகொள்வார்.

நிகழ்வில் விளையாட்டு மற்றும் அதிர்ஷ்டத் தேர்வு பரிசளிப்பு என்பனவும் இடம்பெற உள்ளன. (1-160)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 31

சிறுப்பிட்டி மேற்கு பூமகள் முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப 2. மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும்.

முன்பள்ளி அபிவிருத்திச் சபைத் தலைவர் பொன்வாசன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்துகொள்வார். (1-207)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை31

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலைய முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணியளவில் நிலையத் தலைவர் த.பேரின்பநாயகம் தலைமையில் இடம் பெற உள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.பி. அரசகுமார் கலந்துகொள்ள உள்ளார். (1)


**நிரு ரியூசன் சென்ரர்**
கோண்டாவில்
A/L 2010,2011
இந்து நாகரீகம்
திரு.S.கார்த்திக்
ஆரம்பம்:
05.08.2009
காலை 7மணி
தனிப்பாட அனுமதிகள் உண்டு.



## தொழிலாளர்கள் தேவை

எமது ஸ்தாபனத்தில் வேலை செய்வதற்கு (பகல்/இரவு) கூலித் தொழிலாளர்கள் தேவை. நேரில் வரவும்.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,**
368B, முஸ்லிம் கல்லூரி வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம். 021- 4590008



Monitor (SAMSUNG) 19" LCD - 17000/=
Mother Board(G31) - 5750/=
D.V.D Writer(LG) - 3500/=
1GB Ram(DDRII) - 1900/=

அனைத்து கணனிப் பாகங்களும் குறைந்த விலையில்...





## புன்னாலைக்கட்டுவன் வடக்கு, குப்பிளான் வடக்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் மீள்குடியமர்வு

### பதிவுகளை மேற்கொள்ளுமாறு அப்பிரதேச மக்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 31

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புன்னாலைக் கட்டுவன் வடக்கு (ஜே/208), குப்பிளான் வடக்கு (ஜே/211), ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந் தவர்கள் மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு வசதியாக இடம்பெயர்ந்து அப் பிரிவுக்குள் வேறு கிராம சேவையாளர் பிரிவிலும், வேறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் வசிப்பவர்களை பதியுமாறு கேட்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 6ஆம், 7ஆம், 10ஆம் திகதிகளில் குறிப்பிட்ட இரு கிராம சேவையாளர் அலுவலகங்களில் பதிவுகளை மேற் கொள்ளும் படியும்-

பதிவுக்குச் செல்லும் போது ஆள் அடையாள அட்டை, குடும்ப பதிவு அட்டை, காணி உறுதி ஆகியவற்றை எடுத்துச் செல்லும்படியும்- வலி:தெற்கு பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் கேட்டுள்ளார். (1)


## COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

கணக்கியல்துறை ஆர்வலர்களிற்காக!
முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன்!
கம்பனிக்கணக்குகளுடன், VAT இனையும் உள்ளடக்கி

**Diploma in Computerized Accounting**

உங்கள் நிறுவன கணக்குகளை நீங்களே கணனிமயப்படுத்தும்படியான 100% செய்முறைப்பயிற்சியுடன்..

சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள கணக்கியல் மென்பொருட்களான

**Quick Book + ACCPAC + MYOB**

ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்

Tally புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.

Batch I : 01/08/2009-3PM/4PM
Batch II : 02/08/2009-3PM/4PM
Batch III : 04/08/2009-10Am/2PM
Batch IV : 06/08/2009-10Am/2PM

ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்


## மரண அறிவித்தல்கள்



**இளையகுட்டி பாறி**

முகமாலையைப் பிறப்பிடமாகவும், குடத்தனை மேற்கு, குடத்தனையை வசிப்பிடமாகவும் கொண்ட இளையகுட்டி பாறி நேற்று (30.07.2009) வியாழக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையகுட்டியின் பாசமிகு மனைவியும், குமாரசாமி, மாணிக்கம் (அமரர்), சின்னத்தம்பி (அமரர்), பரமு (ஜேர்மனி), செல்வராசா, சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குடத்தனை இந்து மயா னத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குடத்தனை மேற்கு,
குடத்தனை.
தொலைபேசி :- 0779189422
0774276256

தகவல்:
இ.செல்வராசா
(மகன்).

**ஆறுமுகம் கந்தையா**

(யாழ்.ஐக்கிய வியாபா சங்க முன்னாள் ஊழியர்)



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை, முருகமூர்த்தி வீதியை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கந்தையா காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சின்னம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை -வள்ளியம்மை தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும் மகேந்திரராசா, விமலாதேவி(இத்தாலி), புஸ்பராசா,சறோஜாதேவி,ஸ்ரீஸ்கந்தராசா, றஞ்சித்குமார்,ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானாம்பிகை,சண்முகலிங்கம் (இத்தாலி), கமலேஸ்வரி, ஞானரட்ணம்,வசந்தலீலா, கனகமணி ஆகியோரின் அன்பு மாமனாரும் கௌரிசங்கர் லதாங்கி,பிரமளா,கிருஷ்ணகுமார்,அனுசியா, அபிராமி, கிருஷ்னேந்திரா, அருள்வித்தியா, சுபோதரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆதாஸ்சின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(31.07.2009) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41/15,முருகமூர்த்திவீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

(87461)

தகவல்:
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி.கிழக்குப் பிரதேசத்தில் சுயதொழில் உற்பத்தி நிலையம்

கோப்பாய், ஜூலை 31

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் கிராமிய கைத்தொழில் சுய வேலை வாய்ப்பு அமைச்சின் நிதியில் இருந்து வலி.கிழக்கு செயலர் பிரிவில் சுயதொழிலை ஊக்குவிப்பதற்கான உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்துக்கு அமைச்சினால் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் பயனாளிகள் பங்களிப்பினால் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது. (203-72)

## வாக்காளர் அட்டை விநியோகம் இன்றுடன் நிறைவடையும்

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்.மாநகர சபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணிகள் இன்றுடன் நிறைவு பெறும் என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மிகுதி வாக்காளர் அட்டையை யாழ். பிரதம தபாலகத்தில் விசேடமாக உள்ள கருமபீடம் ஒன்றில் வைத்து விநியோகிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

வாக்காளர் அட்டை விநியோகத்தில் தபாலக ஊழியர்கள் 31 பேர் ஈடுபடும் உள்ளனர் எனவும் கூறப்பட்டது. (203-224)

## பதவியேற்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 31

கோண்டாவில் லயன்ஸ் கழக பதவியேற்பு நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.40 மணிக்கு கோண்டாவில் மேற்கு வேதபாராயண சனசமூக நிலைய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மாவட்ட ஆளுநர் லக்ஸ்மன் விஜய சிங்க அவரது பாரியார் லயன் டாக்டர் அனோமா ஆகியோர் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக முதலாவது மாவட்ட ஆணையாளர் லயன் எஸ்.ஜெயவத்சலன், மாவட்ட ஆலோசகரும் முன்னாள் ஆளுநருமான லயன் எஸ்.ராகவன் ஆகியோர் கலந்து கொள்வர். (201)

## விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

தென்மராட்சிப் பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் சிக்கி இருவர் காயமடைந்தனர்.

மீசாலை-புத்தூர் சந்தியில் மோட்டார் சைக்கிள்-மிதிவண்டி மோதிக்கொண்டதில் மீசாலை வடக்கைச் சேர்ந்த எஸ்.ராகுலன் (வயது 25) என்பவரும் கெற்பேலிப் பகுதியில் இடம்பெற்ற மற்றொரு விபத்தில் இதே இடத்தைச் சேர்ந்த ரி.நிரோஸ் (வயது 18) என்பவரும் காயமடைந்தனர். (203-207)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 31

தொண்டைமனாறு வெளிக்கள நிலையத்தின் ஏற்பாட்டில் ஜி.சீ.ஈ.உயர்தர உயிரியல் பிரிவு மாணவர்களுக்கான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் பரீட்சையில் மாணவர் விடும் தவறுகளைச் சுட்டிக்காட்டல் மற்றும் மாதிரி வினாத்தாள் கலந்துரையாடல் ஆகியவை இடம்பெறும். இவ்வருடம் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை எழுதும் உயிரியல் பாட மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தொண்டைமனாறு வெளிக்களநிலையம் அறிவித்துள்ளது. (201)

## இலங்கைக்கு வெளியே இடம்பெற்ற பிறப்புகளை யாழ்ப்பாணத்தில் பதிய வசதி

யாழ்ப்பாணம், ஜூலை 31

இலங்கைக்கு வெளியே இடம்பெற்ற பிறப்பு ஒன்றை யாழ்.மாவட்டத்தில் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் உள்ளவர்களில் இத்தகைய பிறப்புக்கு இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வந்து இறங்கிய பதிவுகளின் பிரதிகள், இது தொடர்பாக கிராம சேவையாளரிடம் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரதி, தற்போது வசிக்கும் இடத்தின் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட நிவாரண அட்டையின் பிரதி, வள்ளத்தின் மூலம் வந்தவராயின் பிரதேச செயலரின் கடிதம், தமிழ் நாட்டில் வழங்கப்பட்ட கடிதங்கள், பதிவுச் சான்றிதழ்கள் இருப்பின் அவற்றின் பிரதிகள் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்ட பதிவு அட்டைகள், நிவாரண அட்டைகள் இருப்பின் அவற்றின் பிரதிகள், பெற்றோரின் விவாகச் சான்று, பெற்றோரின் பிறப்புச் சான்று, குறிப்பிட்ட பிள்ளையின் சகோதரர்களின் பிறப்புச் சான்றுகள், பெற்றோரின் அடையாள அட்டை, கடவுச்சீட்டுகள் இருப்பின் போன்ற ஆவணங்களுடன் யாழ்.செயலக உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)



புத்தகலட் டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தில் இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளையின் 'மலரும் பொன் அரும்புகள்' அலகு திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. விழாவில் இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளை முகாமையாளர் த.புவனேந்திரன் நாடாவெட்டி அலகைத் திறந்து வைப்பதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெயேந்திரா பாடசாலை மாணவர்களுக்கு வங்கிக் கணக்குப் புத்தகத்தை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: அச்சுவேலிச் செய்தியாளர்.)

## ஓகஸ்ட் 5 ஆம் திகதி முதல் 'கண்ணகிபுரம்' வானொலி நாடகம்

'யங் ஏஷியா' தொலைக்காட்சி நிறுவனம் 'கண்ணகிபுரம்' என்ற வானொலி நாடகத்தினை தயாரித்துள்ளது. இந்த வானொலி நாடகம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் ஒலிபரப்பாகவுள்ளது.

'கண்ணகிபுரம்' என்ற பெயரில் தமிழிலும் 'கண்ணகிபுர' என்ற பெயரில் சிங்களத்திலும் ஒரே நேரத்தில் இந்த வானொலி நாடகம் ஒலிபரப்பாகவுள்ளது.

சகிப்புத்தன்மை, சகவாழ்வு என்பவற்றை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்த வானொலி நாடகம் சமூக மேம்பாட்டுக்கான மாற்றங்களையும் வெளிப்படுத்தவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வலையமைப்பு ஊடாக தேசிய மற்றும் வர்த்தக சேவைகளிலும், பிராந்திய ஒலிபரப்பு சேவைகளிலும் ஒரே நேரத்தில் வாரத்திற்கு இரு தடைவைகள் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாலை 6.45 முதல் 7 மணிவரை கண்ணகிபுரம்/கண்ணகிபுர வானொலி நாடகம் ஒலிபரப்பாகவுள்ளது. அத்தோடு இலங்கையில் தமிழ் மொழியில் ஒலிபரப்பாகவுள்ள கண்ணகிபுரம் நாடகம் குறிப்பிட்ட அதே தினங்களில் மாலை 6.45 தொடக்கம் 7 மணி வரை ஒலிபரப்பாகும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய ஒலிபரப்புச் சேவைகளான சிட்டி எவ்.எம், ரஜரட்ட எவ்.எம், கந்துரட்ட எவ்.எம், வயம்ப ஹண்ட, கொத்மலை எவ்.எம் வானொலி வர்த்தக சேவையில் பிறை எவ்.எம் மற்றும் யாழ்.எவ்.எம் போன்ற வானொலி சேவைகளிலும் இந் நாடகத் தொடர் ஒலிபரப்பாகும்.

தென்றல் எவ்.எம் மாலை .5.45 தொடக்கம் 6 மணி வரை இந்நாடகத் தொடர் ஒலிபரப்பாகும்.

## வீதியைவிட்டு விலகிய மினிபஸ் ஆலய மண்டபத்துடன் மோதி நின்றது

வலி.வடக்கு, ஜூலை 31

வீதியைவிட்டு விலகிய மினிபஸ் ஒன்று கோண்டாவில் மேற்கு, உப்புமடம் பிள்ளையார் ஆலய முன் மண்டபத்தை உடைத்துச் சேதப்படுத்தியது. நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது:-

தெல்லிப்பழையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளுடன் வந்த மினிபஸ், குறுக்கு வீதியில் இருந்து பிரதான வீதிக்கு ஏறிய ஹன்ரர் வாகனத்தை விலத்தியபோது வீதியில் இருந்து பஸ் விலகியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தின்போது ஆலயத்துக்கு அருகே விடப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்தியவாறு சென்ற பஸ், ஆலய முன் மண்டபத்துடன் மோதியவாறு நின்றதாகக் கூறப்பட்டது. கோப்பாய் பொலிஸார் குறிப்பிட்ட இடத்துக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (203-86)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 31

வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் வரலட்சுமி விரதத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை இடம் பெறும்.

காலை 6.30 மணிக்கு மகாலக்ஷ்மி அம்பாளுக்கு நவகலச அபிஷேக ஆராதனைகள் ஆரம்பமாகி முற்பகல் 10.30 மணிக்கு அம்பாள் ''பத்மாசனத்தில் திருவீதியுலா வருதலுடன் நோன்பு நூல்'' வழங்கும் நிகழ்வு இடம்பெறும். (201)

* * *

கோப்பாய், ஜூலை 31

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயத்தில் வரலட்சுமி விரதத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு சிறப்புப் பூசையைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு சுவாமி வீதிவலம் வரும் நிகழ்வு இடம் பெறும். (201-72)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 31

நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 22 ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினாறு தினங்கள் நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

கடந்த 1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற விமானத் தாக்குதலின்போது முற்றாக அழிந்து சிறிய புனரமைப்பின் பின்னர் ஆலயத் திருவிழா இடம்பெறுகின்றமை இங்கு குறிப்பிடத் தக்கது. (201-230)

## குறிப்பிட்ட இடங்களில் நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஜூலை 31

இலங்கை மின்சாரசபையின் சுன்னாகம் கிளையினரால் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் நாளை சனிக்கிழமை குறிப்பிட்ட இடங்களில் மின் தடை செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை இந்த மின்தடை ஏற்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சி, இளவாலை, தொல்புரம், மாதகல், வடலியடைப்பு, விளான், இடும்பன் ஆகிய இடங்களில் மின்தடை ஏற்படுத்தப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

## மதுபோதையில் நடமாடிய நால்வருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31

பொது இடங்களில் மது போதையில் பொது மக்களுக்கு இடைஞ்சல் கொடுத்து வந்தாகக் குற்றஞ் சாட்டப்பட்ட மட்டுவிலைச் சேர்ந்த நால்வருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்த நால்வரும் கடந்த திங்கட்கிழமை விசாரணைக்காக நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

நால்வரும் தமது தவறை உணர்ந்து மன்னிப்புக் கோரியதையடுத்து தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஐந்து மாதச் சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (203-207)



தெல்லிப்பழை - காங்கேசன்துறை வீதியில் சேவையில் ஈடுபட்ட மினிபஸ் வீதியை விட்டு விலகி உப்புமடம் பிள்ளையார் ஆலய முன் மண்டபத்துக்குள் புகுந்து கொண்டது. அப்பகுதியில் நின்ற மோட்டார் சைக்கிளையும் மோதிக் கொண்டு வீதியைவிட்டு விலகி நிற்கும் பஸ்ஸைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மயானத்தில் சிரமதானம்

மீசாலை வடக்கு, வேம்பிராய் இந்து மயானம் அப்பகுதி மக்களால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

பிரதேச சபையின் சரசாலை உப அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிரம தானத்தில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். (203-207)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின்
வருகை
விரிவுரையாளர்
வி.சஞ்ஜேந்திராவின்
பாசமிகு தாய்
திருமதி
சாந்தகுமாரி
விக்னராசா
அவர்களின்
மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அத்துயரில் பங்குகொண்டு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

IIS City Campus,
Jaffna.

இயக்குநர்,
விரிவுரையாளர்கள்,
ஊழியர்கள்.

(சி/559974)

## ஆத்ம அஞ்சலி......



திருமதி சாந்தகுமாரி
விக்னராசா
(சிரேஷ்ட விரிவுரையாளர்-
ஆங்கிலத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்)

என்றும் நீங்கா வெள்ளைச் சிரிப்புடன்
எங்கள் வௌகத்து வாழ்வின்
நினைவழியா உயிர்ப்பாய்
நிறைந்துவிட்ட புலமைப் பொலிவின்
எண்ணங்களுடன்....

சமூகவியல் சமூகம்,
சமூகவியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(87445)

## இதய அஞ்சலி......



அமரர் முத்துவேலு சண்முகரத்தினம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது அமெரிக்காவில் வசித்து வந்தவருமான முத்துவேலு சண்முகரத்தினம் 17.07.2009 அன்று அமெரிக்காவில் காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (87447)

திரு.திருமதி சாந்திகுமார் மனோகரி
(மருமகன், பெறாமகள்).

## மரண அறிவித்தல்



நாகலிங்கம் நடராசா

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நடராசா நேற்று (30.07.2009) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம்- செல்லம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை- தங்கம்மா தம்பதியரின் மருமகனும் லீலாவதியின் அன்புக் கணவரும் கலைச்செல்வி, கலைச்செல்வன், பாஸ்கரன், ஸ்ரீதரன், கலைமதி, பபிதரன் ஆகியோரின் தந்தையும் பத்மநாதன், சாந்தேஸ்வரி, சுமதி, கலைச் செல்வி, மனோராஜன், விஜயலலிதா ஆகியோரின் மாமனும் மதுரா, மிதுஷா, மதுமினா, கீர்த்திகா, நிரூபிகா, கீர்த்தனன், சாகித்தியன், ஆதித்தியன், கவிந்தன், கவிநிலா, சானுஜா, சானுஜன், ஜதுர்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ் சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் சின்னம்மா காலஞ்சென்றவர்களான பிள்ளையம்மா, சிவசாமி மற்றும் வேதாரணியம், அன்பு (திலகேசு), காலஞ்சென்ற பாலசிங்கம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, இராசம்மா மற்றும் தனலட்சுமி, காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, சிவசாமி மற்றும் நவரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2009) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப.2 மணியளவில் அச்சுவேலி வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (87449)

தகவல்: கலைமதி (மகள்)
தொ.பே.: 0217902312.

## உடுவில் கோட்ட மட்ட தமிழ்த் தினப் போட்டி முடிவு

சுன்னாகம், ஜூலை31

உடுவில் கோட்ட மட்டத்தில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டிகளில் திறந்த போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

***இசை குழு - I:*** இணுவில் மத்திய கல்லூரி, இராமநாதன் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி.

***இசை குழு - II:*** இராமநாதன் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி.

***குழு நடனம்:*** இராமநாதன் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.

***நாட்டிய நாடகம்:*** இணுவில் மத்திய கல்லூரி, இராமநாதன் கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி.

***நாட்டாரிசை:*** உடுவில் மகளிர் க லூரி, ஏழாலை சைவ மகாஜன வித்தி.

***இலக்கிய நாடகம்:*** இராமநாதன் கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி.

***வில்லுப்பாட்டு:*** உடுவில் மகளிர் கல்லூரி, ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம், இணுவில் மத்திய கல்லூரி.

***விவாதம்:*** ஸ்கந்தவரோதயக் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி.

***தமிழறிவு வினாவிடை:*** ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம், இராமநாதன் கல்லூரி, உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை.

(203-38)

## முன்பள்ளி சிறாருக்கு தினமும் பால்

யாழ்ப்பாணம், ஜூலை31

கைதடி நலன்புரி நிலைய முன்பள்ளி சிறார்களுக்குச் சுவையூட்டப்பட்ட பால் தினமும் வழங்கப்பட்டு வருகிறது.

சமூகசேவைகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிக் கால்நடை வளர்ப்போர் சங்கத்தினால் தினமும் பால் வழங்கப்பட்டு வருவதாகவும் இதனால் நலன்புரி நிலைய முன்பள்ளியில் கற்கும் 87 மாணவர்கள் பயன் பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தினால் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிகளின் சிறார்களுக்கு தினமும் பால் வழங்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

(203-207)

## கசிப்பு வைத்திருந்த நபருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை31

கசிப்பு வைத்திருந்த நுணாவில் மேற்கு வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த நபருக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிவான் இந்த நபருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 10 மாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

(203-207)

## என் அருமைத் தோழிக்கு என் கண்ணீர்ப் பூக்கள் காணிக்கை

### திருமதி சாந்தகுமாரி விக்னராசா



சென்றனையோ தோழி
பல்கலைக்கழகத்திலே ஒன்றாக நாம் கற்ற
நினைவைத்தான் மறக்க முடியுமா- விடுதியிலே
நாம் சமைத்து உண்டு கழித்து வாழ்ந்த
அந்த நாளைத்தான் மறந்திட முடியுமா?- ஆண்டு
பல சென்றாலும் இன்றுவரை உன்னுடன் நான்
கொண்டிருந்த நட்பைத்தான் மறக்க முடியுமா?
அந்தக் கொடிய நோய்க்கு எம் நட்பு
எப்படித்தான் தெரியும்?- தாங்குதில்லை என் நெஞ்சு....
நல்லவர்கள் நீண்ட காலம் வாழ்வதில்லை என்பதனை
உன் மறைவு நிரூபித்துள்ளதடி ஆறாத் துயருடனே
உன் ஆத்ம சாந்தியை வேண்டி நிற்கும் உன் அன்புத் தோழி!

ச.அருள்நங்கை,
புதிய உயர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(87446)

## உதவி அர்ச்சகர் தேவை

மேற்படி எமது ஆலயத்திற்கு உதவி அர்ச்சகர் தேவை. தகுதியானோர் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். வதிவிடம் தேவைப் படின் சபையால் ஒழுங்கு செய்து தரப்படும்.

விண்ணப்பங்களை செயலாளர், கற்புலத்து மனோன் மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை, கொக்குவில் கிழக்கு என்னும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

(87443)

## DISTRICT SECRETARIAT, JAFFNA.

# INVITATION FOR BIDS

### VADAKKIN WASANTHAM DEVELOPMENT PROGRAMME 180 DAYS

1. **The Chairman, District Procurement Commitee, Department of Buillding**s, now invites sealed bids from eligible and qualified bidders for the under mention works. The construction period is 90 days.

| No | Description of Work | ICTAD Grade. | Estimated cost. | Bid Security |
|---|---|---|---|---|
| 1 | **Construction of Building for the Installation of Containerized ICE Plant at Jaffna District, Vadamarachy North Fisherman Co-Operative Societies Union, Policandy East, Pointpedro.** | **C8/M7** | **4,192,000.00** | **84,000.00** |
| 2 | **Construction of Building for the Installation of Containerized ICE Plant at Jaffna District, Fisherman Co-Operative Societies Union Federation, Jaffna.** | **C8/M7** | **4,358,000.00** | **88,000.00** |

2. Bidding will be conducted through National Competitive Bidding procedure.
3. To be eligable for contract award the successful Bidder shall not have been blacklisted and shall have been registered in the field of building construction for grade, mention in the above table with the Institute for construction Training and Development (ICTAD)
4. Interested Bidders may obtain further information from **the Chief Engineer's Office (Jaffna) Department of Buildings, Beach Road, Gurunagar, Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9.00 hrs to 16.00 hrs.** Contact numbers are: Phone: **021-2222781** Facsimile: **021-2222781**
5. A complete set of Bidding Documents in **English language** may be purchased by interested bidders on the submission of a written application to the **Chief Engineer (Jaffna), Department of Buildings** From **03.08.2009.** Until **10.08.2009** between **09.00 hrs. to 15.00 hrs.** upon payment of a non refundable fee of **Rs.1000/= (One Thousand Rupees).**
6. Bids shall be delivered or sent by registered post to **the Chairman, District Procurement Committee, Chief Engineer's Office, Department of Buildings, Beach Road, Gurunagar, Jaffna** at or before **10.00 hrs.** on **12.08.2009.**
7. All bids shall be accompanied by a Bid Security for an Amount mention in the above table. Which should be valid up to **10.11.2009.**
8. Bids will be opened soon after closing in the presence of bidders or their authorized representatives at the **Chief Engineer's Office (Jaffna), Department of Buildings, Beach Road, Gurunagar, Jaffna.**

*Chief Engineer's Office,*
Department of Buildings (Central),
Beach Road, Gurunagar,
Jaffna.
www.cejffb@sltnet.lk

(C/559971)

*K.Ganesh,*
Chairman,
District Procurement Committee.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய் கல்வளை வீதியில் எழுந்தருளியுள்ள காளியம்பாள் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற பொங்கல் விழாவின்போது எடுக்கப்பட்ட படம். விழாவில் மடை பரவி அம்பிகைக்கு பூசை வழிபாடுகள் இடம்பெறுவதைப் படத்தில் காணலாம். (படம்:ஓங்காரன்)



அச்சுவேலி வடக்கு சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் சங்காபிஷேக நிகழ்வின்போது வசந்த மண்டபத் திரைச்சீலையினை வரைந்து கொடுத்த இளம் ஓவியக் கலைஞன் தங்கராசா பிரசன்னாவிற்கு ஆலய பிரதம பூசகர் இ.நித்திய கஜேந்திரன் ஐயர் பொன்னாடை போர்த்தி ''ஓவியக் கலைஞன்'' எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். சைவப்புலவர் நித்தியத சிதரனும் படத்தில் காணப்படுகிறார். (9)





ஊரெழு கிளானைப்பதி பர்வதவர்த்தினி அம்மன் ஆலயத்தின் தேர்த்திரு விழாவில் அம்பாள் தேரில் திருவீதியுலா வருகிறார். மறுநாள் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட புஸ்பகரணியில் தீர்த்தத் திருவிழா இடம்பெறுவ தையும் படங்களில் காணலாம்.

# முகாம்களில் பணிபுரியும் வைத்தியர்களுக்கு உரிய முறையில் தங்குமிட வசதிகள் இல்லை

கொழும்பு,ஜூலை 31

இடைத்தங்கல் முகாம்களில் கடமையாற்றி வரும் வைத்தியர்களுக்கு உரிய தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என வைத்தியர்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கட்டடங்களில் தங்க முடியாது என வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இடைத்தங்கல் முகாம் மக்களுக்கு சிகிச்சை அளிக்கும் பிரதான வைத்தியசாலைகளில் ஒன்றான செட்டிக்குளம் வைத்தியசாலை வைத்தியர்களே இவ்வாறு தங்குமிட வசதிப் பிரச்சினையை எழுப்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பிரச்சினை மூலம் அகதிகளுக்கு உரிய முறையிலான வைத்திய சேவையை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஒத்துழைப்புடன் 3.5 கோடி ரூபா செலவில் செட்டிக்குளம் வைத்தியசாலை வைத்தியர்களுக்கு புதிய தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தில் சகல அடிப்படை வசதிகளும் காணப்படுகின்றன என்று சுகாதாரஅமைச்சினால் குறிப்பிடப்படுகின்றது.

எவ்வாறெனினும் குறித்த கட்டடங்களில் அதிகளவு வெப்பம் நிலவுகின்றது என்றும், இதனால், அங்கு தங்குவதில் சிரமங்கள் காணப்படுகின்றன எனவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

செட்டிக்குளம் வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் 48 வைத்தியர்களின் உணவு மற்றும் குடிதண்ணீர் செலவிற்காக நாளொன்றுக்கு 20 ஆயிரம் ரூபா செலவிடப்படுகிறது எனவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

வைத்தியர்களின் நடவடிக்கைகளின் காரணமாக அப்பாவி மக்களே அதிகம் பாதிக்கப்படக் கூடும் என அமைச்சு அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# "வணங்கா மண்"பொருள்கள் பழுதடையும் நிலையில்

## செஞ்சிலுவைச் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 31

இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு வழங்கவென இந்தியாவின் சென்னைத் துறைமுகத்தில் இருந்து கொலராடோ கப்பல் மூலம் கொழும்புத் துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட்ட அத்தியாவசிய உணவு நிவாரணப் பொருள்கள் பழுதடையும் நிலையில் உள்ளன என்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பாவில் இருந்து வணங்கா மண் மூலம் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்ட இந்தப் பொருள்கள் பாதுகாப்பு அதிகாரிகளினால் திருப்பியனுப்பப்பட்டன. இதனையடுத்து சென்னை துறைமுகத்திற்கு அருகில் நங்கூரமிட்டிருந்த கப்டன் அலி கப்பலில் இருந்த பொருள்கள் சென்னை துறைமுகத்தில் இறக்கப்பட்டு கொலராடோ கப்பலில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டன.

இந்த பொருள்களை கொழும்பு துறைமுகத்தில் இருந்து வெளியேற்றத் தேவையான சுங்கத் தீர்வையை இந்திய செஞ்சிலுவைச் சங்கம் இதுவரை செலுத்தவில்லை எனவும், இதனால் பொருள்களை வெளியில் கொண்டு செல்ல முடியாத நிலைமையேற் பட்டுள்ளது என்றும் இலங்கை செஞ்சிலு வைச் சங்கத்தின் பணிப்பாளர் சுரேஷ் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் பொருள்களுக்கான தாமத கட்டணங்களையும் துறைமுகத்திற்கு செலுத்த வேண்டியுள்ளது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ-சி)

# கோப்பாய் பிரதேச செயலகத்தில் சமூக சேவைகள் பிரிவு அமைப்பு

கோப்பாய்,ஜூலை 31

கோப்பாய் பிரதேச செயலகத்தில் சமூக சேவை பிரிவுக்கான கட்டடம் 19 லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது.

இதற்கான நிதியினை சமூக சேவைகள் அமைச்சு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-72)

# யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கங்கள் இணைந்து பல்கலை. மாணவருக்கு புலமைப் பரிசில்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை 31

யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கங்கள் இணைந்து தேசிய பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு புலமைப் பரிசில் கொடுப்பனவை வழங்கவுள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்கள் மேற்படி புலமைப் பரிசிலைப் பெற்றுக் கொள்ள முடியும்.

புலமைப் பரிசில் கொடுப்பனவு தொடர்பான விவரங்களுக்கு யாழ்.மத்திய கல்லூரி அதிபருடன் மாணவர்களைத் தொடர்பு கொள்ளுமாறு கல்லூரியின் பழைய "மாணவர் சங்கத் தலைவர் வி.ஆர்.வடிவேற்கரசன் அறிவித்துள்ளார்.

(மேலதிக விவரங்களுக்கு மார்ச் 22 ஆம் திகதி உதயனில் வெளிவந்த விளம்பரத்தைப் பார்வையிடலாம்). (201)

# கடந்த ஏழு மாத காலப்பகுதியில் 200 பேர் காசநோயால் பாதிப்பு

## டாக்டர் யமுனானந்தா தகவல்

யாழ்ப்பாணம்,ஜூலை 31

குடாநாட்டில் இந்த ஆண்டின் கடந்த ஏழு மாத காலப் பகுதியில் மட்டும் சுமார் 200 பேர் வரையில் காசநோய்க்கு இலக்காகியுள்ளார்கள்.

மாவட்டக் காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.யமுனானந்தா மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

குடாநாட்டில் காசநோயின் தாக்கம் இந்த ஆண்டின் முற்பகுதியில் அதிகரித்துக் காணப்படுவதாக அவர் மேலும் கூறினார்.

தற்போது இந்த நோய் ஓரளவு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட 200 பேருக்கும் சளிப் பரிசோதனை மேற்கொண்ட சமயம் அதில் 50 பேருக்கு காசநோய்த் தாக்கம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காசநோயின் தாக்கத்தைக் குறைக்கும் பொருட்டு பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கிராமம் கிராமமாகச் சென்று மக்களிடையே விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

பாடசாலை மாணவர்களிடையே விழிப்புணர்வுக் கூட்டங்கள் மற்றும் கலை நிகழ்வுகள் போன்றனவும் நடத்தப்பட்டு வருகின்றன என்று அவர் மேலும் கூறினார். (203-224)

# வலி.கிழக்குப் பிரதேசத்தில் வீட்டுத்திட்ட உதவி

கோப்பாய், ஜூலை 31

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் புத்தூர், நீர்வேலி, சிறுப்பிட்டி ஆகிய பிரதேசங்களில் 320 பயனாளிகளுக்கு 'நேர்ப்' உதவித்திட்டத்தின் கீழ் வீட்டுத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்கீழ் இவர்களுக்கான வீடமைக்கும் பணிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவக வலயப் பாடசாலைகளின் தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை,ஜூலை 31

தீவக வலயப் பாடசாலைகளிடையே இடம் பெற்ற தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டிகளில் வெற்றிபெற்றோரில் ஒரு பகுதியினரின் விவரம் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது. ஏனையோரின் விவரம் வருமாறு:-

**பாவோதல்:** மனோகரி சுப்பிரமணியம் (யாழ்ற்றன் கல்லூரி), அனுசியா ஜெபநேசன் (நெடுந்தீவு றோ.க.வித்தி.), ஜீவப்பிரகாசன் றஜீவன் (புனித அந்தோனியார் கல்லூரி). செந்தூரன் திருலோகநாதன் (யாழ்ற்றன் கல்லூரி), சிந்துசா உதயகுமார் (புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தி.), தர்மறோஜினி விஜயராசன் (நெடுந்தீவு றோ.க.வித்தி.).

, லோஜிகா லோகநாதன் (புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தி.), செல்வநாயகம் அருள் ராஜ் (புனித அந்தோனியார் கல்லூரி), நிசாந்தினி தர்மலிங்கம்(நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி.).

யனுசா இராசலிங்கம் (நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தி.), திரேஸ் நேரூஜினி அன்ரன் ஜோன் சகாயநேசன்(நெடுந்தீவு றோ.க.வித்தி.), கிருஸ்ணவேணி சந்திரராஜா (யாழ்ற்றன் கல்லூரி).

**இசையும் அசைவும்:** வினு பரமலிங்கம் (புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தி.), இந்துசலா ஜெயம் (அனலைதீவு வடலூர் அ.த.க. வித்தி.), கிருஷாந்தி ஜெகதீஸ்வரன் (வேலணை சைவப்பிரகாச வித்தி.).

**இசை தனி:** டேமியோ டொமினிக்(நெடுந்தீவு றோ.க.வித்தி.), கௌசிகா கமலகுமார்(புனித மரியாள் றோ.க.வித்தி.), சந்திரசேகரம் கௌசிகன்(நயினாதீவு கணேசா வித்தி.).

மார்க்கண்டு சுதாகரன்(யாழ்ற்றன் கல்லூரி), சுபாதிகா சிவமூர்த்தி (நயினாதீவு கணேசா வித்தி.), நெடுஞ்செழியன் ஸ்ரனிஸ்லோஸ் (புனித அந்தோனியார் கல்லூரி).

கேதினி செல்வராசா (கலாநிதி தியாகராசா ம.ம.வி.), சிவகௌரி இராசரத்தினம்(யாழ்ற்றன் கல்லூரி), மனோகரன் கெயின்சன், புனித அந்தோனியார் கல்லூரி,

கோகிலா கந்தசாமி (யாழ்ற்றன் கல்லூரி), சிந்துசா இராசநாயகம், (வேலணை மத்திய கல்லூரி), நிவேதினி சிவ்ராசா (புனித அந்தோனியார் கல்லூரி).

**இசை குழு -1:** நெடுந்தீவு றோ.க.வித்தி, யாழ்ற்றன் கல்லூரி, கலாநிதி தியாகராசா ம.ம.வி,

**இசை குழு -2:** கலாநிதி தியாகராசா ம.ம.வி, வேலணை மத்திய கல்லூரி, வேலணை மேற்கு நடராசா வித்தி

**நடனம் தனி:** தர்சிகா இரத்தினசீலன் (வேலணை மத்திய கல்லூரி), கருணிதா யோகராசா (யாழ்ற்றன் கல்லூரி), ஜெனபா சிவப்பிரகாசம் (கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தி.),

சர்மிளா சத்தியேந்திரன் (கலாநிதி தியாகராசா ம.ம.வி), துஸ்யந்தி செல்வராசா (வேலணை மத்திய கல்லூரி), ஐஸ்வர்யா செந்தில்நாதன் (யாழ்ற்றன் கல்லூரி), செந்தூரி கந்தசாமி (வேலணை மத்திய கல்லூரி), மயூரி தேவராசா (யாழ்ற்றன் கல்லூரி), நாகசிந்துஜா நாகேந்தி ரம் (கலாநிதி தியாகராசா ம.ம.வி.), சங்கீதா சிறீதரன் (வேலணை மத்திய கல்லூரி).

**நடனம் குழு1:** புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தி, வேலணை மத் திய கல்லூரி, நாரந்தனை றோ.க. வித்தி, புனித மரியாள் ம.வித்தி.

**நாட்டிய நாடகம்:** நெடுந்தீவு ம. வித்தி

**நாட்டார் பாடல்:** நெடுந்தீவு ம. வித்தி., நாரந்தனை கணேசா வித்தி.

**இலக்கிய நாடகம்** கலாநிதி தியாகராசா ம.ம.வி, புனித அந் தோனியார் கல்லூரி.

**வில்லுப்பாட்டு** புனித அந்தோனியார் கல்லூரி, யாழ்ற்றன் கல்லூரி, நாரந்தனை றோ.க.வித்தி.

**விவாதம்** பகிப்பிரியா இராசலிங்கம், சிவரஞ்சினி சிவராசா, திருவருட் பிரியா கந்தையா ( -கலாநிதி தியாகராசா ம.ம.வி.)

**தமிழ் அறிவு விநாடி வினா** விஸ்வநாதன் பாலேந்திரன், கங்காதரன் கமல்ராஜ், நாகேஸ்வரி கதிர்காமநாதன், சசிகலா செல்வரட்ணம், கோகிலா கந்தசாமி (யாழ்ற்றன் கல்லூரி),

பி.தோமஸ் அன்ரனி பேக்மன், ம.தவரஞ்சினி, யோ. அமல உற்பவராஜ், கி.லிஸ்பன் கனிசியஸ், ஏ. தஸாங்கன் (நெடுந்தீவு ம.வி.),

பரமேஸ்வரன் ஸ்ரீமயூரன், ஜீவராசா கமில்ரன், பானுஜா அசோகன், அபர்ணா கேதாரநாதன், தேனுசா நேசராசா (நாரந்தனை கணேசா வித்தி.)

(முற்றும்)

---

## பாராட்டுகின்றோம்



### க.அபிமன்யு

B.A, L.L.B.

யா/வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவனும் எமது கல்லூரி நண்பனுமான திரு. கணேசவேல் அபிமன்யு அவர்கள் கடந்த 29.07.2009 புதன்கிழமை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் உயர்திரு. அசோகா டிசில்வா முன்னிலையில் சட்டத்தரணியாக பட்டம் பெற்றமையைப் பாராட்டுகின்றோம்.

*பாராட்டுவோர்:* கல்லூரி நண்பர்கள் - இ.சாந்தகுமார் B.A (Hons), மா.பத்மநாத் B.A (Hons) M.A.

(87438)

---

## மண்டைதீவு புனித பேதுரு ஆலயத்திருச்சபை வருடாந்த பெருவிழா

''கிறிஸ்து எனும் பாறையில் புதிய வாழ்வை கட்டி எழுப்புவோம்''

அன்புடையூர்! புனிதரின் பெருவிழாவிற்கு தங்களை அன்புடன் வரவேற்கிறோம். ஆலயப்பெருவிழாவினை முன்னிட்டு விசேட இ.போ.ச. பஸ்சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

* ஆடி 31.07.2009 பி.ப 4.30 மணி

**நற்கருணைப் பெருவிழாத் திருப்பலி**

* *யாழில் இருந்து பேருந்து புறப்படும் நேரம் பி.ப.1.30,3.30,* மண்டைதீவிலிருந்து யாழிற்கு பேருந்து புறப்படும் நேரம் இரவு 7மணி
* ஆவணி 01.08.2009 காலை 8மணி

**புனித பேதுருவானவர் பெருவிழாத் திருப்பலி**

* யாழில் இருந்து பேருந்து புறப்படும் நேரம் காலை 6.30, 7.45 மணி
* திருச்சுருவப்பவனி - ஆவணி 01.08.2009 பி.ப. 3மணி

புனிதரின் ஆசியையும், பரிந்துரையையும் நாட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(87413) **பங்குத்தந்தை, பங்கு மக்கள்.**

---

## சேவை நலன் பாராட்டு



### திருமதி லூ.ஞா.செல்வரட்ணம்

(இ.ஆ.சேவை வகுப்பு - I
விசேட பயிற்சி - கணிதம்)

ஏறத்தாழ நான்கு தசாப்தங்களைக்
கடந்த சேவையை முழு மன நிறைவுடன்
திறம்பட ஆற்றி அகவையின்
அழைப்பால் ஓய்வினை நாடும் அரிய
சேவகியே வாழ்க!

எமது பாடசாலையில் கடந்த 23 வருடங்களாக ஆசிரியையாக, உப அதிபராக கடமையாற்றி 31.07.2009 இல் ஓய்வுபெறும் திருமதி லூ.ஞா. செல்வரட்ணம் அவர்களின் கல்விச் சேவையை நினைவு கூர்ந்து பாராட்டுவதுடன், அவரின் ஓய்வுகாலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

யா/சிதம்பரக் கல்லூரி,
வல்வெட்டித்துறை. (87410) கல்லூரிச் சமூகம்.

---

## வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம்,ஜூலை 31

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனான சந்திப்பு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் யாழ்.ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்துக்கு வருகை தருமாறு பட்டதாரிகள் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (201)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 23 * 03 * 1924 | 10 * 08 * 2008 |



### திருமதி கந்தமுத்து நல்லம்மா

திதி: தசமி

**தாய் மனசு தங்கம்**
**நாம் அறிந்த தெய்வம்**
**நன்றி சொல்லப் போதாதம்மா**
**ஏழேழு ஜென்மம்**

''தாயிற் சிறந்த கோயிலுமில்லை
தாயைப் போற் தெய்வமும் இல்லை''

இல.03, காதி அபூபக்கர் வீதி,
யாழ்ப்பாணம். (87436)

என்றும் நினைவுடன்:
**குடும்பத்தினர்.**

---

## ஈராண்டு நினைவலைகள்...



திருமதி.
### மயில்வாகனம் புஸ்பமலர்

தரணியில் : 16*04*1956
பரணியில்: 24*07*2007

திதி: தசமி (31.07.2009)

அன்பின் உறைவிடமே! அணையாத ஒளிவிளக்கே!
ஆற்றாத துயரத்தில் தவிக்கின்ற எம்முள்ளம்
இன்பநாள் வரவினிலே இழக்கின்ற கண்ணீரில்
என்றென்றும் கரையாத ஈராண்டு கனவுகளின்
நீங்காத நினைவலைகள்!...
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இல.120, தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை.

**குடும்பத்தினர்.**

(சி/559961)

---

## 31ஆம் நாள் ஈரவிழிகளுடன் இதய அஞ்சலி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 27 * 08 * 1949 | 01 * 07 * 2009 |



### தம்பிப்பிள்ளை கந்தசாமி

**எமக்கெல்லாம் வழிகாட்டிய அன்புத் தந்தையே**
**எம்மை விட்டுப் பிரிந்து சென்று**
**ஆறாத் துயர் தந்தது ஏனோ?**
**ஆறவில்லை எம் துயர் - என்றென்றும்**
**மாறாது உம் நினைவு**

இன்று (31.07.2009) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible] தெற்கு,
[illegible]சேரி. (87395)

என்றும் நினைவுடன்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமங்கலிப் பெண்கள் அனுஷ்டிக்க உகந்த வரலட்சுமி விரதம்

முன்வினைப்பயனாக மனிதப் பிறவி எடுத்தவரெல்லாம் இவ்வுலகிலும், மறுவுலகிலும் சுகம் பெறுவதற்காக நித்திய, நைமித்தியம், காம்யம் என்ற மூன்று வகையான கர்மாக்களை அவசியம் செய்ய வேண்டும் என்று வேதங்கள் வலியுறுத்திக் கூறுகின்றன.

நம் முன்னோர்கள் வகுத்து வைத்திருக்கும் விரதங்களும் அக்காலங்களில் செய்ய வேண்டிய தேவதா பூஜைகளும், காம்யகர்ம கிரியையைச் சார்ந்தவையாகும். வரலட்சுமி விரதப் பூஜையும் காம்யகர்ம வகையைச் சார்ந்த பூஜை முறையாகும்.



தான் செய்யவேண்டிய விஷயத்தை உறுதியாக மனதில் தீர்மானம் செய்வதே விரதம் எனப்படுகிறது. விரதம் அனுஷ்டிக்கும் போது என்ன செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்பதைச் சாஸ்திரங்கள் வலியுறுத்திக் கூறுகின்றன.

விரதம் அனுஷ்டிக்கும் வேளையில், அடிக்கடி நீர் குடித்தல், பகலில் தூங்குவது, லௌகிய வாழ்க்கை, வெற்றிலை - பாக்கு போட்டுக் கொள்ளுதல், மது - மாமிசம் பாவித்தல், கோபப்படுதல், அதிகம் பேசுதல், தேவையற்ற பிரயாணம், யாத்திரை செல்லுதல், தைல ஸ்நாதம் செய்தல் (எண்ணெய் தேய்த்து முழுகுதல்) போன்ற செயற்பாடுகளைச் செய்யக்கூடாது என தர்மசாஸ்திரங்கள் வலியுறுத்துகின்றன.

ஆண்கள், பெண்கள் அனைவரும் விரதங்களை அனுஷ்டிக்கலாம். ஆனால் அவர்கள் தம் வர்ணாச்சிரமத்துக்குரிய கடமைகளைச் செய்பவர்களாகவும், சுத்தமான மனம்முள்ளவர்களாகவும், உண்மையே பேசுபவர்களாகவும், எல்லா உயிர்கள் மீதும் கருணையுள்ளவர்களாகவும் ஆசாரசீலர்களாகவும் ஒழுகுபவர்களே விரதத்தை ஏற்று அனுஷ்டிப்பதற்கு அருகதை உடையவர்கள் என ஸ்மிருதி நூல்கள் கூறுகின்றன.

**இன்று (31.07.2009) வரலட்சுமி விரத நாள். அதனையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

திருமணமான பெண்கள் தங்கள் கணவனின் அனுமதி பெற்றுத்தான் விரதம் அனுஷ்டிக்கவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

காலையில் ஸ்நானம் செய்து நித்திய கர்மானுஷ்டங்களை முடித்துக்கொண்டு, தான் ஏற்றுச்செய்யும் விரதத்தின் பெயரைச் சொல்லி ஸங்கல்பம் செய்யவேண்டும். அன்றைய தினம் முழுவதும் உபவாசம் இருப்பது உத்தமம். பகலில் மட்டும் உபவாசம் செய்து இரவில் பலகார உணவு வ்கை எடுப்பது மத்திமம். ஒவ்வொரு விரதத்திலும் முக்கியமாக அந்த விரதத்திற்குரிய தேவதையின் பூஜைகளைச் சிரத்தையோடும், பக்தியோடும் செய்யவேண்டும். விரதகாலங்களில் வீடுகளுக்கு வரும் பெரியோர்களை நமஸ்கரித்து, அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெற வேண்டியது முக்கியமான செயற்பாடாகும்.

சிராவண (ஆடி அல்லது ஆவணி) மாதம் பௌர்ணமிக்கு முன் வரக்கூடிய வெள்ளிக்கிழமையன்று சுமங்கலிப் பெண்கள் வரலட்சுமி விரதபூஜையைச் சிறப்பாகச் செய்வார்கள்.

விரதமனுஷ்டிக்கும் சுமங்கலிகள் அன்றைய தினம் கோயிலில் அல்லது வீட்டில் குறிப்பிட்ட இடத்தைத் தூய்மைப்படுத்தி, மண்டபத்தில் அழகாகக் கோலமிட்டு, நெல்லைப் பரப்பி அதன் மீது ஒரு தாம்பாளத்தில் அரிசியைப் பரப்பி அதன்மீது தங்கம், வெள்ளி அல்லது செப்புக்குடத்தை ஸ்தாபனம் செய்து அரிசி அல்லது நீரினால் அக்குடத்தை நிரப்பி மாவிலைக் கொத்து, தேங்காய், சந்தனம், குங்குமம், அக்ஷதை, பட்டு, மாலை, புஷ்பங்கள் என்பவற்றால் அலங்கரித்து அக்கலசத்தில் மேல் மஹாலஷ்மியின் பிரதிமையும் காப்பையும் வைத்து பூஜை செய்ய வேண்டும். அன்றையதினம் பூஜையில் வைத்த நோன்புக் கயிற்றை (காப்பை) வலது கையில் அணிய வேண்டும்.

மேற்கூறிய வரலட்சுமி பூஜைக்கென வகுக்கப்பட்ட கிரமங்களுடன் மஹாலக்ஷ்மியை சிரத்தையுடன் வழிபட்டால் வாழ்நாள் முழுவதும் தனம், தான்யம், கல்வி, இளமை, ஆரோக்கியம், ஸம்பத்துக்கள், சந்தானவிருத்தி, சகல மங்களங்களும், அஷ்டலக்ஷ்மி கடாக்ஷமும், தீர்க்க சுமங்கலிப்பேறும் வரலட்சுமியின் அருளால் தனதான்ய சம்பத்துக்கள் அனைத்தும் கிடைக்கப் பெறும்.

பார்வதிதேவியே இவ்விரதத்தையனுஷ்டித்து சத்புத்திர ஸபத்தைப் பெற்றிருக்கின்றாள். சித்திரதேவி என்ற கணதேவதை இவ்விரதத்தையனுஷ்டித்து சாபம் நீங்கப்பெற்று குஷ்டரோகத்தில் இருந்து விடுபட்டாள். சாருமதி என்ற பெண் இவ்விரதத்தை மேற்கொண்டு சகல சௌபாக்கியங்களையும் பெற்றிருக்கின்றாள். விக்கிரமாதித்தியன் நந்தனிடமிருந்து ராஜ்ஜயத்தைப் பெற்றதும் மனைவியில்லாத நந்தன் இவ்விரதம் மேற்கொண்டு அழகிய மனைவியையடைந்ததும் அவள் பிள்ளைப் பேற்றிற்காக இவ்விரதம் இருந்து மூவுலகையும் காக்கும் மகனையும் பெற்றாள் என்பதும் இவ்வரலட்மி விரத பூஜையின் மகிமையேயாகும்.

**ம.பாலகைலாசநாதசர்மா**
விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்.

## நல்லூர் ஆலயச் சூழலின் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 31

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருவிழாவை முன்னிட்டு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் அபிவிருத்தி உதவியாளர் திருமதி மகிந்தினி விஜயகுமார் தலைமையில் ஆன்மீக நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு "நல்லைநகர் நாவலர் பிறந்திலரேல்..." என்னும் தலைப்பில் செஞ்சொற் செல்வர் ச.நவநீதனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

* * *

நல்லூர் பெருந் திருவிழாவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையில் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் தெய்வீக இசையரங்கு நிகழ்வு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறுகின்றது.

இந்நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு இசைக்கச்சேரி இடம்பெறும். பாட்டு - குமரேஸ் பஞ்சமூர்த்தி, வயலின் - ஏ. ஜெயராமன், மிருதங்கம் - எஸ்.துரைராசா, கெஞ்சிரா - செல்வன் கே.நந்தகுமார், முகர்சிங் - எஸ்.செந்தூரன்.

(201)






# நல்லூர் பெருந்திருவிழாக் கால உதயனின் சிறப்பம்சம்

## வரம் தந்து எமைக் காக்க வருவாய்!

அயிலேந்தி மயிலேறிக் குருவாய்
அடியாரின் துயர்நீக்க வருவாய்
எயில்மூன்று எரித்தசிவன் மைந்தா
எழில் கொஞ்சும் நல்லூரின் கந்தா
துயில்கின்ற போதிலும் துன்பம்
தொடர்கின்ற தெப்போது இன்பம்
மயிலோனே இன்னுமேன் மௌனம்
வரந்தந்து எமைக் காக்க வருவாய்!

கவிஞர் - நயினை இராதுலன்.

## மனமிரங்கி அருள்வாய்

கோல மயில் மீதேறி வள்ளி தெய்வயானையுடன்
கொஞ்சும் அழகுடனே பவனிவரும் கந்தா!

ஞாலத் தவத்தாலே தந்தை சிவபெருமானுக்கே
ஞானம் போதித்த சுவாமிநாதனே!

காலம் செய்த கோலத்தால் நாம் படும் பாடு கண்டு
கரையாதோ உன் மனம்

வேலவனே! நிம்மதியாய் நாம் இங்கு வாழ்ந்திட
வெற்றிவடிவேலா இரங்காயோ மனம்.

உதிஸ்டிரன், நல்லூர்.

## வள்ளிக்கு இனித்த கனியே

ஞானக் கனிக்கென ஞாலம் வலம்வந்த
ஞானவேல் தாங்கும் ஞான பண்டிதனே
ஏனக்கனி உனக்கு கந்தக் கனியே
ஏற்றித் தொழுமடியவர் இதயக் கனியே
தேன்தினை ஊட்டிய வள்ளிக்கினித்த கனியே
தேவுலகார் போற்றித் தொழும் வெற்றிக்கனியே
மான்விழியாள் குஞ்சரியின் மனமுவந்த கனியே
மேன்புகழ் நல்லைப் பதிவிளங்கும் அருட்கனியே.

அல்வையூர் சி.சிவநேசன்.

## நல்லை நாதனைப் பாடுவோம்

**பல்லவி**

நல்லையிலே கோவில் கொண்ட நாதா – உன்னை
இவ்வுலகில் பாடுதலே இன்பம்
(நல்லை)

**அனுபல்லவி**

தொல்லை மிகு இந்த ஊரில் தோன்றியதே பாவம்
என்றுணர முன்னர் உந்தன் மணி கேட்கும் – அந்த
தொல்லைகளெல்லாமகன்று தோன்றிடுமின்பம் நெஞ்சில்
வல்வினை அகற்றுமுந்தன் நல்லை மணி ஓசை
(நல்லை)

**சரணம்**

கந்தனே குகனே வேலே கடம்பனே முருகா என்று
சிந்தனை நிறையவுந்தன் சொல் நீளும் – அதைச்
சொல்லுகின்ற போது வந்து சொக்கின்ற இன்பமெல்லாம்
கந்தனே நல்லை முருகா நின்தாள் சரணம் ஐயா.
(நல்லை)

- சுபா. பிரணவன்.

## அபயமடைந்தோம்; அருள் தா முருகா

தமிழினத்தின் தாழ்விலாத் தலைவனே!
தங்கமயில் வாகன வழவேலவனே!
எங்கும் நிறைந்த பரம்பொருளே!
ஏழைகட்கு தவுகின்ற பெரியோனே!
நாளைக்காவது வமைதி கிடைத்திடும்!
நம்புகின்றோம்! நல்லூர் வழவேல்வனே!
அபயமடைந்து விட்டோ மன்பரைக்
காப்பது தானுன் கடன் வேலவனே!

மாருதி - ஆவரங்கால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலய பெற்றோர்தின நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன.
நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் (தமிழ்) செல்வி வி.கந்தையா மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்துவைப்பதையும் மாணவர்களின் கலைநிகழ்வுகளின் ஒருசில காட்சிகளையும் படங்களில் காணலாம். (119)

# வவுனியா அகதிமுகாம்களிலுள்ள சிறுவர்கள் அரச சார்பு ஆயுதக்குழுக்களால் கடத்தல்!

## அமெரிக்க அமைப்பு அதிர்ச்சித் தகவல்

கொழும்பு,ஜூலை31

வவுனியா அகதிமுகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள சிறுவர்கள் அரச சார்பு ஆயுதக் குழுக்களால் கடத்தப்படுகின்றனர் என அமெரிக்காவைச் சேர்ந்த சிறுவர் போராளிகளைத் தடுப்பதற்கான கூட்டமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிறுவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாம்களுக்குள் ஆயுதக் குழுக்கள் செல்வதைத் தடுப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்கவேண்டும் என்றும் அந்த அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும் முன்னாள் போராளி சிறுவர்கள் தெளிவான காரணங்களின்றி நீண்ட காலம் தடுத்துவைக்கப்படக்கூடும் என்றும் இந்த அமைப்புச் சுட்டிக்காட்டியுள்ளது.

சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான ஐ.நா. பாதுகாப்புச் சபையின் செயற்குழுவிற்கு வழங்கியுள்ள அறிக்கையிலேயே இதனை தெரிவித்துள்ள இந்த அமைப்பு இது குறித்து மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

தடுப்பு முகாம்களில் வைத்து பாதுகாப்புப் படையினரால் கொண்டுசெல்லப்படும் சிறுவர்கள் தொடர்பாக அவர்களுடைய குடும்பத்தவர்களுக்கு எவ்வித தகவலும் வழங்கப்படுவதில்லை என இந்த அமைப்பின் இயக்குநர் விக்டோரியா போர்பஸ் அடம்ஸ் தெரிவித்தார்.

அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா, புனர்வாழ்வு முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனரா அல்லது காணாமற் போயுள்ளனரா என்பது குடும்பத்தவர்களுக்கு தெரியாமல் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

முகாம்களுக்குள் செல்வதற்குச் சுயாதீன மனித உரிமை கண்காணிப்பாளர்களுக்குக் தடையற்ற அனுமதியை வழங்குவது, முகாமில் உள்ளவர்கள் குறித்த பதிவேடு ஒன்றை பேணுவது போன்ற சிறிய நடவடிக்கைகள் மூலம் முகாமில் உள்ள சிறுவர்களின் பாதுகாப்பை பேணலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமது பிள்ளைகள் எங்கு கொண்டு செல்லப்படுகிறார்கள் என்பது குறித்து குடும்பங்களுக்கு அறிவிக்கவேண்டும். மேலும் அவர்களை சந்திப்பதற்கான அனுமதி வழங்கப்படவேண்டும்.

அரச சார்பு ஆயுதக் குழுக்களால் சிறுவர்கள் பலவந்தமாக இணக்கப்படுவது, பணத்திற்காக கடத்தப்படுவது போன்ற நடவடிக்கைகள் தொடர்கின்றன எனத் தகவல்கள் கிடைத்துள்ளன.

அவர்கள் தற்போது வவுனியா நகரில் உள்ள வர்த்தகர்களிடமிருந்து பாதுகாப்பு நிதி சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்திலும் இந்த நிலை காணப்படுகின்றது.

ஆயுதக் குழுக்கள் பாதுகாப்பு படையினரின் தெளிவான ஆதரவுடன் இயங்குகின்றன. இடம்பெயர்ந்த மக்களின் முகாம்களுக்கும் சரணடைந்தவர்களுக்கான நிலையங்களுக்கும் செல்வதற்கு ஆயுதக் குழுக்களுக்கு அனுமதி வழங்குகின்றனர்.

மேலும் விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளவர்களை இனம் காண்பதற்கும், ஆயுதக் குழுக்களை பயன்படுத்துகின்றனர்.

சிறுவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாம்களுக்குள் இந்த ஆயுதக் குழுக்கள் நுழைவதை தடைசெய்வதற்கு இலங்கை அதிகாரிகள் உடனடியாக செயற்படவேண்டும். தொடரும் ஆட்கடத்தல்கள் மற்றும் படையணிகளில் சேர்த்தல் குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என விக்டோரியா போர்பஸ் அடம்ஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# சைவநெறிப்பரீட்சை: நவம்பர் 7ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை31

யாழ்.சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் நடத்தப்படும் அகில இலங்கைச் சைவநெறிப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த ஆண்டு தரம் 9,10,11 வகுப்புகளுக்கான தமிழ்மொழிப் பரீட்சையும் நடத்தப்படவுள்ளதாகவும் எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி தமிழ்மொழிப் பரீட்சை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவம் தேவையான பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களை பரீட்சைப் பகுதியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு தேர்வுச் செயலாளர் இரா.செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (204)

# உபகரணம் திருத்துதல் பயிற்சிநெறி ஆரம்பம்

நவாலி,ஜூலை31

மாற்று ஆற்றலுடையோருக்கான மின்சார உபகரணங்கள் திருத்தல் பயிற்சிநெறியின் ஆரம்ப நிகழ்வு சுன்னாகம் தொழிற் பயிற்சி நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

மாவட்ட சமூக சேவை அலுவலர் ஆ.ஞானவேல் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கமும் சிறப்பு விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசனும் கலந்துகொண்டனர். (203-100)


# லண்டனில் பிரபல பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு வாய்ப்புக்களை வழங்கும் Flex Advertising Institute

சர்வதேசரீதியில் பிரபல்யமான UK இலுள்ள
University of Wales
University of Hull
University of Green wich
Birmingham City University
Leeds Metropolitan University
வழங்கும் அங்கீகாரம் பெற்ற பட்டங்களை முன்னணி கல்வி நிறுவனங்களான City of London College, Don caster College, Stratford College என்பவற்றில் இணைந்து பெற்றுகொள்ளும் அரிய வாய்ப்பினை Flex Advertising நிறுவனம் மாணவர்களுக்கு வழங்கிவருகிறது.

அந்த வகையில் மாணவர்கள் குறைந்த கட்டணத்தில் விரும்பிய பாடநெறிகளைக் குறித்த கல்வி நிறுவனங்களில் தொடரக் கூடியதாக மிகக் குறுகிய காலத்தில் அனுமதிகள் (offer letter within 3 days) பயண ஏற்பாடுகள் என்பவற்றைச் செய்து கொடுப்பதில் Flex அரும்பணியாற்றி வருகிறது.
Information Technology
Finance & Accounting
Business Management
Fine Arts
Graphic Design
Criminology
Engineering
Quantity Surveying
Social Science
ஆகிய துறைகளில் உலக அங்கீகாரம் பெற்ற Degree பெறக்கூடிய அரிய வாய்ப்புக்கள் கிடைக்கிறது.

மாணவர்களின் விருப்புக்கேற்ப உயர் கல்விக்கான துறையினை இனங்கண்டு குறிப்பிட்ட நாடுகளில் பிரபல கல்வி நிறுவனங்களில் அனுமதியினைப் பெற்றுக் கொடுப்பதிலும் அதற்கான வீசா ஒழுங்குகள், பத்திரங்கள் தயாரித்தல் என்பவற்றை மிகத்துரிதகதியில் முற்றிலும் இலவசமாக மேற்கொள்கிறது.

விளம்பர விவரணம்

குறிப்பிட்ட நாடுகளில் விசா அனுமதியைப் பெறுவதற்கு மாணவர்களின் சொந்த வங்கிக் கணக்கில் அல்லது கூட்டுக் கணக்கில் ஆகக் குறைந்தது! நாள் நிதி இருப்பு (One day Bank Balance) போதுமானது G.C.E. (O/L) உடன் TELTS இன்றி மிக விரைவான அனுமதிகள், பகுதிநேர வேலை வாய்ப்பு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படுகின்றது.

* Free Air port pick up ( From UK to Hostel)
* Part - time Job Guaranteed
* Internet Broad Band வசதியுடன் Accommodation

என்பன போன்ற சகல ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

இவ்வாறான அரிய பல சேவைகளை UK இன் பிரபல கல்வி நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்ற இலங்கைப் பிரதிநிதிகளான Flex Advertising Institute நிறுவனம் ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் தாம் விரும்பும் பாடநெறிக்கான அனுமதியைப் பெறுவதற்கு பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

1. சுயவிவரக்கோவை CV
2. கடவுச்சீட்டின் தகவல் பக்க பிரதி
3. பிறப்புச்சான்றிதழ் பிரதி (ஆங்கிலம்)
4. கல்வித்தகைமை (O/L, A/L முதலியன)

மேலதிக விவரங்களை Flex Advertising Institute, இல.04, IBC வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06 என்ற முகவரிக்குச் சமுகம் தருவதன் மூலமோ அல்லது 0777- 761346 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்வதன் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.








வாதரவத்தைப் பிரதேசத்தில் 'நிஷா' புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தால் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அண்மையில் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகாமம் கல்வி வலயத்தினால் மாற்று வலுவுடைய மாணவர்களுக்கு இடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் இடம்பெற்ற மாணவர்களின் விளையாட்டு நிகழ்வுகளைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள் செப்ரெம்பரில்

அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் செப்ரெம்பர் மாதம் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளன.

முதல் கட்டமாக 5,6,7ஆம் திகதிகளில் வலைப்பந்தாட்டம் ஹங்வெலராஜசிங்க மத்திய மகா வித்தியாலயத்திலும் -

சதுரங்கப் போட்டிகள் வந்தளை புனித அந்தோனியார் வித்தியாலயத்திலும் -

உடற்பயிற்சிப் போட்டிகள் நீர்கொழும்பு புனித மரியா கன்யா ராமயா வித்தியாலயத்திலும் -

உதைபந்தாட்டப் போட்டிகள் நீர்கொழும்பு டொன்.பொஸ்கோ விளையாட்டு மைதானம், புனித மரியா விளையாட்டு மைதானம், மேஜர் ராஜ் விளையாட்டு மைதானம் மென்டிஸ் விளையாட்டு மைதானம் என்பவற்றில் நடைபெறவுள்ளன.

உதைபந்து கொழும்பு விகார மகாதேவி பூங்காவைச் சுற்றியும் டெனிஸ் போட்டிகள் கொழும்பு டெனிஸ் சங்க தலைமையக மைதானத்திலும் நடை பெறவுள்ளன.

இரண்டாம் கட்டப் போட்டிகள் செப்ரெம்பர் 12, 13, 14ஆம் திகதிகளில் நடைபெற ஏற்பாடாகின்றது. ஹஸ்வெல ராஜசிங்க மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் கரப்பந்தாட்டப் போட்டிகளும் வத்தளை குருத்ரா ஹொக்கி விளையாட்டு மைதானம், பேனாட் அஸ்விஹார விளையாட்டு மைதானம், எட்வேட் ஹொக்கி விளையாட்டு மைதானம் என்பவற்றில் ஹொக்கி போட்டிகளும்: -

கொழும்பு ஸ்ரீ சுமங்கல ஆண்கள் வித்தியாலயம் (பழையது) பாணந்துறை இராணுவ முகாம் மைதானம், ஜோன் வித்தியாலய மைதானம், பாணந்துறை ஹஜன விளையாட்டு மைதானம், வாதுல மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானம் என்பவற்றில் மென்பந்து கிரிக்கெட் போட்டிகளும்,

ஹேனேகம மகாவித்தியாலய மைதானத்தில் கபடிப் போட்டியும் எல்பட் பீரிஸ் விளையாட்டு மைதானம் கட்டுக்கந்த ஸ்ரீ சங்க போதி வித்தியாலயம், தங்கொட்டுவ ஜெயக்கொடி விளையாட்டு மைதானம், லுணுவில அனுருத்த மகா வித்தியாலய விளையாட்டு மைதானம் என்பவற்றில் எல்லே போட்டியும் -

கொழும்பு டி.எஸ்.சேனநாயக்க விளையாட்டு மைதானம், ஆனந்தா வித்தியாலயம், சென்.யோசேப் பெண்கள் வித்தியாலய மைதானம் (நுகெகொட) தெகிவளை, புனித பவுலே கன்ராமய விளையாட்டு மைதானம் என்பவற்றில் மேசைப் பந்துப் போட்டிகளும் நுகேகொட புனித ஜோன் வித்தியாலயத்தில் கரம் போட்டிகளும் -

கல்கிசை புனித தோமஸ் வித்தியாலய உள்ளக மைதானத்தில் மேசைப் பந்தாட்டப் போட்டிகளும் - புனித தோமஸ் வித்தியாலய உள்ளக விளையாட்டு மைதானத்தில் பட்மின்ரன் (பூப்பந்தாட்டம்) போட்டிகளும் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட பாடசாலைகளின் விளையாட்டுக் குழு செயலாளர் மு.நடராசா அறிவித்துள்ளார். (04-86)

## மானிப்பாய் நவோதயா ஆங்கிலப் பாடசாலை துடுப்பாட்டப் போட்டியில் வெற்றி

நவாலி, ஜூலை31

மானிப்பாய் நாவோதய ஆங்கிலப் பாடசாலைக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையே அண்மையில் நடைபெற்ற துடுப்பாட்டப் போட்டியில் மானிப்பாய் நாவோதய ஆங்கிலப் பாடசாலை வெற்றி பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் செ. நடராசா கலந்து கொண்டார். (04 - 100)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற

## பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்திலிருந்து 5 அணிகள் தகுதி

அண்மையில் மன்னாரில் வடமாகாண பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டியில் வடமராட்சி பருத்தித்துறைக் கல்விக்கோட்டத்தில் இருந்து நான்கு அணிகள் முதலிடத்தைப் பெற்று அகில இலங்கை ரீதியில் செப்ரெம்பரில் நடைபெற உள்ள போட்டிகளுக்குச் செல்லத் தகுதி பெற்றுள்ளன.

மாகாணமட்டத்தில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி 19 வயது ஆண்கள், 15வயது ஆண்கள், பரு. வட இந்து மகளிர் கல்லூரி 19வயது பெண்கள் ஆகிய அணிகள் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளன.

அத்துடன் பரு. கலட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆண்கள் அணி கபடிப்போட்டியில் முதலாம் இடத்தையும் பரு.மெதடிஸ் பெண்கள் உயர் பாடசாலை 17வயது அணியினர் வலைப்பந்தாட்டத்தில் இரண்டாம் இடத்தினையும் மாகாண மட்டத்தில் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (04-253)

# பெண்களுக்கான எல்லே போட்டியில் யாழ்.அணி வடமாகாணச் சம்பியனானது!

வலி.வடக்கு,ஜூலை31

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் வடமாகாண மாவட்டங்களுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டியில் யாழ்.மாவட்ட அணி இனிங்சினால் வெற்றி பெற்றுள்ளது.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் மன்னார் மாவட்ட அணியும் யாழ்.மாவட்ட அணியும் மோதிக் கொண்டன.

முதலில் விளையாடிய யாழ்.மாவட்ட அணி 17 ஓட்டங்களைப் பெற்று அனைத்து இலக்குகளையும் இழந்தது.

18 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் முதல் இனிங்சில் விளையாடிய மன்னார் மாவட்ட அணி வீரர்கள் 05 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டம் இழந்தார்கள்.

யாழ்.மாவட்ட அணி இரண்டாவது இனிங்சையும் மன்னார் மாவட்ட அணியை தொடர்ந்து விளையாட கேட்டுக் கொண்டது. எனவே தனது இரண்டாவது இனிங்சில் விளையாடிய மன்னார் அணி வீரர்கள் 07 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டம் இழந்தார்கள்.

இதனால் ஆட்ட நிறைவில் யாழ்.மாவட்ட அணி 17:12 ஓட்டங்கள் என்ற நிலையில் இன்னிங்ஸில் வெற்றி பெற்று சம்பியனானது. (04-186)

## வலிகாமம் கல்வி வலய

# விசேட கல்விச் செயற்பாட்டு மாணவர்களுக்கான விளையாட்டுப்போட்டி முடிவுகளில் சில

வலி.வடக்கு, ஜூலை 31

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் விசேட கல்வி செயற்பாட்டுக்கான மாணவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி செயற்பாட்டுப் பிரிவினரால் வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

இப்போட்டியில் தென்மராட்சியில் இருந்து நவீல்ட் பாடசாலையும், யாழ்ப்பாணத்தில் இருந்து சிவபூமிப் பாடசாலையும் இப்போட்டிகளில் கலந்துகொண்டன.

விழி வலுக்குறைந்த மாணவர்களில் ஆண்களுக்கான போட்டி முடிவுகள் வருமாறு:

**10 வயதின் கீழ் 50 மீற்றர் ஓட்டம்**

அ.நவநீதன் (குட்டியபுலம் அ.த.க பாடசாலை), ம.மதுஷன் (இணுவில் மத்திய கல்லூரி), லோ.ரேனுஜன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி).

**75 மீற்றர் ஓட்டம்**

த.ஜனார்த்தனன் (தாவடி இ.த.க பாடசாலை), த.மதுர்ஜன் (உடுவில் மல்வத்தை றோ.க.த.க. பாடசாலை), ம.மதுஷன் (இணுவில் மத்திய கல்லூரி).

**100 மீற்றர் ஓட்டம்**

அ.நவநீதன் (குட்டியபுலம் அ.த.க பாடசாலை), இ.நிதர்சன் (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), ம.மதுர்ஜன் (உடுவில் மல்வத்தை றோ.க.த.கலவன் பாடசாலை).

**பந்தெறிதல்**

த.தேனுசன் (இணுவில் இந்துக்கல்லூரி), த.மதுர்ஜன் (உடுவில் மல்வத்தை றோ.க.த.க. பாடசாலை), இ.நிதர்சனன் (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**நின்று நீளம் பாய்தல்**

ஜீ.குணசாந்தன் (இளவாலை மாரீசன் கூடல் றோ.க.த.க. பாடசாலை), த.தேவனேசன் (இணுவில் இந்துக்கல்லூரி), தே.நிதுர்சன் (தொல்புரம் அ.மி.த.க. பாடசாலை).

**15 வயதுப் பிரிவுக்கான போட்டிகள்:**

**100 மீற்றர் ஓட்டம்**

ம.கிருஷாந் (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்), ந.நிரோஜன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), ர.இங்கர்சாள்ஸ் (கந்தரோடை தமிழ்க்கலவன் பாடசாலை).

**200 மீற்றர் ஓட்டம்**

ம.கிருஷாந் (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்) [illegible] ரோறியாக் கல்[illegible] குமார் (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலை).

**நீளம் பாய்தல்:**

ர.நிரோஜன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), இ.ரகுசாந் (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்), வி.லக்சன் (சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி).

**உயரம் பாய்தல்**

தி.அனோஜன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), இ.ரகுசாந் (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்), இ.கவிராஜ் (அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்).

**குண்டெறிதல்**

ம.கிருஷாந் (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்), ஞா.மதுஷன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), வி.குகராஜன் (வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி).

**தட்டெறிதல்**

ஞா.மதுஷன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), வி.குகராஜன் (வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி), தி.அனோஜன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி).

**ஈட்டி எறிதல்**

ஞா.மதுஷன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), வி.ரகுசாந் (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்), தி.கஜேந்திரநாதன் (பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம்).

**20 வயதின் கீழ் ஆண்கள்:**

**100 மீற்றர் ஓட்டம்**

செ.கவிஸ்ரன் (பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோ.க.த.க. பாடசாலை), த.சாந்தகுமார் (சுதுமலை வடக்கு அ.த.க. பாடசாலை), இ.கிருஷாந் (பண்டத்தரிப்பு பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்).

**200 மீற்றர் ஓட்டம்**

மு.வளர்சுதன் (அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்), செ.கலிஸ்ரன் (பண்டத்தரிப்பு ஜெசிந்த றோ.க.த.க. பாடசாலை), இ.கிருசாந் (பண்டத்தரிப்பு பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்).

**நீளம் பாய்தல்**

மு.வளர்சுதன் (அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்), செ.கலிஸ்ரன் (பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோ.க.த.க. பாடசாலை), நா.ஜீவசுஜீவன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி).

**உயரம் பாய்தல்**

சி.சயந்தன் (ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை), ம.நிரோஜன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), செ.சுதர்சன் (ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை).

**குண்டெறிதல்**

இ.சசிலோஜன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சு.ஹரிகரன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), மு.வளர்சுதன் (அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்).

**தட்டெறிதல்**

சு.ஹரிகரன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), இ.சசிலோஜன் (சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), நா.ஜீவசுஜீவன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி).

**ஈட்டியெறிதல்**

நா.ஜீவசுஜீவன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), ஜெ.சன்தயன் (சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), சு.ஹரிகரன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி). (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மக்களின் பிரச்சினைகளை உலகுக்கு எடுத்துக் கூறியது தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியே



**"வன்னியில் அகப்பட்டுள்ள மக்களை பாதுகாப்பாக அப்புறப் படுத்த ஐ.நாவை அழைப்பதே ஒரே வழி. இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பீதியுடன் உள்ளனர்."**

**-என்கிறார் த.வி.கூ.தலைவர் ஆனந்தசங்கரி!**

இந்த நாட்டின் ஜனாதிபதி என்ற வகையிலும் நாட்டு மக்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர் என்ற வகையிலும் குறைந்தபட்சம் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் உதவியைப் பெற்று மேலும் தாமதமின்றி வன்னியில் அகப்பட்டுள்ள மக்களை பாதுகாப்பாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தகையவொரு ஒழுங்கு இல்லாத பட்சத்தில் ஐ.நாசபையை அழைப்பதே எங்களுக்கு ஒரேவழி. அன்றேல் ஏதாவது நட்பு நாடுகளின் உதவியைப் பெற வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் வீ.ஆனந்தசங்கரி கோரிக்கை விடுத்துள்ளார். இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை சம்பந்தமாக அரசின் நிலைப் பாட்டுடன் தன்னால் ஒத்துப்போக முடியாதுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் ஆனந்தசங்கரி ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள நீண்ட கடிதத்தின் சுருக்கம் வருமாறு:

இலங்கையின் வரலாறு காணாத உணர்ச்சி மிக்க இடம்பெயர்ந்த மக்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் அசட்டையீனம் காட்ட முடியாது. நான் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் சுட்டிக்காட்டியதுபோல பல்வேறு வழிவகைகள் மூலமாகக் கிடைத்த மாறுபட்ட தகவல்களின்படி முதலாவதாக இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை சம்பந்தமாகவும், அந்த எண்ணிக்கையினருக்கு ஏற்பட்டுள்ள பல்வேறு தேவைகள் சம்பந்தமாகவும் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளமையால் அப் பிரச்சினையை எவ்வாறு அணுக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்தவர்களில் சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியவர்கள், நலிவுற்றோர், அவயவங்களை இழந்தோர் ஆகியோர் பற்றி அவர்களின் உறவினர்கள் பெரும் கவலை அடைகின்றனர். அவர்கள் படுகின்ற துன்பத்தால் சர்வதேச சமூகத்தின் மத்தியில் அவர்களுக்கு பெரும் அனுதாபம் ஏற்பட்டுள்ளது. இப்போதுதான் சர்வதேச சமூகம் பகிரங்கமாக விடுதலைப்புலிகள் மீது குற்றம் சுமத்தி இடம்பெயர்ந்த மக்களை விடுவிக்காமைக்குக் கண்டனமும் தெரிவிக்கின்றது. அதே நேரத்தில் சர்வதேச சமூகம், மனித உரிமை அமைப்புக்கள், ஐ.நா. ஸ்தாபனம் போன்றவை அவர்கள் பாதுகாப்பாக அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குக் கொண்டு வரப்படும்வரை சரியான முறையில் அம் மக்கள் கவனிக்கப்பட வேண்டும் என எதிர் பார்க்கின்றன. கடந்த 20, 25 ஆண்டு காலமாக விடுதலைப் புலிகளுக்கு உணவு அளித்துவந்த அரசு இம்மக்கள் விடுவிக்கப்படும்வரை தொடர்ந்து உதவ வேண்டிய கடமை அரசுக்கு உண்டு.

வடக்கே கடமையாற்றும் அரச அதிபர்கள் தரும் புள்ளி விவரங்கள் விடுதலைப் புலிகளின் வற்புறுத்தலால் தயாரிக்கப்பட்டவை என கூறி அவற்றை முற்றுமுழுதாக நிராகரிக்க முடியாது. இதுவரை காலமும் அரச ஊழியர்களால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கைகள் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவையாகும். சனத்தொகை பற்றிய புள்ளி விவரம் விடுதலைப் புலிகளின் தலையீட்டால் மிகைப்படுத்தப்பட்டமை உண்மையே. ஆனால் அனேகமாக ஏனைய விவரங்கள் அத்தனையும் பெறுமதிமிக்கதும், உண்மையானதுமாகும். கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்ட அதிபர்கள் தத்தம் மாவட்டத்தில் முறையே 1,95,832 பேரும் 2,20,311 பேரும் மொத்தம் 4,16,143 பேர் 30.12.2007இல் வசித்து வந்ததாகக் கணக்கிட்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் அழுத்தத்தால் இந்த எண்ணிக்கை இரண்டுமடங்காக காட்டப்பட்டதாக எடுத்துக் கொண்டாலும் கூடக் குறைந்த பட்சம் 2,00,871 பேர் அம் மாவட்டங்களில் இருந்திருக்க வேண்டும். வவுனியா, மன்னார் ஆகிய மாவட்ட மக்களைச் சேர்ந்த 2,85,674 பேர் இக்கணக்கில் உள்ளடக்கப்படவில்லை. வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த 500,00 பேர் இடம்பெயர்ததாக எடுத்துக்கொள்ளப்பட்டால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மொத்தமாகக் குறைந்தபட்சம் 2,58,000 மக்கள் இருந்திருக்க வேண்டும். இவற்றில் 55,000 மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத் திற்குள் வந்து சேர்ந்துள்ளமையால் இத்தொகையை கழித்து மதிப்பிடின் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் குறைந்தபட்சம் 2,000,00 இற்கு மேற்பட்ட மக்கள் இருக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக இரண்டு லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் தமது உறவினர்களுக்கு ஏது நடந்ததோ என அறிய முடியாது மிக்க கவலையும், பீதியும் கொண்டுள்ள உறவினர்களின் பயத்தையும், பீதியையும் போக்க வேண்டிய கடமை அரசுக்கு உண்டு. தற்போதைய நிலையில் சரியான உண்மை நிலையை அறியும் வரைக்கும் குறைந்த பட்சம் 250,000 மக்களுக்கேனும் அரசு தொடர்ந்து உணவும், மருந்து வகைகளும் அனுப்ப வேண்டியது தவிர வேறு வழியில்லை. ஆனால் என்னுடைய கணிப்பின்படி அங்கே 300,000 மக்கள் வரை இருக்கின்றார்கள் என்பதே. அரசு இதை தன் நற்பெயரை காப்பாற்றுவதற்கு மட்டுமன்றி இந்த நாட்டுப் பிரஜைகளுக்கு செய்ய வேண்டிய கடமையாக செய்யவேண்டும்.

80,000 மக்களோ அன்றி 200,000 மக்களோ என்பதல்ல முக்கியம். மக்கள் சொல்லொண்ணா துன்பங்களை அனுபவிக்கிறார்கள் என்பதே உண்மையாகும். உள நோயால் பாதிக்கப்பட்டு பெரும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ள மக்கள் பிரேதங்களுடன் படுத்து உறங்குவதும் தாம் அன்போடு நேசித்த உறவினர்களின் பிரேதங்களை எரிக்கவோ, அடக்கம் செய்யவோ வசதியின்றி வீசி எறிவதும் சகஜமாகிவிட்டது. அவர்களுக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் துர்நாற்ற மெடுக்கின்றன. இருப்பினும் தம் உறவினர்களில் ஒருவரையேனும் விட்டுவிட்டு வெளியேற அவர்கள் தயாரில்லை. முழுக்குடும்பமாக வெளியேறுவதையே விரும்புகின்றனர். கொடிய விஷ பாம்புகள், விஷ குளவிகள், நுளம்பு போன்ற ஜந்துக்களுடன் வாழ வேண்டிய நிர்ப்பந்தம். எந்நேரமும் ஒரு கொடிய தொற்று நோய் ஏற்படக்கூடிய அபாயம். எல்லாவற்றுக்கும் மேலாக தினம் 24 மணித்தியாலமும் குண்டு விழுமோ, எத்திசையில் இருந்து ஷெல் அடியும், பீரங்கித் தாக்குதலும் ஏற்படுமோ என்ற நிரந்தர பயத்துடனும், பீதியுடனும் வாழ்கின்றார்கள்.

இங்கே குறிப்பிட்டவை மக்கள் படும் துன்பங்களில் ஒரு சிறு பகுதியே வெளிக்காட்டப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் 2500 ச.கி.மீற். விஸ்தீரணம் கொண்டவை. அவர்களில் இரண்டு லட்சம் பேர் 25 ச.கி.மீற். விஸ்தீரணம் கொண்ட நிலப்பரப்பில் வாழ்வது மானிடர்களால் முடியாத காரியமாகும். நாட்டில் ஒரு பெரும் அனர்த்தம் ஏற்படுவதற்கு முன் அம்மக்கள் விடுவிக்கப்பட வேண்டும். ஆகவே தயவு செய்து இந்த அப்பாவி மக்கள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்படும்வரை இராணுவத்தை முன்னேறிச் செல்ல வேண்டாமென ஆலோசனை வழங்கவும். பல்லாயிரக் கணக்காக மக்களின் உயிர் ஊசலாடுகிறது. பல்லாயிரக்கணக்கான தோழர்களைத் தியாகம் செய்து இராணுவத்தினர் இவ்வளவு காலமும் எடுத்த நற்பெயரை ஒரு சிறு அசம்பாவித சம்பவத்தால் இழந்து விடக்கூடாது. 4,000 மக்கள் காயப்பட்டு திருமலைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள் என்றால் எத்தனை பேர் மரணித்திருப்பார்கள் என்பதை ஊகிக்கமுடியும். யாருடைய தவறினால் இவர்கள் மரணித்தார்கள் என்பதல்ல முக்கியம். அவர்களைக் காப்பாற்ற பல்வேறு வசதிகள் அரசுக்கு இருந்தும் அவ்வாறு அம்மக்களை இறக்கவிட வேண்டுமா என்பதே இன்று ஒவ்வொருவரும் எழுப்பும் கேள்வியாகும்.

நான் அரசியலில் லாபம் தேட முயற்சிக்கவில்லை. ஆனால் என்னுடைய கடமையை ஒரு தமிழன் என்றில்லாமல் இலங்கைப் பிரஜை என்ற கோதாவிலேயே இதைச் செய்கின்றேன். நீங்களும் நானும் எமது கடமையில் இருந்து தவறிவிட்டோம் என்று சர்வதேச சமூகம் குற்றம் சுமத்த இடமளிக்கக்கூடாது என்பதே எனது பெரு விருப்பமாகும்.

*நன்றி: வீரகேசரி (06.04.2009)*


## செயற்திட்டங்கள்

**யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வாழும் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் நான் அறிவேன் அவற்றில்....**

- ★ பல்லின மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தல்
- ★ இஸ்லாமிய மக்கள் உட்பட அனைத்து இடம்பெயர்ந்த மக்களையும் மீளக் குடியமர்த்துதல்
- ★ வடிகால் அமைத்தல்
- ★ குடிதண்ணீர்ப் பிரச்சினை தீர்த்தல்
- ★ உள்ளூர் சகல வீதிகளும், ஒழுங்கைகளும் சீர் செய்தல்
- ★ நவீன மத்திய பஸ் நிலையம் அமைத்தல்
- ★ நகர எல்லைக்குள் சீரான போக்குவரத்துச் சேவையை ஏற்படுத்துதல்
- ★ ஆதரவற்றோர் நல ஆணையாளர் பதவியை உருவாக்கி (Charity Commissioner) ஆதரவற்றோருக்கு உதவி அளித்தல்
- ★ நவீன நகர மண்டபம், விளையாட்டரங்கு, நீச்சல் தடாகம் போன்றவற்றை கட்டியெழுப்பி சகல குளங்களையும் புனரமைத்தல்
- ★ நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நுளம்புத் தொல்லையினை அறவே அழித்து சுகாதாரச் சீர்கேட்டை நீக்குதல்
- ★ வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் உள்ள உறவுகளை சாதகமாக்கி, புதிய செயற்றிட்டங்களை உருவாக்கி ("தொழில் வாய்ப்புக்காக" ஏங்கித் தவித்து பணிமனைக்கு தினமும் நடைபவனி செய்துவரும்) இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு அளித்தல்
- ★ உள்ளூர் தொழிலதிபர்களின் உதவியுடன் ஆடைத் தொழிலகம் ஒன்றை நிறுவி யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குதல்
- ★ வன்முறையாலும் யுத்தத்தாலும் பாதிக்கப்பட்ட அபலைகள், அங்கவீனர்கள் ஆகியோரின் நலன் பேணல்
- ★ சேரி ஒழிப்புத் திட்டம் செயற்படுத்தல்
- ★ புராதன கட்டடங்கள் யாழ்.கோட்டை, மந்திரிமனை போன்றவற்றை புனர்நிர்மாணம் செய்தல்.

- ★ வெள்ளை வானில் எங்கள் உறவுகள் கடத்தப்படுவதைத் தடுக்க!
- ★ பொய்யான பெயர்களைச் சொல்லி தொலைபேசி மூலமாக மிரட்டி பணம் பறிப்பதை நிறுத்த!
- ★ வர்த்தகப் பெருமக்களிடம் வரி, கப்பம் என்று மிரட்டி வசூல் செய்வதை ஒழிக்க!
- ★ தமிழ் சினிமாக்களில் வரும் 'தாதாக்கள்' போன்று ஆயுதங்கொண்டு அப்பாவி மக்கள் அச்சுறுத்தப்படுவதை அடியோடு இல்லாமல் செய்ய!
- ★ ஆயுத கலாசாரத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்து முடிவிற்குக் கொண்டு வருவேன்.

**உங்களுக்குக் கிடைத்துள்ள கடைசிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வாக்களிப்பீர் உதயசூரியனுக்கே!**

**அகிம்சையின் அடையாளம் உதயசூரியன்!** (சி/559977)

**வீ.ஆனந்தசங்கரி,**
தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி.

# தமிழர் விடுதலைக் கூட்டணி

# வீ. ஆனந்தசங்கரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே இரவில் 10 ஆயிரம் முஸ்லிம்கள் சீனாவில் காணாமல் போயினர்!

## ஜப்பான் வந்தடைந்த உய்குர் இனத் தலைவர் தெரிவிப்பு

டோக்கியோ, ஜூலை 31

''சீனாவில் சுமார் 10 ஆயிரம் உய்குர் இன இஸ்லாமியர்களைக் காணவில்லை. அவர்களை சீன அரசு கொன்றிருக்கலாம்'' என உய்குர் இனத் தலைவர் ரெபியா கதீர் பரபரப்பான குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

சீனாவின் சிஞ்சியான் மாகாணத்தில் உய்குர் என்ற இஸ்லாமிய பிரிவினர் அதிக அளவில் வசித்து வருகின்றனர். இவர்களுக்கும், பெரும்பான்மை இன சீனர்களுக்குமிடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டு வருகிறது. இந்த மாத ஆரம்பத்தில் அங்கு வெடித்த கலவரத்தில் 150 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

சீனாவில் சிஞ்சியான் மாநிலத்தில் உய்குர் முஸ்லிம்கள் தனிநாடு கோரி போராடி வருகிறார்கள். இவர்கள் துருக்கிய வம்சாவளியினராவர். கடந்த 5 ஆம் திகதி அவர்களுக்கும், சீனர்களுக்கும் இடையே இம் மோதல் ஏற்பட்டது. எனினும், அங்கு தற்போது இயல்பு நிலை திரும்பியுள்ளது. அதேவேளை, உய்குர் பிரிவினைவாதக் குழுக்கள் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்படும் என சீன அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சீனாவிலிருந்து வெளியேற்றப்பட்டு, அமெரிக்காவிலிருந்து செயற்படும் உலக உய்குர் சபையின் தலைவரான ரெபியா கதீர், ஐந்து நாள் பயணமாக ஜப்பான் வந்துள்ளார். இவர் ஜப்பான் ஆளும் கட்சியின் முக்கிய தலைவர்களை சந்தித்து, உய்குர் இன இஸ்லாமியர்களுக்கு ஆதரவு திரட்டவே வந்துள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

டோக்கியோவில் புதன்கிழமை ரெபியா கதீர் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். இச்சந்திப்பில் அவர் பேசுகையில், ''இந்த மாத ஆரம்பத்தில் சிஞ்சியான் மாகாணத்தில் கலவரம் மூண்டது. ஜூலை 5 ஆம் திகதியன்று ஒரே இரவில் சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமான உய்குர் இன இஸ்லாமியர்கள் காணாமல் போயுள்ளனர்'' - என்றார்.

''அன்றைய தினம் இரவில் மின்தடைப்படுத்தப்பட்டுள்ளது. இருட்டில் உய்குர் இனத்தவர்கள் சரமாரியாக சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். அடுத்த நாள் காலை மக்கள் விழித்துப் பார்த்த போது ஏராளமான உய்குர் இன ஆண்கள் காணாமல் போயுள்ளமையை அறிந்துள்ளார்கள்'' என்றும் ரெபியா கதீர் தெரிவித்தார்.

''உய்குர் இன மக்களை அழிக்க சீன அரசு முயற்சிக்கிறது. இதனை உலக நாடுகள் அறிந்து கொள்ள வேண்டும்'' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ரெபியா கதீரை ஜப்பானுக்குள் அனுமதிக்க வேண்டாம் என சீன அரசு முன்கூட்டியே வேண்டுகோள் விடுத்திருந்தது. எனினும், ஜப்பான் அரசு இதனைப் பொருட்படுத்தவில்லை. அத்துடன் இவரது பயணத்திற்கு அனுமதியும் அளித்து விட்டது. இதுகுறித்து சீன வெளிவிவகார அமைச்சகம் கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

அதேவேளை, ரெபியா கதீரை ஜப்பான் அரசு அழைக்கவில்லை என்றும், சில மக்கள் குழுக்கள்தாம் அவரை அழைத்துள்ளன என்றும் ஜப்பான் அரசுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக ஜப்பானுக்கும் சீனாவுக்குமிடையிலான உறவில் பாதிப்பு எதுவும் ஏற்படாது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகும் சாரா பொலின்

வாஷிங்ரன், ஜூலை 31

அலாஸ்கா மாநில ஆளுநர் பதவியிலிருந்து முறைப்படி விலகியுள்ள சாரா பொலின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடத் திட்டமிட்டுள்ளார். இவர் கடந்த துணை ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டவர். அத்தேர்தலில் குடியரசுக் கட்சி தோல்வியடைந்தது.

அலாஸ்கா மாநில ஆளுநராகவும் இருந்து வந்த சாரா பொலின், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிடத் திட்மிட்டுள்ளார். இதற்கு தயாராகும் வகையில், தமது ஆளுநர் பதவியை தற்போது இவர் ராஜினாமா செய்து விட்டார். அவரது பதவிக் காலம் முடிய இன்னும் ஒன்றரை வருடங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## வட நைஜீரியாவில் அதிரடி இராணுவ வேட்டை: 100 தீவிரவாதிகள் பலி; ஆயிரம் பேர் வெளியேற்றம்

மெய்டுகுரி, ஜூலை 31

வட நைஜீரியாவில் இஸ்லாமிய தீவிரவாதிகள் பதுங்கியிருந்த மசூதியொன்றுக்குள் நைஜீரிய துருப்புகள் புதன்கிழமை அதிரடி வேட்டையை மேற்கொண்டன. அப்போது துருப்புக்களுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே மூண்ட மூர்க்கமான சண்டையில், நூற்றுக்கு மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள் என இராணுவம் தெரிவித்துள்ளது.

நைஜீரியாவில் கடந்த சில தினங்களாக இஸ்லாமிய தீவிரவாதிகள் கடும் தாக்குதல்கள்நடத்தி வந்துள்ளார்கள். இவற்றில் பெரும் தொகையான சிவிலியன்களும் கொல்லப்பட்டுள்ளார்கள். முக்கிய தீவிரவாதிகள் இந்த மசூதிக்குள் பதுங்கியுள்ளார்கள் என்ற தகவல் கிடைத்தது. இதையடுத்து அதிரடி வேட்டை மேற்கொள்ளப்பட்டது என இராணுவ கொமாண்டர் மேஜர் ஜெனரல் சாலிஹ் மெய்னா குறிப்பிட்டுள்ளார்.

இம் மசூதிக்குள் புதன்கிழமை இரவு இத்திடீர் வேட்டை மேற்கொள்ளப்பட்டது. இச்சமயத்தில் தீவிரவாதிகளின் தலைவர் முஹமத் யூசுப் தனது 300 சகாக்களுடன் தப்பிவிட்டார். துருப்புக்களின் தாக்குதல்களைத் தாக்குப்பிடிக்க முடியாமல் பின்வாங்கி, இவர்கள் இரவில் தப்பியோடிவிட்டார்கள் என்றும் மேஜர் ஜெனரல் விவரித்துள்ளார்.

மசூதிக்குள் புதன்கிழமை நள்ளிரவு துருப்புகள் நுழைந்ததும் துப்பாக்கி வேட்டுகள் ஒலித்தன. அதேவேளை, வெளிப்பட்ட தீவிரவாதிகளுக்கும், துருப்புகளுக்குமிடையே உள்ளும் புறமும் கடும் சண்டை நடைபெற்றது. தீவிரவாதிகள் இச்சண்டையின்போது உள்ளூர் துப்பாக்கிகள், அம்புகள், வில்கள், இதர ஆயுதங்கள் ஆகியவற்றையும் பயன்படுத்தினார்கள் என ஏ.பி. நிருபர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சண்டை ஓய்ந்தபின்னர் நான் அவ்விடத்துக்குச் சென்றேன். கட்டடத்துக்குள் 50 சடலங்கள் கிடந்தன. வெளிப்புறத்தில் 50 சடலங்கள் கிடந்தன. மசூதிக்கு அருகிலுள்ள மிகப்பெரிய வீடொன்றுக்குள் 5 சடலங்கள் கிடந்தன என்றும் நிருபர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தாடியுடன் சூடுபட்டு இறந்து கிடந்த ஒருவரின் சடலத்தை மேஜர் ஜெனரல் சாலிஹ் மெய்னா, அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டி போகோ ஹராம் தீவிரவாத இயக்கத்தின் துணைத் தலைவர் புஹார் ஷேக்கவுவின் சடலம்தான் அது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அதிரடி வேட்டையை அடுத்து, நேற்று வியாழக்கிழமை வட நைஜீரியாவில் இராணுவத்தினர் வீடுவீடாகத் தேடுதல் வேட்டையை நடத்தி உள்ளனர். தப்பியோடிய போகோ ஹராம் தீவிரவாத இயக்கத் தலைவர் முஹம்மது யூசுப்பையும் அவரது சகாக்களையும் தேடி இவ்வேட்டை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நைஜீரியாவில் பல மதங்களைத் தழுவியவர்கள் வாழ்கிறார்கள். எனினும், வட நைஜீரியாவில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வாழ்கிறார்கள். இங்குள்ள இஸ்லாமியத் தீவிரவாதிகள், வட நைஜீரியாவில் மாத்திரமல்ல, நைஜீரியா முழுமைக்கும் இஸ்லாமிய ஷரிஆ சட்டம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்து அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

போர்னோ மாநிலத்தில் இத்தீவிரவாதிகள் ஞாயிற்றுக்கிழமை முதல் பொலிஸ் நிலையங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், சிறைக்கூடங்கள், அரச கட்டடங்கள் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்தி வந்துள்ளார்கள். இந்த வன்முறைத் தாக்குதல்கள் ஞாயிறன்று வட நைஜீரியாவிலுள்ள ஏனைய மூன்று மாநிலங்களுக்கும் பரவியுள்ளன.

இத்தாக்குதல்களை முறியடிக்க முற்பட்ட துருப்புகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே மூண்ட சண்டைகளில் பெருந்தொகையானோர் கொல்லப்பட்டுள்ளனர். அநேகர் காயமடைந்துள்ளனர். அநேகர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## உலக அரங்கில்

## ஆஸி.யில் தரம் குறைந்த கல்லூரிகளுக்கு மூடுவிழா

### 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட வெளிநாட்டு மாணவர்கள் பாதிப்பு

மெல்போர்ன், ஜூலை 31

ஆஸ்திரேலியாவில் தரமற்ற கல்லூரிகளை அரசு மூடியுள்ளது. இதனால் ஐந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட வெளிநாட்டு மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, இவர்களுக்கு அரசு ஆறுதல் அளித்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் தரம் குறைந்த கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிவருகிறது என தொலைக்காட்சி ஒன்று செய்தி வெளியிட்டது. இதனால் கல்வி பயில வரும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்தது.

ஆஸ்திரேலிய கல்வித்துறை வருவாயில் இது பெரும் இழப்பாக அமைந்தது. இதையடுத்து, அரசு கல்வி நிறுவனங்களில் திடீர் சோதனை நடத்தியது. இதில் தரம் குறைந்த கல்வி நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டு அவை தற்போது மூடப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலிய அரசின் இந்த அதிரடி நடவடிக்கையால் இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டு மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் ஏராளமான இந்தியர்களும் அடங்குவர்.

வெளிநாட்டுப் பட்டம் பெற்றுவிடலாம் என்ற கனவில் கட்டுக்கட்டாய் பணத்தைக் கட்டிக் காத்திருந்த வெளிநாட்டு மாணவர்களுக்கு கல்லூரிகள் மூடப்பட்டமையால் ஏமாற்றம்தான் மிஞ்சியுள்ளது. தாங்கள் கட்டிய பணமாவது திரும்பக் கிடைக்குமா என்ற வேதனையில்அவர்கள் ஆழ்ந்துள்ளார்கள்.

அதேவேளை, தனது நாட்டுக் கல்லூரிகளில் பணம் கட்டிய வெளிநாட்டு மாணவர்களுக்கு ஆஸ்திரேலிய அரசு ஆறுதல் தெரிவித்துள்ளது.

''எங்களது நாட்டுக்கு கல்வி பயிலவரும் மாணவர்கள் குறித்த விவரத்தை நாங்கள் வைத்துள்ளோம். இதனால் வெளிநாட்டு மாணவர்கள் தாங்கள் கட்டிய பணம் குறித்து கவலைப்படத் தேவையில்லை'' என கல்வியமைச்சர் ஜூலியா கில்லார்ட் தெரிவித்துள்ளார்.

''கல்லூரிகள் மூடப்பட்டால், அவரவர் செலுத்திய பணத்திற்குத் தகுந்தவாறு வேறு கல்லூரிகளில் சேருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். ஒருவேளை அது சாத்தியமில்லை என்றால் மாணவர்கள் செலுத்திய பணம் திருப்பி அளிக்கப்படும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஜக்ஸனின் தலைமுடியிலிருந்து வைரங்கள் தயாரிக்கத் திட்டம்

சிக்காகோ, ஜூலை 31

மறைந்த பொப் இசை மன்னர் மைக்கல் ஜக்ஸனின் தலைமுடியிலிருந்து 10 வைரங்களைத் தயாரிக்க அமெரிக்காவின் வைர நிறுவனம் ஒன்று முடிவு செய்துள்ளது. அவற்றில் ஒரு வைரத்தை மைக்கல் ஜக்ஸனின் 3 குழந்தைகளுக்கும் வழங்க அந்த நிறுவனம் முன்வந்துள்ளது.

அமெரிக்காவின் சிக்காகோ நகரைச் சேர்ந்த லைப் ஜெம் என்னும் நிறுவனம் புகழ்பெற்ற பிரமுகர்களின் முடிகளிலிருந்து விலை மதிக்க முடியாத வைரங்களைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது. இசை மேதை பீத்தோவானின் முடியிலிருந்து தயாரிக்கப்பட்ட வைரங்களை அந்த நிறுவனம் 2 இலட்சம் அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்துள்ளது.

1984 ஆம் ஆண்டு பெப்சி நிறுவனம் தயாரித்த ஒரு விளம்பர படத்திற்கான படப்பிடிப்பின் போது மைக்கல் ஜக்ஸனின் தலைமுடியில் தீப்பற்றியது. அதில் ஒரு கற்றை முடியை ஜோன் ரெஸ்னிக்கோப் என்பவர் எடுத்து வைத்திருந்தார்.

அந்த முடியை வைத்து 10 வைரங்களைத் தயாரிக்கப் போகிறார் என்றும் அவற்றில் ஒரு வைரத்தை மைக்கல் ஜக்ஸனின் 3 குழந்தைகளுக்கும் இலவசமாக வழங்கப்போகிறார் என்றும் லைப் ஜெம் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி கிரக் ஹெர்ரோ கூறியுள்ளார்.

பூகம்பங்களின்போது பூமிக்குள் சென்றுவிடும் மரங்கள், பல ஆயிரம் நூற்றாண்டுகளாக பூமிக்குள் புதைந்து அழுத்தத்தின் காரணமாக நிலக்கரியாகவும், வைரப்படிகங்களாகவும் மாறுகின்றன. நிலக்கரி மற்றும் வைரங்கள் கரிப்படிமானங்கள் (கார்பன்) என்பது குறிப்பிடத்தக்கது.

இதே பாணியில் [illegible] 5 ஆயிரத்து 400 [illegible] நிலையில் கருக்கி கார்பனாக மாற்றி அதனை வைரமாக தயாரிக்கலாமாம்.

## பாக். முன்னாள் ஜனாதிபதி முஷாரப் உச்ச நீதிமன்றத்தில் ஆஜராக மறுப்பு

லண்டன், ஜூலை 31

பாகிஸ்தானில் அவசர நிலையைப் பிரகடனப்படுத்தியமை தொடர்பாக நேரில் ஆஜராகியோ, சட்டத்தரணி மூலமாகவோ விளக்கமளிக்குமாறு தமக்கு பாகிஸ்தான் உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை முன்னாள் ஜனாதிபதி பேர்விஸ் முஷாரப் உதாசீனப்படுத்திவிட்டார்.

இது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி பேர்விஸ் முஷாரப்போ, அவரது சட்டத்தரணியோ உச்ச நீதிமன்றத்தில் 29 ஆம் திகதி புதன்கிழமை ஆஜராகவேண்டும் என கடந்த வாரம் மேற்படி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. இது தொடர்பாக அறிவித்தல் அனுப்பவும் உத்தரவிட்டிருந்தது.

உச்ச நீதிமன்றத்தில் புதன்கிழமை இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அச்சமயம் உச்ச நீதிமன்ற பிரதம நீதியரசர் இப்திகார் முகம்மத் சௌத்திரி, ''ஜெனரல் முஷாரப்பின் சார்பாக எவராவது ஆஜராகிறாரா?'' என கேள்வி எழுப்பினார். எனினும், பதில் வரவில்லை. எங்கும் அமைதி நிலவியது.

இதனையடுத்து, இவ்வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. இது குறித்து பின்னர் முஷாரப்பின் சட்டத்தரணிகள் குறிப்பிடுகையில், இதுவரை தங்களுக்கு இது தொடர்பான அறிவித்தல் எதுவும் கிடைக்கவில்லை என்றனர்.

முஷாரப்பின் சட்டத்தரணிகள் குழுவில் இடம்பெற்றுள்ள சட்டத்தரணி கலித் ரஞ்ச்ஹா இது தொடர்பாக செய்தியாளர்களிடம் கூறுகையில், ''முஷாரப் ஒரு குற்றவாளியோ, பதிலளிக்க வேண்டியவரோ, பிரதிவாதியோ அல்லர். எனவே, அவர் நீதிமன்றத்தில் ஆஜராகத் தேவையில்லை'' என்றார்.

பாகிஸ்தானில் 2007 ஆம் ஆண்டு, அப்போது ஜனாதிபதியாகவிருந்த பேர்விஸ் முஷாரப் அவசர நிலையைப் பிரகடனம் செய்தார். அரசமைப்புச் சட்டத்தை இடைநிறுத்தம் செய்தார். இதற்குப் பதிலாக புதிய சட்ட முறைமையை அறிமுகப்படுத்தினார். அத்துடன் அதற்கிணங்க மீளப் பதவிப் பிரமாணம் செய்துகொள்ளுமாறு நீதிபதிகளுக்குக் கட்டளையிட்டார்.

இதற்கு மறுப்புத் தெரிவித்த அறுபதுக்கும் அதிகமான நீதிபதிகளை பேர்விஸ் முஷாரப் பதவி நீக்கம் செய்தார். ஆட்சி மாறிய பின்னர், தற்போதைய ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி, தமக்கெதிரான அழுத்தங்களை அடுத்து, பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளை பதவியில் மீள அமர்த்தினார். அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி முஷாரப்பின் அதிரடி நடவடிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்து வழக்குத் தொடரப்பட்டது.

உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள இவ்வழக்கை பிரதம நீதியரசர்கள் இப்திகார் முஹம்மது சௌத்திரி தலைமையிலான 14 நீதிபதிகள் அடங்கிய அமர்வு விசாரணைக்கு எடுத்துள்ளது.

அவசரகால நிலைப் பிரகடனம் தொடர்பாக 29 ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கமளிக்குமாறு கடந்த வாரம் இந்த அமர்வு முன்னாள் ஜனாதிபதி முஷாரப்புக்கு உத்தரவு பிறப்பித்திருந்தது. அவர் ஆஜராக முடியாத பட்சத்தில் அவரது சட்டத்தரணி ஆஜராகலாம் என்றும் அது தெரிவித்திருந்தது.

எனினும், அன்றைய தினம் முஷாரப்போ அவரது சட்டத்தரணியோ ஆஜராகவில்லை.

## ஜக்ஸனின் டாக்டர் வீட்டில் மீண்டும் அதிகாரிகள் சோதனை

லொஸ் ஏஞ்சல்ஸ், ஜூலை 31

பொப் பாடகர் மைக்கல் ஜக்ஸனின் குடும்ப டாக்டர் வீட்டில் அதிகாரிகள் மீண்டும் சோதனை நடத்தினர். ஜக்ஸனின் மரணத்திற்கான ஆதாரத்தை திரட்டுவதற்காக இந்தச் சோதனை நடத்தப்பட்டது.

மைக்கல் ஜக்ஸன் கடந்த ஜூன் மாதம் 25 ஆம் திகதி மரணம் அடைந்தார். இந்த மரணத்துக்கு அவரது குடும்ப டாக்டர் கான்ராடு முர்ரே கடைசியாக போட்ட ஊசிதான் காரணம் எனக் கூறப்படுகிறது.

வலி நிவாரணத்துக்காக அவர் கொடுத்த மருந்துகளில் போதை பொருள் அதிக அளவில் உள்ளது. அதுதான் அவரது இதய துடிப்பை நிறுத்தி மரணத்துக்குக் காரணமாக அமைந்தது என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் அவரது வீட்டில் மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் சோதனையிட்டனர். ஏற்கனவே, கடந்த வாரம் முதல் கட்டமாக சோதனை நடத்தப்பட்டது. 2 ஆவது கட்டமாக புதன்கிழமை சோதனை நடந்தது. இந்தச் சோதனை 4 மணி நேரம் நீடித்தது.

இச்சோதனையின்போது டாக்டர் முர்ரேயின் கையடக்கத் தொலைபேசிகளையும், கணனி [illegible] களையும் அதிகாரிகள் கைப்பற்றினார்கள். மைக்கல் ஜக்ஸனின் நோய் தொடர்பான [illegible] ஆவணங்களையும் அவர்கள் கைப்பற்றினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாஜ்பாயிடம் கொடுத்த வாக்குறுதியை பாக். நிறைவேற்றாதவரை பேச்சுக்கு இடமில்லை

## நாடாளுமன்றில் பிரதமர் மன்மோகன் அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 31

இந்தியாவுக்கு எதிராக தங்கள் மண்ணில் இருந்து தீவிரவாதிகளை செயற்பட அனுமதிக்க மாட்டோம் என்று வாஜ்பாயிடம் முஷாரப் கொடுத்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றாத வரை பாகிஸ்தானுடன் பேச்சு நடத்துவது என்ற கதைக்கே இடமில்லை - என்று பிரதமர் மன்மோகன் சிங் கூறினார்.

மக்களவையில் வெளியுறவுக் கொள்கைகள் மீதான விவாதம் நேற்றுமுன்தினம் தொடங்கியது. அதில் பங்கேற்று பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் பேசியவை வருமாறு -

எகிப்தில் நடந்த உச்சி மாநாட்டின்போது பாகிஸ்தான் பிரதமர் கிலானியைச் சந்தித்துப் பேசியபோது, பலுசிஸ்தானில் நடக்கும் கலவரத்தில் இந்தியாவுக்குத் தொடர்பு இருக்கிறது என என்னிடம் அவர் எதுவும் கூறவில்லை. அதைப் பற்றி பேசவும் இல்லை. எந்த நாட்டுக்கும் இந்தியாவால் எந்தப் பிரச்சினையும் வந்தது இல்லை. வரப் போவதும் இல்லை.

இந்தியாவுக்கு எதிரான தீவிரவாதிகள், எங்கள் மண்ணில் இருந்து செயற்பட அனுமதிக்க மாட்டோம் என்று கடந்த 2004ஆம் ஆண்டு இஸ்லாமாபாத்தில் வெளியிடப்பட்ட வாஜ்பாய் - முஷாரப் கூட்டறிக்கையில் பாகிஸ்தான் உறுதி அளித்துள்ளது. ஆனால், மும்பையில்



நடந்த தாக்குதலை லஷ்கர்- இ- தொய்பா தான் நடத்தியது.

அதற்கு நிதியுதவி செய்ததும் அந்த அமைப்புத்தான் என்பதை பாகிஸ்தான் முதல் முறையாக ஒப்புக் கொண்டுள்ளது. இந்தியாவில் பலமுறை தீவிரவாத தாக்குதல்கள் நடந்துள்ளன. ஆனால், பாகிஸ்தான் ஒப்புக் கொண்டுள்ளது மும்பைத் தாக்குதலை மட்டுமே.

பாகிஸ்தானில் தீவிரவாத அமைப்புகள் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றன. இந்த அமைப்புகளை பாகிஸ்தான் ஒடுக்க வேண்டும். தீவிரவாத அமைப்புகளுக்கு இடையே எந்தவித பாரபட்சமும் காட்டக் கூடாது என்று கிலானியிடம் வலியுறுத்தினேன். பாகிஸ்தானில் மேற்கு பகுதிகளில் உள்ள தீவிரவாத அமைப்புகளை ஒடுக்க எடுக்கப்படும் அதே நடவடிக்கையை இந்தியாவுக்கு எதிரான தீவிரவாத அமைப்புகள் மீதும் எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினேன்.

ஆனால், தீவிரவாத அமைப்புகள் மீது நடவடிக்கை எடுக்காவிட்டாலும் பாகிஸ்தானுடன் பேச்சைத் தொடர நான் சம்மதித்து விட்டேன் எனக் கூறுவது தவறு. தீவிரவாதம் தொடர்பாக இந்தியாவின் நிலையில் எந்த மாற்றமும் இல்லை. வாஜ்பாயிடம் முஷாரப் கொடுத்த உறுதி மொழியை முழுமையாக நிறைவேற்றாதவரை பாகிஸ்தானுடன் இந்தியா ஒருபோதும் பேச்சு நடத்தாது.

ஆனால், இப்போது தீவிரவாதத்தின் கொடுமையை பாகிஸ்தான் அனுபவித்து வருகிறது. அதை ஒடுக்க கடும் நடவடிக்கை எடுக்காவிடில் பாகிஸ்தானை தீவிரவாதம் அழித்துவிடும்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன், சமீபத்தில் இந்தியா வந்தபோது செய்து கொண்ட ஒப்பந்தத்தில் இந்தியாவின் இறையாண்மையே பாதிக்கப்பட்டுள்ளது என சிலர் கூறுகின்றனர்.

இந்தியாவின் இறையாண்மையை பாதிக்கும் எந்தச் செயலையும் இந்த அரசு செய்யாது - என்றார்.

# ஜூனியர் விகடனுக்கு இடைக்காலத் தடை

சென்னை, ஜூலை 31

மத்திய அமைச்சர் ஆ.ராசா பற்றிய அவதூறான செய்திகளை வெளியிட்டதற்காக ஜூனியர் விகடன் பத்திரிகைக்கு சென்னை உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பாக மத்திய அமைச்சர் ஆ.ராசா பற்றி ஜூனியர் விகடன் செய்தி வெளியிட்டிருந்தது.

இதனை எதிர்த்து ராசாவும், அவருடைய மனைவி பரமேஸ்வரியும் சென்னை உயர்நீதிமன்றத்தில் அவதூறு வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கை முதலில் விசாரித்த நீதிபதி ஜெயபால், ஜூனியர் விகடனுக்கு இடைக்காலத் தடை விதித்திருந்தார். பின்னர் விசாரித்த நீதிபதி கே.சந்துரு அந்தத் தடையை நீக்கியதுடன் ராசாவின் அவதூறு வழக்கு மனுவைத் தள்ளுபடி செய்தார்.

இந்த உத்தரவை எதிர்த்து மத்திய அமைச்சர் ராசாவும், அவரது மனைவி பரமேஸ்வரியும் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேன் முறையீட்டு மனுத் தாக்கல் செய்தனர்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் ராசா மற்றும் அவரது குடும்பத்தினர் பற்றி அவதூறு செய்தி வெளியிட்டதற்கு ஜூனியர் விகடனுக்கு இடைக்கால தடைவிதித்து உத்தரவிட்டனர்.

# மும்பைத் தீவிரவாதத் தாக்குதலில் மேலும் ஆதாரம் கேட்கக் கூடாது

## பாகிஸ்தானுக்கு சிதம்பரம் கண்டிப்பு

புதுடில்லி, ஜூலை 31

மும்பையில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் தொடர்பாக இதற்கு மேலும் ஆதாரங்களை பாகிஸ்தான் கேட்கக் கூடாது - என்று மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் கண்டிப்பாகக் கூறினார்.

மும்பைத் தாக்குதலுக்கு திட்டம் தயாரித்து கொடுத்து, மூளையாகச் செயற்பட்ட ஜமாத் - உத் தவா அமைப்பின் தலைவன் ஹபீஸ் சையதை நீதிமன்ற உத்தரவுப்படி பாகிஸ்தான் அரசு விடுதலை செய்து விட்டது. ஹபீஸை கைது செய்ய வேண்டுமானால் அதற்கு ஆதாரங்களை இந்தியா தர வேண்டும். தகுந்த ஆதாரம் இல்லாமல் எங்கள் நாட்டு பிரஜையை கைது செய்ய முடியாது என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ரகுமான் மாலிக் கூறினார்.

அதற்கு மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் பதில் அளிக்கையிலேயே மேற் கண்டவாறு கூறினார். இதுகுறித்து அவர் நேற்றுமுன்தினம் டில்லியில் அளித்த பேட்டியில் மேலும் கூறியவை வருமாறு -



ஜமாத்-உத் தவா அமைப்பின் தலைவன் ஹபீஸ் சையதை கைது செய்ய போதுமான ஆதாரங்கள் இல்லை என்று பாகிஸ்தான் திரும்பத் திரும்ப கூறி வருகிறது. தேவையான ஆதாரங்களை இந்தியா ஏற்கனவே கொடுத்து விட்டது. அதை வைத்து பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்கலாம். இதற்கு மேலும் ஆதாரங்களைப் பாகிஸ்தான் கேட்கக் கூடாது - என்றார்.

# இந்திய - பாக். கூட்டறிக்கை விடயத்தில் மன்மோகனுடன் கருத்து முரண்பாடில்லை

## சோனியா காந்தி நேற்றுத் தெரிவிப்பு

டில்லி, ஜூலை 31



இந்திய - பாகிஸ்தான் கூட்டு அறிக்கை தொடர்பான விடயத்தில் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு உறுதியான ஆதரவு அளிக்கிறோம். இதில் குழப்பமோ, கருத்து வேறுபாடோ நமக்குள் இல்லை. பாகிஸ்தான் விடயத்தில் இந்தியாவின் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை - என்று காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி நேற்றுத் தெரிவித்தார்.

இந்திய - பாகிஸ்தான் கூட்டு அறிக்கைக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன. காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும், மன்மோகன்சிங் மீது அதிருப்தியில் இருக்கிறார் எனக் கூறப்பட்டது.

இதுதொடர்பாக காங்கிரஸ் எம்.பி.க்கள் கூட்டம் நேற்று நடந்தது. அதில் சோனியாகாந்தி பேசியவை வருமாறு -

இந்திய - பாகிஸ்தான் கூட்டு அறிக்கை தொடர்பான விடயத்தில் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு உறுதியான ஆதரவு அளிக்கிறோம். இதில் குழப்பமோ, கருத்து வேறுபாடோ நமக்குள் இல்லை.

பாகிஸ்தான் விடயத்தில் இந்தியாவின் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை. அவர்கள் இதுவரை இந்தியாவுக்கு எதிரான தீவிரவாதிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை. தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்கும் வரை அவர்களுடன் பேச்சு நடத்தத் தேவையில்லை.

பேச்சு நடத்த வேண்டும் என்றால் அவர்கள் நமக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். மும்பையில் தாக்குதல் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதுடன் தங்கள் மண்ணில் இந்தியாவுக்கு எதிராக தீவிரவாதிகள் செயற்படுவதைத் தடு[illegible] - என்றார்.

# புலிகள் மீதான தடையை நீக்குமாறு கோரி சென்னையில் திருமா கட்சி ஆர்ப்பாட்டம்



சென்னை, ஜூலை 31

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது இந்தியாவில் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக்கோரி விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது. சென்னை, சென்றல் தொடரூந்து நிலையத்தின் முன்பாக நேற்றுமுன்தினம் புதன்கிழமை இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்தியாவில் பல வருடகாலமாக தங்கியிருக்கும் ஈழத் தமிழர்களுக்குச் சம உரிமை கொடுக்கப்பட வேண்டும் எனவும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.

இன்று விடுதலைப் புலிகள் அமைப்பு அந்நாட்டில் அழிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அந்த அமைப்பை தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பாகக் கருதுவதில் அர்த்தமிருக்கப் போவதில்லை. எனவே, விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்திய அரசு முழுமையாக நீக்க வேண்டும் என திருமாவளவன் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளையில் இந்தியாவுக்கு வரும் நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு இந்தியாவில் சம உரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் திருமாவளவன் வலியுறுத்தினார்.

# குழந்தைகளுக்காகப் பாடசாலை ஆரம்பிக்கிறார் லதா ரஜினிகாந்த்

சென்னை, ஜூலை 31

சென்னையில் நாளை முதலாம் திகதி குழந்தைகளுக்காக விளையாட்டுப் பாடசாலை தொடங்குகிறார் நடிகர் ரஜினிகாந்தின் மனைவி லதா ரஜினிகாந்த்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு -

இன்றைய பாடசாலைப் படிப்பு குழந்தைகளுக்குச் சுமையாக உள்ளது. அதைப் போக்கும் விதமாக ஒன்றரை வயது முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்காக விளையாட்டு பாடசாலை தொடங்குகிறேன். இப்பாடசாலை தைதாப்பேட்டை ஸ்ரீநகர் கொலனியில் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் செயற்படத் தொடங்கும்.

இங்கு பெற்றோருடன் குழந்தைகள் வந்து, விளையாடலாம். உடல் ஆரோக்கியம், சுத்தம் பற்றியெல்லாம் அவர்களுக்கு உணர்த்தப்படும். குழந்தைகளின் திறன் அறிந்து அத்துறையில் அவர்களை ஊக்குவிப்போம். இதற்கான கட்டணம் இன்னும் முடிவாகவில்லை. சென்னையில் பிற இடங்களிலும் இப்பாடசாலைகள் தொடங்கப்படும் - என்றார். மகள் சௌந்தர்யா உடனிருந்தார்.



டாக்டர் முத்து எழுதிய குழந்தைகள் பல் பராமரிப்பு மற்றும் பல் சிகிச்சை முறைகள் குறித்த புத்தகத்தை, நூலாசிரியை வெளியிட ரஜினிகாந்தின் மகள் சௌவுந்தர்யா பெற்றுக் கொண்டபோது....

# தவறுகளைத் திருத்திக் கொண்டால் தி.மு.கவுடன் மீண்டும் கூட்டணி

## கம்யூ. பாண்டியன் தெரிவிப்பு

தூத்துக்குடி, ஜூலை 31



தி.மு.க. தனது தவறுகளைத் திருத்திக் கொண்டு பாவ மன்னிப்புக் கேட்டால், அந்தக் கட்சியுடன் கூட்டணி வைப்பது குறித்து யோசிப்போம் - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் தா. பாண்டியன் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

ஸ்ரீவைகுண்டம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிடும் ஞா.தனலட்சுமி புதன்கிழமை வேட்புமனுத் தாக்கல் செய்தார்.

அவருடன் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு வந்த தா.பாண்டியன் அங்கு செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு

தேர்தலில் அ.இ.மு.க. போட்டியிடாததால், தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி வெற்றிபெற்றது என அறிவித்துவிடலாம். தேர்தலை நடத்தத் தேவையில்லை என்று அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா தெரிவித்துள்ளமை அவரது கருத்தாக இருக்கலாம்.

முக்கிய கட்சியான அ.தி.மு.க. போட்டியிடவில்லை என்பதால் போட்டி இல்லை என்பது அவரது மதிப்பீடு. அது பற்றி மேற்கொண்டு எதுவும் கூற விரும்பவில்லை.

அ.இ.மு.க. தேர்தலைப் புறக்கணித்துள்ள நிலையில் நாங்கள் தேர்தலில் போட்டியிடுவதால் எங்களுக்குள் எந்த மோதலும் இல்லை. இதனால், வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.கவுடன் கூட்டணி வைப்போம் என்பது கற்பனை. தி.மு.க. தனது தவறுகளைத் திருத்திக் கொண்டு பாவ[illegible] கட்சியுடன் கூ[illegible] யோசிப்போம் - என்றார்.

# 'ஜூனியர்' மாணவிகளை 'ராகிங்' செய்த 19 மாணவிகளுக்கு 10 லட்சம் அபராதம்

## அலகாபாத்தில் சம்பவம்

அலகாபாத், ஜூலை 31


அலகாபாத்தில் உள்ள ஐ.ஐ.ஐ.டி. விடுதியில் ஜூனியர் மாணவிகளை பகிடிவதை (ராகிங்) செய்த 19 மூத்த மாணவிகளுக்கு தலா 50 ரூபா ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. அவர்களின் கல்வி உதவித் தொகையும் ரத்து செய்யப்பட்டது.

உத்தரப் பிரதேசத்தில் உள்ள அலகாபாத்தில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் கடந்த 19ஆம் திகதி மாணவியர் விடுதியில் தங்கியிருந்த முதலாம் ஆண்டு மாணவிகளை மூத்த மாணவிகள் பகிடிவதை செய்தனர்.

இதுதொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவிகளும் அவர்களின் பெற்றோரும் கல்வி நிறுவனத் தலைவரிடம் முறைப்பாடு செய்தனர். அதன் அடிப்படையில் இரண்டாம் ஆண்டு படிக்கும் 19 மாணவிகளுக்கு தலா ரூபா 50 ஆயிரம் [illegible]க்கப்பட்டது. இதுதவிர அவர்[illegible]கப்பட்ட கல்வி உதவித்தொகையும் ரத்து செய்யப்பட்டது. பகிடிவதை விவகாரம் தொடர்பாக கல்வி நிறுவனத்தின் முதல்வர் தலைமையில் விசாரணைக் குழு அமைக்கப்பட்டு விசாரணை நடைபெறுகிறது என்று கல்வி நிறுவனத்தின் இயக்குநர் எம்.டி.திவாரி தெரிவித்தார்.

சமுதாயத்துக்கு தலைகுனிவை ஏற்படுத்தும் 'ராகிங்' கொடுமையை கல்லூரிகள், பல்கலைக் கழகங்களில் ஒழிக்க கடும் நடவடிக்கை எடுக்கும்படி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பல்கலைக்கழக மானியக் குழுவும் (யு.ஜி.சி.) இதுதொடர்பாக எல்லாக் கல்வி நிறுவனங்களுக்கும் அறிவுரைகள் வழங்கியுள்ளன. இந்தச் சூழ்நிலையில், ராகிங் செய்த குற்றத்துக்காக மாணவிகளுக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகை குறைவுதான். சட்டவிதிகளின்படி ரூபா 2 கோடி 50 லட்சம் அபராதம் விதிக்கலாம் என்று திவாரி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூரில் இருந்து பொலிஸ் அணிவகுப்புடன் ஊர்வலமாக வட்டுக்கோட்டைக்கு எடுத்துச்செல்லப்பட்ட யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராசாவின் பாரியார் சாந்தகுமாரி விக்னராசாவின் பூதவுடல் தென்னிந்தியத் திருச்சபை பேராலயத்தில் வைக்கப்பட்டிருப்பதையும் அங்கு கூடியிருந்த பிரமுகர்கள் மற்றும் பொதுமக்களை மேல் வரிசையிலும்- தென்னிந்தியத் திருச்சபை பேராயர் கலாநிதி டானியல் தியாகராஜா, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறைஅமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத் தலைவர் ஆறு. திருமுருகன், யாழ். பல் கலைக்கழக பதில் துணைவேந்தர் எஸ்.சிவபாலன், மேல் நீதிமன்ற நீதிபதி எஸ். தியாகேந்திரன், யாழ். அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்துவதையும் கீழ் வரிசையிலும் காணலாம். (படங்கள்: ஓங்காரன்)

# மிருசுவில், கொடிகாமம் முகாம்களில் தங்கியுள்ளவர்களில் குடாநாட்டைச் சேர்ந்த 2,622 பேர் ஓரிரு தினங்களில் விடுவிக்கப்படுவர்

## அமைச்சர் டக்ளஸ் அங்கு வைத்துத் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 31

மிருசுவில்,கொடிகாமம்,இராமாவில் ஆகிய பகுதிகளில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 2, 622பேர் இன்னும் சில தினங்களில் விடுவிக்கப்பட உள்ளனர்.

மேற்படி நலன்புரி நிலையங்களுக்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு இத் தகவலை வெளியிட்டார்.

மேற்படி நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களிடம் பரஸ்பரம் கலந்துரையாடிய அமைச்சர், முதற்கட்ட நடவடிக்கையாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 2,622 பேர் இம்மூன்று நலன்புரி நிலையங்களில் இருந்தும் இன்னும் சில தினங்களில் விடுவிக்கப்பட உள்ளனர் என்றும் அடுத்தடுத்த கட்டங்களில் ஏனையவர்களும் விடுவிக்கப்படுவர் என்றும் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் சொந்த இருப்பிடங்களை கொண்டவர்களும் தங்களது உறவினர்களது இருப்பிடங்களை கொண்டவர்களுமே தற்போது விடுவிக்கப்படுகின்ற நிலையில் ஏனையோர் வெகுவிரைவில் விடுவிக்கப்பட்டு அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படுவர் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (1)

# தடுத்து வைக்கப்பட்டவர்களை விடுவிப்பதாகக் கூறி விற்பனையாகும் படிவங்களை நம்ப வேண்டாம்

## பொதுமக்களை அறிவுறுத்துகிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 31

தடுப்பு முகாம்களில் உள்ள உறவினர்களை விடுவிப்பதற்கான விண்ணப்பம் என்று போலியான படிவங்கள் விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இத்தகைய போலி நடவடிக்கைகளுக்கு மக்கள் பலியாக வேண்டாம்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு மக்களைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தடுப்பு முகாம்களில் உள்ள உறவினர்களை விடுவிப்பதற்கான விண்ணப்பம் என்ற பெயரில் விண்ணப்பம் ஒன்று 100 ரூபா விலையில் யாழ். குடாநாட்டில் பரவலாக விற்பனை செய்யப்பட்டுவருவதாக பல்வேறு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வரும் மக்கள் தற்காலிகமாக நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனரே அன்றி அம்மக்கள் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்படவில்லை. எனவே தடுப்பு முகாம்களில் அம் மக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறி பொதுமக்களை ஏமாற்றி சட்டத்துக்கு புறம்பான முறையில் ஒரு சாரார் பொதுமக்களிடம் பணம் பறிக்கும் செயல்களில் ஈடுபட்டுவருவதாக எனக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளேன். இவ்வாறான நபர்களிடம் அகப்பட்டு பொதுமக்கள் தங்களது பணத்தையும் நேரத்தையும் வீணாகச் செலவிடக் கூடாது என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

மேற்படி போலி விண்ணப்பம் ஆனது குடாநாட்டில் தற்போது பல்வேறு முக்கிய இடங்களில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் பொதுமக்கள் இவ்விண்ணப்பங்களை விலை கொடுத்துவாங்கி பெரும் ஏமாற்றங்களைச்சந்தித்து வருவதாகவும் தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தொடர்ந்து மேற்கொண்டுவரும் பேச்சுவார்த்தைகளில் பயனாக யாழ். மாவட்ட நலன்புரி நிலையங்களில் இருந்து யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் தற்போது கட்டம் கட்டமாக தங்களது சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்பப்பட்டு வரும் நிலையில், இவ்வாறான சட்ட விரோதமான விண்ணப்பங்களை விநியோகிப்போர் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே இவ்வாறான போலிகளுக்கு மக்கள் பலியாகிவிடக் கூடாது என கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (1)

# முகாம்களிலுள்ள புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்க துரித நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 31

வவுனியா அகதி முகாம்களில் உள்ள 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கை அரசால் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப் பட்டு வருகின்றது என்று இந்நடவடிக்கைக்குப் பொறுப்பான விசேட ஆணையாளர் மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்க நேற்றுக் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

வவுனியா அகதி முகாம்களில் தங்கியிருந்தவர்களுள் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளனர். இவர்கள் இப்போது தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டு புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்களுள் பயங்கரவாதத்திற்குப் பல்வேறு வகைகளில் உதவியவர்கள் உள்ளனர். சிறிதளவில் உதவியவர்களும், பாரியளவில் உதவியவர்களும் உள்ளனர். அவர்கள் விரும்பும் தொழிலில் அவர்களுக்குப் பயிற்சியளித்து அவர்களை சமூகத்துடன் சாதாரண மனிதர்களாக வாழவைப்பதே எமது நோக்கம்.

அவர்களுள் அதிகமானவர்கள் விவசாயம் செய்தவர்களாகக் காணப்படுகின்றனர். அடுத்து மீனவர்களே அதிகமாகவுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் அவர்கள் விரும்பும் தொழில்களிலேயே பயிற்சியளிக்கப்படும்.

அதேபோல் இந்த 10 ஆயிரம் பேரில் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் மற்றும் உயர்தரம் பயிலும் நிலையில் உள்ளவர்களுக்கு அதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

புலிகளுடன் தொடர்புபட்டவர்கள் இன்னும் உள்ளனரா என்று தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டுக்கொண்டு வருகின்றது. பயங்கரவாதத்திற்கு உதவியவர்களாக 15 முதல் 20 ஆயிரம் பேர்வரை அடையாளம் காணப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேபோல் கிழக்கில் சரணடைந்த சுமார் ஆயிரம் பேரில் 837 பேர் இன்னும் புனர்வாழ்வளிக்கப்படவுள்ளனர். மீதியானவர்களுக்கு புனர்வாழ் வளிக்கப்பட்டு விட்டது -என்றார். (அ-சி)

# நாணய நிதியத்திடம் கடன்பெறுவதற்கு 12 நிபந்தனைகளுக்கு இணங்கியது அரசு

## அதனால் மக்கள் மீது அழுத்தங்கள் சுமத்தப்படும் என்கிறது ஐ.தே.கட்சி

கொழும்பு, ஜூலை 31

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியைப் பெறுவதற்காக அரசு 12 நிபந்தனைகளுக்கு இணங்கியுள்ளது என குற்றம் சாட்டியுள்ள ஐக்கிய தேசியக் கட்சி, இதன் காரணமாக மக்கள் மீது கடும் பொருளாதார அழுத்தங்கள் சுமத்தப்படவுள்ளன என்றும் எச்சரித்துள்ளது.கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

சர்வதேச நா[illegible] பெறுவதற்காக [illegible] அடிபணியப் போவதில்லை, அது சொல்வதைக் கேட்கப்போவதில்லை எனத் தெரிவித்து வந்த அரசு இறுதியாகத் தவிர்க்க முடியாமல் நாணய நிதியத்திடம் சரணடைந்து விட்டது. 12 நிபந்தனைகளுக்கும் இணங்கியுள்ளது.

சில நிபந்தனைகளை நிறைவேற்றுவது சாத்தியப்படாத விடயம்.மிக மோசமான பொருளாதார நிலையிலுள்ள அரசுக்குத் தற்போது மக்களிடம் பிடுங்கிக் கடனை அடைப்பதே ஒரே வழியாகவுள்ளது. தனது அனைத்துக் கடனையும் அடைப்பதற்காக அரசு தற்போது மக்களைக் கொள்ளை யடிக்கப் போகின்றது.

இந்தப் பொருளாதார நிலைக்கு அரசே [illegible]. இதில் கவலை அளிக்[illegible] என்னவென்றால் மக்களே அரசின் கடன பளுவை சுமக்கவேண்டியுள்ளது.

ஏற்கனவே 110 அமைச்சர்களைக் கொண்ட தனது அமைச்சரவையில் அரசு மேலும் இரு அமைச்சர்களை சேர்த்துக் கொண்டவேளை, அதனால் ஏற்படும் செலவுகளை ஈடுகட்ட மக்கள் மீது பளு சுமத்தப்பட்டது.

அரசு நஷ்டத்தில் இயங்கும் பல அரச நிறுவனங்களின் செலவீனங்களை சமாளிக்க வேண்டியுள்ளது.

இலங்கை மின்சார சபையும் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் அதில் முக்கியமானவை.

இலங்கை மின்சாரசபை 7 ஆயிரம் கோடி ரூபா நஷ்டத்தை சந்திக்கின்றது. பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மூவாயிரத்து 500 கோடி ரூபா நஷ்டத்தில் உள்ளது.

இந்த இழப்புகளை சரிசெய்யப் போவதாக அரசு சர்வதேச நாணய நிதியத்திடம் உறுதியளித்துள்ளது.- என்றார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உச்சக்கட்டப் போர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியின் படுகொலைக்குப் பின்னரும் 'றோ' இலங்கையில் செயற்பட்டுக்கொண்டிருந்துள்ளது. அவர்கள் விடுதலைப்புலிகளுடனும் தொடர்ந்து தொடர்புகளை வைத்திருந்தார்கள். இதனால்தான் இந்தியா தனது கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டும் என நாம் கேட்கின்றோம்'' எனவும் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்தார்.

இப்போது இங்கு 1, 500 இந்தியர்கள் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக வந்துள்ளார்கள். இந்தியர்கள் எதற்காக கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு வர வேண்டும்? எமது நாட்டவர்களால் இதனைச் செய்யமுடியும். இவை உதவிகள் அல்ல. அவை எமக்குப் போடப்படும் மரணக்கயிறுகளே. இந்தியாவின் பகைமையை வளர்க்க நாம் விரும்பவில்லை. அதனால் தான் நாம் சொல்கின்றோம் - இந்தியா ஒரு நாள் பாதிக்கப்படும். இலங்கையின் பிரச்சினை அவர்களைப் பாதிக்கும் என்பதால் இது அவர்களுக்கு நாம் விடுக்கும் நட்பு ரீதியான எச்சரிக்கையாகும்.''

''விடுதலைப்புலிகள் அமைப்புக்கு இந்தியாதான் பயிற்சியளித்தது. அவர்கள் தமது தவறை உணர்ந்துகொண்ட பின்னர் தான் தமது அணுகுமுறையை மாற்றிக் கொண்டார்கள். அவர்கள் இப்போதும் பிரிவினைவாத சக்திகளால் முட்டாள்களாக்கப்படுகின்றார்கள் என்பதுதான் ஆபத்தானது'' எனவும் அவர் குறிப்பிட்டார்.

**இந்தியா எமக்குச் செய்வது உதவிகள் அல்ல**

இன நெருக்கடியைப் பயன்படுத்தி இந்தியா மேற்கொண்டுவரும் திட்டங்கள் தொடர்பாக இந்தப் போட்டியில் குறிப்பிட்ட அவர், மேலும் தெரிவித்த சில முக்கிய விடயங்கள் வருமாறு :-

''எண்ணெய்க் குதங்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையை அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். திருகோணமலை துறைமுகத்தைச் சூழவுள்ள 679 சதுர கிலோ மீற்றர் பகுதி அவர்களுக்கான பிரத்தியேக பொருளாதார வலயமாக வழங்கப்பட்டது. இந்தப் பகுதிக்குள் இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர்களே செல்ல முடியாது தடைவிதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலத்தை மீட்பதற்காக எமது நாட்டைச் சேர்ந்தவர்களே கொல்லப்பட்டனர். இந்த நிலத்தில் இப்போது யார் ஆக்கிரமித்துக்கொள்கின்றார்கள்? இந்த நிலத்தை இந்தியா பயன்படுத்திக்கொள்வதற் காகவா எமது நாட்டவர்கள் தமது உயிர்களைத் தியாகம் செய்து போராடினார்கள்? இந்தியா இன்று எம்மீது மேலாதிக்கம் செலுத்த முற்படுவதுடன், எமது வளங்களைப் பயன்படுத்தவும் அரசியல் ரீதியாக எம்மீது ஆதிக்கம் செலுத்தவும் முற்படுகின்றது.

- இவ்வாறு சோமவன்ஸ தமது பேட்டியில் குறிப்பிட்டிருக்கின்றார்.

(அ-சி)

## தபால் ரயில் சேவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவை மட்டும் கடந்த வருட இறுதியில் வவுனியா வரை ஆரம்பிக்கப்பட்டது.

அதற்கு மேலதிகமாக மீண்டும் தபால் ரயில் சேவை ஆரம்பிக்கப்பட இருப்பதாக அமைச்சர் நேற்று அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான தரைவழி ஊடான மக்கள் போக்குவரத்துக்கு ஏ-9 வீதி முழுமையாக திறக்கப்படுவதற்கு இன்னும் காலம் தேவை என்றுஅமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து படையினரின் வழித்துணையுடன் ஏ-9 வீதியூடாக விசேட பஸ் சேவை வவுனியா வரை நடத்தப்படும் என்றும் அதில் பயணம் செய்வோர் அங்கிருந்து ரயில் மூலம் கொழும்பு செல்ல முடியும் என்றும் அமைச்சர் கடந்த வாரம் தெரிவித் திருந்தார்.

இரவு ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர், தற்சமயம் இடை நிறுத்தப்பட்டுள்ள போக்குவரத்துச் சபையின் விசேட பஸ்சேவை யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்கு ஆரம்பிக்கப் படும் என்று நம்பத் தகுந்த வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. (அ-1)

## வன்னி அகதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பூாக ஐ.நா. செயலர் வாஷிங்ரனில் செய்தியாளரிடம் தெரிவித்தவை வருமாறு:-

சமீபத்தில் இடம்பெற்ற அணிசேரா நாடுகளின் மாநாட்டின் போது இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் சந்திபொன்றை மேற்கொண்டேன்.

இதன் போது இலங்கைக்கான எனது விஜயத்தின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படுகின்றன என்பது குறித்து ஆராய்ந்தேன்.

நான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அழுத்தமாக வலியுறுத்தினேன்.

முதலில் முகாமில் உள்ள மக்களின் நிலைமைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அவர்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட வேண்டும். மனிதாபிமானப் பணியாளர்களின் நடமாட்ட சுதந்திரத்தை உறுதி செய்ய வேண்டும்.

முகாமில் உள்ள மக்களுக்கு மேலும் சுதந்திரம் அவசியம். அவர்களுடைய வாழ் நிலையில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும்.

தமிழர்கள் போன்ற சிறுபான்மை இனத்தவர்களை நோக்கி நேசக்கரங்களை நீட்டுமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளேன்.

சீனாவிற்கான விஜயத்தின் போதும் ஜி-8 உச்சி மாநாட்டின் போதும் இந்திய, சீனா தலைவர்கள் உட்பட முக்கியமான சர்வதேசத் தலைவர்களுடன் இந்த விடயங்கள் குறித்து ஆராய்ந்தேன். தொடர்ந்தும் இது குறித்து ஆராய்வேன்.- என்றார்.

(அ-சி)

# பருத்தித்துறை வர்த்தக நிறுவனங்கள் ஞாயிறு,விடுமுறை தினங்களில் மூடப்படும்

## வர்த்தகர்கள் சங்கக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை31

பருத்தித்துறை வர்த்தகர் சங்க எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் யாவற்றையும் ஞாயிறு மற்றும் வர்த்தக விடு முறை தினங்களில் வியாபார நடவடிக் கைக்கு மூடுவதென முடிவு செய்யப்பட் டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற சங்கத்தின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவின் பிரகாரம், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முதல் இந்த நடைமுறை அமுல் செய்யப்படும் என வர்த்தக சங்கத் தலைவர் சி.பத்மநாதன் அறிவித்துள்ளார். (1-201)

## வவுனியா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் செயலாளர் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இவ்வேண்டுகோளை 'கரித்தாஸ்' நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ளது. இதனால் ஏற்படக்கூடிய நிதிப் பிரச்சினையை சமாளிக்கும் வகையிலேயே புனித பாப்பரசரால் மனிதாபிமானப் பணிகளுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் பெருந்தொகை நிதியிலிருந்து ஒரு பகுதியை 'கரித்தாஸ்' நிறுவனம் பயன்படுத்த உள்ளது என்று அறிய வந்துள்ளது.

(அ-சி)

## ஐ.தே.க. பிரமுகர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதுளை மாவட்டங்களை நல்ல முறையில் அபிவிருத்தி செய்து வருகின்றார்.

ஊவா மாகாணசபைத் தேர்தலில் எமக்கு வரலாற்று ரீதியான வெற்றி கிட்டும். இதை எவராலும் தடுக்க முடியாது. அது போல் தென்மாகாணசபைத் தேர்தலிலும் நாம் அபார வெற்றியடைவோம்.

**3 வாரங்களில் 18 முக்கியஸ்தர்கள் எமது பக்கத்தில்**

அடுத்த வாரத்திற்குள் தென்மாகாண சபை கலைக்கப்படும். அது கலைக்கப்பட்டு மூன்று வாரங்களுக்குள் தென்மாகாணத்தைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் 18 முக்கியஸ்தர்கள் அரசுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவர்.

அவ்வாறு இணையப்போகிறவர்களுள் முன்னாள் எம்.பியாகவிருந்து தற்போது மாகாணசபை உறுப்பினராக இருக்கின்ற ஒருவரும் அடங்குகிறார்.

இந்த நிலையில் எதிர்க்கட்சி, கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கப் போவதாகவும் அதையிட்டு அரசு அஞ்சுவதாகவும் கூறுகின்றது. நாம் ஏற்கனவே கூட்டமைப்பாகி மிகவும் பலமாகவுள் ளோம். எந்தக் கூட்டமைப்பையும் பார்த்து நாம் அஞ்சப்போவதில்லை.

எமது கூட்டமைப்பில் எத்தனையோ தமிழ்க்கட்சிகள் இணைந்துள்ளன. எத்தனையோ தமிழ் பிரதிநிதிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்புரிமையைப் பெற்றுள்ளனர். எனவே, எந்தக் கூட்டமைப்புக்கும் நாம் அஞ்சப்போவதில்லை. - என்றார். (அ-சி)

## சம்பத் வங்கியின் இறுதி நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணத்தில் சம்பத் வங்கி நடத்திய நேர்முகப் பரீட்சையிலிருந்து இறுதி நேர்முகப் பரீட்சைக்குக் கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 27 பேரையும் பாதுகாப்பு அனுமதி பெறுவதற்குத் தம்முடன் தொடர்பு கொள்ளு மாறு அரச அதிபர் கே.கணேஷ் கேட்டுள்ளார்.

இவர்கள் தமது பயணத்துக்கான ஒழுங்கைத் தாமே மேற்கொள்ள வேண்டும் என்று அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

## குடாநாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களில் பஸ்களில் இருந்து இறக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன் கால நேரத்தையும் விரயமாக்க நேர்கிறது என அமைச்சர் தளபதியிடம் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் குறித்து உடன் நடவ டிக்கை எடுப்பதாக தளபதி உறுதி கூறினார்.

பாதுகாப்பு வலயங்களில் உள்ள கோயில்களுக்கு செல்வதற்கான அனுமதி, இடம்பெயர்ந்த நிலையில் வந்துள்ள மக்களது படகுகளின் இயந்திரங்கள் தொடர்பான விடயம், தென்மராட்சி தென்பகுதியில் தொழில் புரிவதற்கும் மீளக் குடியமர்த்துவதற்குமான அனுமதி, வரணி பொதுச் சந்தையை திறத்தல், குருநகர் ஐந்து மாடி வீட்டுத் திட்டத்தின் ஏனைய வீடுகளில் மக்களை குடியமர்த்தல், கோயிலாக்கண்டி, தனங்களப்பு -சாவகச்சேரி வீதித் திறப்பு, கொடிகாமம் -பருத்தித்துறை வீதியில் உள்ள பருத்தித்துறை வீதியை திறத்தல், சாவகச்சேரி நகர சபை மைதானத்தையும், இந்துமயானத்தையும் திறத்தல், குடத் தனை பகுதிக்கான அனுமதி, நாகர்கோயில் பகுதியில் மீள் குடியேற்றம், அரியாலை கிழக்குப் பகுதியில் மீள் குடியேற்றம் உட்பட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இன்னும் சில தினங்களில் இப்பிரச்சினைகளுக்கு சாதகமான தீர்வுகளை எட்டுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.


தான்சன் கல்வி நிலையம்
ஸ்ரான்லி வீதி (மக்கள் வங்கிக்கு அருகாமை)
கணக்கியல்/முகாமைத்துவ டிப்ளோமா கற்கைகளுக்கான மற்றுமொரு புதிய பிரிவு ஆரம்பம் 1.8.2009 சனி காலை 9 மணிக்கு
(அனுமதிகள் 40 மாணவர்களுக்கு மட்டும்)

SHAMROCK
A/L 2010 Paper Class
'அரசியல் மூலதத்துவங்கள்'
Mr.S.ஸ்ரனிஸ்லாஸ் B.A,Dip.in.Ed
ஆரம்பம்:(02.08.2009) sun 10 am

வாடிக்கையாளர் பெருமக்களே!
என்றும் எங்கும்
நம்பமுடியாத அதிரடி விற்பனை
கழிவு விலைக்
புத்தகங்கள்,ஸ்ரேசனறிப் பொருள்கள் உட்பட அனைத்துப் பொருள்களுக்கும் 20% விலைக்கழிவு
★ ரூ. 1000 இற்கும் மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு அழகிய வர்ண சிறிய கைப்பை வழங்கப்படுகிறது.
★ குறிப்பிட்ட தொகைக்கு மேல் கொள்வனவு செய்யும் பாடசாலைகளுக்கு போக்குவரத்துச் செலவுகளுக்கு பங்களிப்பு வழங்கப் படுகிறது.
நாம் 2009 ஆம் ஆண்டுக்குரிய வழங்குநர்களாக வடக்கு மாகாண சபையில் பதிவு செய்துள்ளோம் .இது தொடர்பாக வெளியாகும் விசமத் தனமான வதந்திகளை நம்பாதீர்கள்.
அனைத்து வசதிகளையும் பெற இன்றே விரையுங்கள்
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

வழிகாட்டல் கருத்தரங்கு 2009
தமிழ்: A.K. கீர்த்திராஜன் B.A(Hons)
காலம் :- 31.07.2009 - 10 மணி
02.08.2009 - 11 மணி, 04.08.2009 - 11 மணி
NEC Clock Tower Road, Jaffna
அனுமதிகளை இன்று முதல் பெற்றுக்கொள்ளவும்.

அரசியல் கருத்தரங்கு
A/L 2009
இன்றும் நாளையும் பிற்பகல் 1 மணிக்கு எதிர்பார்க்கை வினாத்தாள் வழங்கப்படும்.
K.S.இளங்கோ
DMI ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.

தேவை
தமிழ், ஆங்கிலம் கணனி தட்டெழுத் தாளர் - பெண்
மற்றும் பான்சி ஹவுஸ் அனுபவமுள்ளவர்கள் - பெண்
தொடர்பு:- ராஜ் கொம்பியூட்டர் பிறிண்டிங் சென்றர், பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.


பிரத்தியேக வகுப்பு
A/L - 2010 - இந்து நாகரிகம்
(பிரத்தியேக வகுப்பு)
வினா - விடை வகுப்பு (Paper Class)
ஆரம்பம் : 01.08.2009 - சனி காலை 7 மணி
இடம் : பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு (தாயகம் முன்பாக)
ஆசிரியர் : சிவ. மகாலிங்கம்
A/L-2011 இந்து நாகரிகம், இந்து சமயம், G.A.Q,B.A (Part 1), இந்து நாகரிகம் வகுப்புக்கள் விரைவில் ஆரம்பம்
B.A(Final) வகுப்புகள் நடைபெறுகின்றன

LANKA BELL லங்கா பெல் சிடிஎம்ஏ (CDMA)
• இலங்கையில் ஆகக் குறைந்த தொலைபேசிக் கட்டணங்கள்
• உள்வரும் அழைப்புக்கள் முற்றிலும் இலவசம்
• வெளிநாட்டு அழைப்புக்களுக்கு நிமிடத்துக்கு 7/- மட்டும்
• உள்வரும் வெளிநாட்டு அழைப்புக்களுக்கு நிமிடத்திற்கு 50 சதம் வழங்கப்படும்
உங்கள் இடங்களிலேயே பெற்றுக் கொள்ள உடன் அழையுங்கள்
021 222 8032 . 077 6473706
யாழ் மாவட்ட முகவர்: அஸ்வினி மல்ரி பிளாசா






Dialog DIALOG BROAD BAND INTERNET softlogic
Now available Dialog Broad band internet service in Jaffna
For registration
STP Computer World (Pvt) Ltd, 149, kasthuriar road, Jaffna


தனியார் நிறுவனங்கள், மற்றும் வீட்டுப் பாவனையாளருக்கு ஏற்றது.
STP Your Partner in IT Solution
149, Kasthuriar Road. Jaffna.
T.P:0217429460.
Dealer
Softlogic Trading (Pvt.) Ltd.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.07.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2010 இல் புலமைப் பரிசில் எழுதவுள்ள

# தரம் 4 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை

## பகுதி 11

நேரம் : 1 மணி 15 நிமிடம்
100 புள்ளிகள்

100

### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

■ கீழ்வரும் பந்தியை நன்கு வாசித்து அதன்கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குச் சரியான விடை எழுதுக.

> கிருமிநாசினிகளைப் பயன்படுத்தும்போது மிக்க அவதானமாக இருக்க வேண்டும். மூக்கையும் வாயையும் நன்கு மறைத்துக்கொள்ள வேண்டும். உடம்பையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். பயன்படுத்தும் கருவியைக் கழுவி ஆறு, குளம் முதலியவற்றில் வீசக் கூடாது.
> ஆசிரியரின் விளக்கத்தை மாணவர்கள் அனைவரும் நன்கு காதுகொடுத்துக் கேட்டனர். மருந்து தெளித்ததன் பின்னர் குளிக்கவும் வேண்டும்' என சாந்தி தன் கருத்தைத் வெளிப்படுத்தினாள்.
> மிகவும் நன்றி சாந்தி, அதுமட்டுமல்ல விஷமுள்ள உயிர் கொல்லிகளை உபயோகிக்கும்போது உணவு, பானம் முதலியவற்றிலும் மிகவும் அவதானம் தேவை. உணவு, பானம் முதலியவற்றுடன் விஷம் கலந்து உயிரைப் பறித்துவிடவும் கூடும் என ஆசிரியர் மேலும் விளக்கம் கொடுத்தார்.

1. இப்பந்திக்குத் தலைப்பிடுக. ..........
2. இந்தப் பந்தியில் ஏதுபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது? ..........
3. இந்தப் பந்தியிலிருந்து பெண்பாற் சொல்லொன்றைக் கண்டுபிடித்து எழுதுக. ..........
4. இதன்படி விஷமான பொருட்களைப் உபயோகிக்கும்போது தவிர்க்க வேண்டியவை எவை?
..........
5. கிருமிநாசினிகளை உபயோகிக்கும்போது எவ்வெவ்வுறுப்புக்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்?
..........
6. கிருமிநாசினி விசிறும் இயந்திரந்தைக் கழுவி ஆறு, குளம் முதலியவற்றில் வீசக் கூடாது என்பது எதற்காக?
..........
7. காது கொடுத்தனர்' எனும் மரபுத்தொடரின் பொருள் யாது? ..........
8. கீழ்வரும் சொற்களுக்குரிய எதிர்ப்பாற் சொற்களை எழுதுக.
i) வீசுபவன் .......... ii) ஆசிரியை ..........
9. ஒத்தசொல் தருக.
i) மருந்து .......... ii) உடம்பு ..........
10. எதிர்ச்சொல் தருக.
i) உள்ளே .......... ii) வேண்டும் ..........

(2x10 = 20)

■ கீழ்வரும் வினாக்களுக்குச் சரியான விடை எழுதுக.

11. 2, 5, 3, 4 எனும் இலக்கங்களைக் கொண்டு உருவாக்க முடியுமான மிகப்பெரிய இரட்டை இலக்கத்தை எழுதுக. ..........
12. 25 x 3 = 35 - 55 என்பதன் விடையை எழுதுக. ..........
13. வடக்கு கிழக்குத் திசைகளுக்கு இடையில் உள்ள திசைக்கு எதிரான திசை எது?
14. தேயிலைக் கொழுந்து பறிக்கும் பெண்கள், இரண்டு கிளிகள் அச்சிடப்பட்டுள்ள தாள் நாணயத்தின் பெறுமதி என்ன? ..........

(1x4 = 4)

■ கீழ்வரும் ஆங்கிலச் சொற்களின் பொருளை எழுதுக.

15. Hammer .......... 16. Stamp ..........
17. Kitchen .......... 18. Classroom ..........
(1x4 = 4)

■ கீழ்வரும் சிங்களச் சொற்களின் பொருளை எழுதுக.

19. எபியா .......... 20. ஐயா ..........
21. தஹய ..........

(2x3 = 6)

■ கீழ்வரும் தமிழ்ச் சொற்களுக்குப் பொருத்தமான சிங்களச் சொற்களின் உச்சரிப்பு முறையை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

22. பத்து .......... 23. இடியப்பம் ..........
24. மாணவன் ..........

(2x3 = 6)

■ கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தெரிந்து அவற்றின் கீழ் கீறிடுக.


25. உலகின் மிக நீளமான நதி எது?
i) ஏன்ஜல் ii) நைல் iii) மகாவலி கங்கை
26. இந்த உயிரினம் மண்ணின் செழிப்பிற்கு உதவுகின்றது.
i) கறையான் ii) மண்புழு iii) கட்டெறும்பு
27. குறித்த ஒருகாலத்தில் மாத்திரம் பூக்கும் பூவொன்று,
i) கோப்பிப்பூ ii) ரோசாப் பூ iii) பப்பாசிப் பூ
28. இலை, பூ இரண்டையும் உணவுக்காகப் பயன்படுத்த முடியுமான மரம் கீழ்வருவனவற்றுள் எது?
i) முருங்கை ii) அகத்தி iii) வாழை மரம்
29. விவசாயிகளுக்கு மிகவும் விருப்பமான பறவையொன்று,
i) கிளி ii) மைனா iii) வீட்டுக் குருவி
30. இலங்கைக்கு அண்மையிலுள்ள ஒரு நாடு பின்வருவனவற்றுள் எது?
i) ஜப்பான் ii) பூட்டான் iii) அவுஸ்திரேலியா
(1x6 = 6)


■ கீழ்வரும் தமிழ் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.

31. பழங்கள் .......... 32. நாடு ..........
33. கரும்பலகை .......... 34. விளையாட்டு மைதானம் ..........
(1x4 = 4)

■ கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

35. பறவைகளுக்கு மட்டும் உரிய (பரம்பரை) குணங்கள் 2 எழுதுக.
i) .......... ii) ..........
36. கீழ்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்ள நாம் செல்ல வேண்டிய இடங்கள் எதுவென எழுதுக.
i) சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கு
..........
ii) காசுக் கட்டளையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு
..........
37. விலங்குகள் மூலம் பரம்பலடையக்கூடிய விதைகள் இரண்டின் பெயர்களை எழுதுக.
i) .......... ii) ..........
38. உலகில் அதிகம் ஏற்படும் இயற்கை அனர்த்தங்கள் இரண்டினை எழுதுக.
..........
39. உயிரினங்கள் அபூர்வ வேலைப்பாடுகளுடன் கூடியவை. அவற்றின் கீழுள்ள வேலைப்பாடுகளைச் சரியாக எழுதுக.





__________ __________

40. மரங்களில் இரவைக் கழிக்கக்கூடிய இரு உயிரினங்களின் பெயர்களை எழுதுக.
..........
41. கீழ்வரும் நிர்மாணப் பணிகளைச் செய்தோர் யாவர்?
i) பராக்கிரம சமுத்திரம் ..........
ii) ருவன்வெலிஷாய தாதுகோபுரம் ..........
42. நுளம்பு விருத்தியடைவதைத் தடுக்கக் கூடிய இரு வழிமுறைகளை எழுதுக.
i) .......... ii) ..........
43.



i) இந்த விளையாட்டின் பெயரை எழுதுக.
..........
ii) இந்த விளையாட்டை விளையாடும்போது ஒருபிரிவில் பங்குபற்றக்கூடிய விளையாட்டு வீரர்கள் எத்தனைபேர்?
..........
(2x3 = 6)

■ கீழ்வரும் வினாக்களுக்குச் சரியான விடை எழுதுக.

44. 'நான் தர்காநகருக்குப் போனேன்' எனும் வாக்கியத்தைப் பன்மை வடிவமாக மாற்றி எழுதுக.
..........
45. இருபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா எது?
..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிரபல்ய சிங்கள வெளியீடுகளின் மொழிபெயர்ப்புடனும் மேலதிக சேர்க்கையுடனும் தயாரிக்கப்பட்ட ஒரு பிரமாண்டமான படைப்பு.

46. 'நீ வாழ்க' - இங்கு இறுதியில் இடவேண்டிய மாத்திரைத் தரிப்பினை எழுதுக.
.......................

47. பால்ச்சோறு என்பதைத் திருத்தமாக எழுதுக. ..........................

(1x4 = 4)

**கீழ்வரும் (சட்டகத்தில்) வரைபில் பழக்கடையொன்றில், நாளொன்றில் விற்பனை செய்யப்பட்ட பழங்கள் பற்றிய விபரம் காட்டப்பட்டுள்ளது. அதனை உதவியாகக் கொண்டு,வினாக்களுக்கு விடை எழுதுக.**




48. அன்றைய தினம் விற்கப்பட்ட வாழைப்பழங்களின் எண்ணிக்கை தோடம்பழங்களின் எண்ணிக்கையில் அரைப்பகுதி யாயின், அதனை வரைபில் காட்டுக.

49. அன்றைய தினம் ஒரே எண்ணிக்கையில் விற்கப்பட்ட பழங்கள் எவை?
.......................................................

50. அன்றைய தினம் கூடுதலாகவும் குறைவாகவும் விற்கப்பட்ட பழங்களின் பெயர்களை எழுதுக.

கூடுதலாக விற்கப்பட்ட பழம் .......................... குறைவாக விற்கப்பட்ட பழம் ..............................

51. அன்றைய தினம் விற்கப்பட்ட பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
..................................................

52. ஒரு அன்னாசிப் பழத்தின் விலை ரூபா 50 ஆயின், அன்றைய தினம் அன்னாசிப்பழங்கள் விற்று எவ்வளவு பணம் பெறப்பட்டிருக்கும்? ..................................................

53. ஒரு தோடம்பழம் விற்பனை செய்தால் ரூபா 8 இலாபம் கிடைக்கும் எனின், அன்று தோடம்பழங்கள் விற்று எவ்வளவு இலாபம் கிடைத்திருக்கும்? ..............................

54. அன்று பப்பாசிப் பழங்கள் விற்று ரூபா 360 பெறப்பட்டது. ஒரு பப்பாசிப் பழம் எத்தனை ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கும்? ..............................

55. அன்னாசிப் பழமொன்றின் அண்ணளவான நிறை 800 கிராம் . அதன்படி விற்கப்பட்ட மொத்த அன்னாசிப்பழங்களினதும் நிறையை கிலோ கிராம் , கிராமில் எழுதுக.

.................... kg .............. g

(2x8 = 16)

எழில்மிகு இலங்கை' எனும் தலைப்பில் எழுவாய், பயனிலை சரியாக அமைந்த நான்கு சொற்களுக்குக் குறையாத 6 வாக்கியங்கள் எழுதுக.

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

இதன் விடைக்குறிப்புக்களும் வினாத்தாள் 06 இன் பகுதி 1 உம் அடுத்தவாரம் வெளிவரும்......

## முன்னோடிப் பரீட்சை 5 - i வினாத்தாளுக்கான விடைக் குறிப்புக்கள்

குறுக்கெழுத்து : (இ-வ) 1. ஆண்டவன் 4. வீடு 5. நண்பன் 6. ஆமை (மே-கீ) 1. ஆடவர் 2. வண்டு 3. கோன்(னன்) 6. ஆடு 7. பசு 10. iii) 11. iv) 12. ii) 13. iii) 14. iii) 15. ii) 16. iii) 17. ii) 18. i) 19. iii) 20. ii) 21. iii) 22. i) 23. iii) 24. iii) 25. i) 26. i) 27. 10 28. 32 29. 2 30. 10 31. iii) 32. ii) 33. i) 34. ii) 35. iii) 36. iv) 37. ii) 38. iii) 39. ii) 40. ii)

நன்றி: ஸத்தர, லக்விந்து, ஜகத்தா, மிஹிர, ஷிஷ்யத்வ.


தொகுப்பாசிரியரும் மொழிபெயர்ப்பாளரும் -

**இஸ்மாயில் எம். பைரூஸ்**

(கொழும்பு)


**அன்பு மாணவர்களே!**

இப்பகுதியில் உள்ள வினாக்கள் தொடர்பாக ஏதாவது சந்தேகங்கள், தெளிவின்மைகள் இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தெரிவித்தால், உரிய ஆசிரியர் மூலம் தெளிவுபடுத்தப்படும். 021-2229933 / 071-6850005 / 071-4273035





யாழ்ப்பாணம் அப்பென்டிஸ் சர்வதேச சிறுவர் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் ஒலிம்பிக் தீபத்தை லயன் டாக்டர் வை.தியாகராசா ஏற்றிவைப்பதையும் சிறுவர்களின் விநோத உடை நிகழ்வையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:லக்ஸ்மன்)







சண்டிலிப்பாயில் இயங்கிவரும் கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் தமிழ்மொழித் தின விழாவும் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் இடபெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தெல்லிப்பழை கோட்டக் கல்விப்பணிப்பாளர் ச.கைலாசநாதன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்துவைப்பதையும் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் ச.வ.தயாநிதி, பாடசாலை முதல்வர் த.மோகனராஜ், முன்னாள் அதிபர் சு.சிவபாதரத்தினம் ஆகியோர் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம். சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தேசிய சேமிப்பு வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் ந.பகீரதன் உரையாற்றுவதையும் மாணவர்களின் கலைநிகழ்வின் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: லிங்கன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org